பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

ஏப்ரல் 2026



## சித்த மருத்துவர் சி.வரதராசன்

நேர்காணல்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – ஏப்ரல் 2026

652

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பான வாசக நெஞ்சங்களே!

நலம்தானா என்று கூட விசாரிக்க முடியாமல், விசனப்படும் மனதுடன் வந்திருக்கிறேன். உலக வானை மறைத்திருக்கும் போர்மேகங்கள் எல்லோரது நெஞ்சங்களையும் கவலையில் ஆழ்த்தியிருக்கும். நாளுக்கு நாள் உக்கிரமடையும் போர்ச்சூழலும், போட்டி போட்டு பறக்கும் ஏவுகணைகளால் ஏற்படும் உயிர்ச்சேதங்களும், சிதையும் வளங்களும், மசகு எண்ணெயின் கட்டுக்கடங்கா விலை அதிகரிப்பும் பதைபதைக்கச் செய்யும் நிகழ்வுகளாகவே உள்ளன. எரிபொருள் விலை அதிகரிப்பின் எதிரொலியாக நிமிடந்தோறும் அதிகரிக்கும் விலைவாசி உயர்வும் இயல்பு வாழ்க்கையை கொஞ்சம் மாற்றிப்போட, இவை எங்கு போய் முடியுமோ என மனம் ஆதங்கப்படுகிறது. வல்லரசு நாடுகளின் நீயா நானா எனும் போட்டி, உலக மக்களின் உயிரைப் பணயம் வைத்து பந்தாடுவதுடன், பொருளாதார சிக்கலை ஏற்படுத்தும் வாழ்க்கைச் செலவின் உயர்வையும் நிர்ணயித்து, மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பங்கம் விளைவிக்கிறதென சொன்னால் அது மிகையில்லை. கற்பாறையான மனங்களில் மனிதநேயம் மீண்டும் தழைத்தோங்கினால் மட்டுமே உலக அமைதி சாத்தியம் என்றான நிலையில், உரியவர்கள் எல்லோரும் இணைந்து இதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

எது எப்படியோ எமது இதழை இம்மாதமும் வெற்றிகரமாக உங்கள் கரங்களில் தவழச் செய்துள்ளேன். வழமை போலவே இதழை அலங்கரிக்கும் படைப்புகளை வாசித்து, உங்கள் கருத்தைப் பகிருங்கள்!

பிறக்கவிருக்கும் சித்திரை மாதம் அனைவருக்கும் சிறப்பாக அமைந்து, சுபீட்சத்தையும் நல்லமைதியையும் தர வாழ்த்துகளுடன் பிரார்த்தனைகள்!

நன்றி!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# மரபுக் கவியா புதுக்கவியா?

ஏடி : ---

.

நண்பா வணக்கம் நலமா; வெகுநேரம்
என்ன எழுதுகிறாய் இவ்வேட்டில் - உன்சிந்தை
நாட்டும் தமிழடியை நானும் படிப்பதற்குன்
ஏட்டைநீ தாயேன் எனக்கு.

.

அமின் : -

.

தோதாகும் நேரத்தில் தோன்றுகின்ற சிந்தனையில்
ஏதாவ தொன்றை எழுதிடுவேன் - காதாற
இந்தக் கவியை இதமாக நீமடுத்துன்
சிந்தனையைச் சொல்லேன் சிரித்து.

.

ஏடி : -

.

மன்றத் தமிழில் மரபெழுது கின்றாயா
பொன்றாத அந்தப் புதுக்கவியா? - என்னவென்று
ஒன்றுமறி யாமல் உடனே படியென்றால்
என்னே படிப்பதோ யான்?

.

அமின் : -

.

படிப்பதற்கு ஏனிந்தப் பாகுபாடு; பாட்டை
வடிப்பதற்கு ஏனாம் வகைகள்; -- நொடியில்
புதுக்கவியோ யாப்போ பொருளிருந்தால் போதும்
எதுவும் கவியே எனக்கு.

.

ஏடி : -

.

யாப்பே அறியாமல் எப்படிப் பாவடிப்பாய்
நாப்பழகி வந்தயிந்த நற்றமிழால் - பூப்போல
நல்ல இலக்கணத்தால் நாம்கோத்தால் தானேஅச்
சொல்லும் பொருளும் சுவை?

.

அமின் : -

.

சொல்லவந்த செய்தி சுவைபடச் சொல்வதற்குப்
பொல்லா மரபா பொலிவுதரும் - இல்லையில்லை
எண்ணத்தை எல்லாம் எழிலாய்ப் புதுக்கவியில்
பண்ணாய் வடித்துப் படி.

.

ஏடி : --

.

சந்தமன்றி பாட்டில் சரியான ஓசையன்றி
எந்த மொழியில் எழுதிடினும் - அந்தக் கவியை
விரும்பமாட்டேன் கண்டு படிக்கச்
செவியுங் கொடுக்கமாட்டேன் ச்சீ.

.

அமின் : -

.

அப்படி என்னதான் ஆதங்கம் அக்கவிமேல்
தப்பென்றால் சொல்லேன் தவறுகளை - இப்பொழுது
யாரெழுதி னாலும் இதைத்தான் விரும்புகிறார்
நீரெழுதிப் பாரேன் நிறைந்து.

.

ஏடி : -

.

இந்த விதத்தில்நான் எப்போதும் பாடலினை
வந்தெழுத மாட்டேன் வரிவரியாய் - சந்தமெனும்
ஓசையிலும் செப்பலெனும்ஓசையிலும்வண்ணமெனும்
ஓசையிலும் பாவடிப்பேன் ஓர்ந்து.

.

அமின் : -

.

எப்படிப் பாவடித்தால் என்ன; பொருள்தன்னை
செப்பும் எழிலே சிறப்பளிக்கும் - தப்பென
உன்போன்ற ஆட்கள் உளறினால் நானிங்கே
என்செய்யக் கூடும் இயம்பு.?

.

ஏடி : -

.

யாப்பென்றால் ஏனோ இழுக்கோடு பார்க்கின்றாய்
வேப்பம் பழமாய் வெறுக்கின்றாய்ப் - பூப்போல்
எதுவடித் தாலும் எழிலோசை தன்னைப்
புதுக்கவியா தாரும் புகல். ?

.

அமின் : -

.

சொல்லவந்த அத்தனையும் சொல்லலாம்; இக்கவியில்
எல்லா கருத்தும் இழைக்கலாம்; - எல்லா
மொழியும் வளையுமிங்கே மோனை எதுகை
ஒழிந்தாலும் பேரெழிலாம் ஓர்.

.

ஏடி : -

.

எதுகையுடன் மோனை இரண்டும் ஒழிந்தால்
புதுக்கவியில் என்னவுண்டு போபோ - மெதுவாய்க்
கருத்துமட்டுஞ் சொல்லிக் கடப்பதற்கா இந்தத்
திருத்தமில்லாப் பாடல் திரட்டு?

.

அமின் : -

.

அன்றுமுதல் பாரதியும் அப்துல் ரகுமானும்
வென்ற புதுக்கவியாம் விண்வரைக்கும் - இன்றுநீ
எங்கிருந்தோ வந்திங்(கு) எழிலே மரபென்றால்
எங்குநான் கேட்ப(து) இதை?

.

ஏடி : -

.

அன்றே இருவரும் ஆண்டார் புதுக்கவியை
என்பதற் காக இதையிங்கே - கொண்டுவந்து
யானும் எழுதுவேன் என்றால்; விழிதிறந்துக்
காணும் கனவிதுவாம் காண்.

.

அமின் : -

.

எல்லாரும் வாசிக்க ஏலாதே அம்மரபின்
சொல்லின் பொருளின் சுவையறியத் - தொல்லுலகில்
கற்றறிந்தோர் மட்டும்தான் கண்டு படிப்பதற்கு
உற்ற புதுக்கவியாம் ஓர்.

.

ஏடி : -

.

உண்மைதான் நண்பா உணர்கின்றேன் ஆனாலும்
பண்ணென்றால் அப்பண்ணில் பைந்தொடைய -
அன்றியிங்கே
ஆர்க்கின்ற சொல்லில் அழகியல் மட்டுமே
ஈர்க்கவில்லை என்னையும் ஏன்?

.

அமின் : -

.

அப்படி என்றால் அவர்களென்ன முட்டாளா
எப்படிச்சொல் கின்றாய் இதைநீயும் - எப்போதும்
கல்லா தவர்க்கும் கவிசேர வேண்டுமெனில்
எல்லாமும் வேண்டுமையா இங்கு.

.

ஏடி : -

.

என்னைநீ மாற்றுதற்கு என்றும் முயலாதே
என்றும் மரபே எனதுகவி - உன்னுடைய
சொற்குறிக்கும் அந்தச் சுவைகொள் கவிபற்றி
நற்கருத்தை ஏற்கின்றேன் நான்.

.

அமின் : -

.

எண்ணெழுத்தைக் கல்லார் எலார்க்கும் படிப்பதற்கு
என்றும் புதுக்கவிதான் என்பேன்நான் - என்றும்நீ
எண்ணத்தால் மாறுவதும் ஏற்கா திருபதும்
உன்னுடைய சொந்த உணர்வு.



# மகளிரைப் போற்றுவோம்

பெண்மையைப் போற்றுவோம் பெருமைக்கொள்வோம்
மெல்லினம் என்று மனிதர்கள் நினைத்தார்கள்
வலிமையின் அடையாளம் வாஞ்சையால் உணர்த்தினாய்
எல்லாமும் நீதான் ஆண்களும் வியப்படைந்தார்கள்
உழைப்பிலும், அறிவிலும், உலகை ஆளுகின்றாய்
பெண்மையே உனது பேராற்றலினை உலகமறிந்திடும்
கடமை ஆற்றுவதில் கண்ணியம் கட்டுப்பாடுண்டு
அஞ்சாமல்  நிமிர்ந்தால் ஆளுமை பெற்றிடுவாய்
குடும்பத்தைத் தாங்கிடுவாய் கண்ணீர் மறைப்பாய்
வாழ்க்கையை அழகாக்கும் வளங்களும் சேர்த்திடுவாய்
அன்புச் சுடரே எந்நாளும் அம்மாவென்றுப் போற்றுவோம்
தடைகளைத் தகர்த்து தவிடுப்பொடி ஆக்கிடுவாய்
வெற்றி நடைபோடு வாழ்வினில் நலங்களுண்டாகட்டும்
இனிய சர்வதேச மகளிர்தின நல்வாழ்த்துகள்

கவிஞர் இரா.சீ.பாலகுமார் .M.A.

# என்ன தவம் செய்தேன்

பிரம்மச்சரிய தவம் களைந்து
கிடைத்த வரம் நீ!

என் உயிரின்
உரு பிம்பம் நீ!

ஒரு பாதி அவள்
மறு பாதி நான்
சரிபாதியாய்
கொண்டிருக்கிறாய் நீ!
எங்கள் இருவர் இணையின்
ஆதி நீ!

தாய் தந்தையை அறிந்து
நாடி வரும் உன்னிடம்
தோற்றுப் போகிறது
நவீன அறிவியலும்!

உன்னைத் தூக்குகையில்
உண்மையில்
குறைந்து போகிறது
மனப் பாரங்கள்!

புரியாத உந்தன் மொழி
சொல்லித் தருகிறது
அன்பின் மொழியை!

என் விரல் பிடித்து
நீ நடக்கையில்
காட்டுகிறாய்
அன்பின் பாதையை!

நீ விளையாடுகையில்
களிப்பில் சேர்ந்து
விளையாடுகிறது
எங்கள் மனங்களும்!

குடிசை கூட
கோபுரமாகிறது
நீ பிறக்கையில்!

நீயில்லாத வீட்டில்
கடவுள் இருந்து
என்ன பயன்?

சொத்தில்லா ஏழைக்கு
உயிர் சொத்தே!
பணத்தை மட்டும்
சேர்க்கும் செல்வந்தருக்கு
நீயில்லாத
வேறேது சொத்து?


உன்னோடு மாற்றிவிடுகிறாய்
எங்களையும்
குழந்தைகளாய்!

என் சதைக்கு
குளிரூட்டும் உன் பார்வை
பின்னாளில்
சிதைக்கு தீ மூட்டுவது
உண்மையில்
யாம் பெற்ற பேறு!

எங்களின் சொர்க்கமே!
உன்னைப் பெற்றெடுக்க
என்ன தவம் செய்தேன்?
புன்னகையாய் பதில் கூறிவிடு!

**சா.கா.பாரதி ராஜா**
செங்கல்பட்டு - 603101.






## பனிக்காலத்தின் காலை வெயில்

**நூலாசிரியர்-**

# சித்தார்த்தன் பாரதி

**x**

**நூல் விமர்சனம் -**

# தயானி தாயுமானவன்

*வீடு திரும்பாமல் ஏதோ காரணங்களால்*
*வேறு ஊர்களில் வேறு தேசங்களில்*
*வேறு பெயர்களில் வாழ்ந்து*
*கொண்டிருப்பவர்கள் துயரவான்கள் .*

**– எஸ்.ரா.**

*கௌதமபுத்தனோ தன் வீட்டைவிட்டு வெளியேறும் நள்ளிரவில் உறங்கும் தன் குழந்தையை முத்தமிடுகிறார். அதுவே அவரின் கடைசி முத்தமாகும். அதன்பிறகு அவர் யாரையும் முத்தமிடவில்லை. முத்தங்கள் யாவும் உறைந்து புன்னகையாகி விட்டன.*

*சித்தார்த்தன் பாரதியின் கவிதை புத்தகத்தை படிக்கும் போது காலத்தின் சுழலிலும் பேரலைகளுக்கும் வெயிலின் வியப்பிலும் இறங்கி வரும் பனியிலும் ஒரு பிறந்தகுழந்தையை தூக்கிச் சுமப்பது போலவே இருந்தது அவரின் கவிதைகள் .*

*கவிஞர்கள் எழுதும் கவிதை நூலில் ஏதேனும் ஒரு பக்கத்தில் புத்தர் புன்னகைப்பார்*

*இவர் நூலிலே எல்லாபக்கங்களிலும் புத்தரின் பேரழகின் மொழி அடர்த்தியாக ஒரு வனத்தின் பாதையில் நடப்பது போல அத்தனை நேர்த்தியாக எழுதப்பட்ட வரிகள் .*

*எல்லா பக்கங்களும் புத்தனுக்காகவே செதுக்கப்பட்ட காலமாக பரிணமித்துள்ளது. எத்தனை நேசிப்பு இருந்தால் நூற்று இருபது பக்கங்கள் சாரமாகியிருக்கும் ?*

*அதிசயமாக உணர்ந்தேன் அகம் சார்ந்த புரிதலும் நிகழ்காலத்தில் வாழும் கலையையும் கற்றுத்தரும் கவிதைகள்.*

*மானுடம் நேற்றைய பொழுதின் வன்மத்தில் இன்றைய நாளை கொலை செய்துவிட்டு நாளை கைதியாகவும் தயங்காத உலகத்தில் இந்தக் கவிதைப் புத்தகம் பேரொளியின் காலை வெயில்*

பனிக்காலத்தின் பின்னிரவில் பொழியும் பனியோடுசில்லிடும்காற்றுஎப்படிஉடலை ஊடுருவுமோ அதுபோல ஆன்மாவின் இழை களால் நெய்யப்பட்ட வரிகள். கடைசியில் மின்னுவது புத்தன்தான் எல்லாமுமாய் நிறைந்திருக்கிறார்.

♦ அகம்புற மென இரு வெளிகளிலும்
நீ ஏற்றிய அறிவெனும் தீபம்
சுடர் விடுகிறது.

எனக்கு நான் மட்டுமல்ல
நீயும் விளக்கு தான்

என்று ஆரம்பிக்கிறது முதல் கவிதை.

எளிய நடையில் மனதில் எண்ண ஓட்டம் நீரோடை போல தெளிந்த பார்வை .

♦ பொய்களை புன்னகைத்து கடக்க வும் மெய்களை கவனித்து இருக்கவும் ஞானத்தின் விதை ஒன்றை நான் விழுங்கக் கொடுத்தாய் வணக்கத்திலோ வழிபாட்டிலோ உன்னை அடைவதில்லை வாழ்வதில் உன்னைக் கண்டடைகிறேன்-- என்ற வரிகள், வாழும் கலையை கற்பித்த ஞானம். அதை கண்டடைந்தவழியை நமக்கும் உணர்த்துகிறார்.

காலத்தை இரசிக்க
மனிதனுக்கு நேரமில்லை.
இயற்கையை நேசித்தால் தான்
நீ உன்னை நேசிக்க முடியும் என்பதை

♦ மஞ்சளாய் வெயில் காய்கிறது சப்தமே இல்லாமல் மழை பெய்கிறது கழனியும் கனிமரங்களும் பூத்துக் குலுங்கு கின்றன ...

வேறான்றும் இல்லை உன் பேரன்பு தான் என முடியும் அந்தக் கவிதை இயற்கையினோடு ஒன்றுதல் புத்தனுக்கு வாய்த்தது உனக்கு வாய்த்ததா? எனில் நேரமில்லை என்பதே நமது பதில்.

♦ எவ்வளவு முயன்றும்
நிகழ் எனும்
மெய்யுரைத்த புத்தரை
புத்தராகாமலேயே
தரிசித்துக் கொண்டிருக்கிறேன் .

என்ற வரிகள்

எப்படி புத்தனாவது என்பதன்
சாவி உங்களிடமே இருக்கிறது .
ஆயுதங்களால் நிரம்பிவழியும்
இரகசிய வியாபரங்களில்
களித்திருக்கிறது
உலகத்தலைவர்களின் மனம்.

கானகத்தில் மூலிகைச்செடிகளை பறிப் பதற்காக பின்னிரவின் வெளிச்சத்தில் காட்டுக்குள் செல்வான். பாம்பு ஊர்வது போல சத்தமில்லாமல் நடந்து போகிறவனாக இருக்கிறான். அவனோடு நானும் சென்றிருக்கிறேன் என்கிறார் எஸ்.ரா.

பறிப்பதற்கு முன்பு அவன் உதடுகள் எதையோ முனுமுணுக்கிறதே என்ன அது? என்று கேட்பார் செடியை நோக்கி விரல்களை நீட்டாதே. செடி ஒடுங்கிவிடும். பிறகு அதை மருந்தாக அரைக்க முடியாது . உனக்கு ஆசையாக இருந்தால் பார்த்துவிட்டு போய்விடு. ‘அழகாக இருக்கிறாயே உன் விரலை ஒடித்தால் எப்படியிருக்கும்?‘ என்று எச்சரிப்பான் என்று எழுதியிருப்பார்

கீரை, காய்கறி, பழங்கள், என
இயற்கையின் பெருங்கருணையல்லவா?
நமது வாழ்வு நமதுசாரம்
நமது ஜீவிதம் .

நாமோ ஓர் இரவுக்குள் ஒரு வனத்தையே அழித்து விட்டு சாலைகளை விரிவுபடுத்துகிறோம். மானுடம் எத்தனை சுயநலமானது.

- வாழ்வெனும் பெருங் கோடையை
  குளிர்விக்கும் நீர்கனி நீ எனக்கு.

- என்ற வரிகளில் குளிர்மையின் முகமாக புத்தனே பேரன்பின் மொழியாகிறான் .

- சொற்கள் புதைந்திருக்கும் உன் அடர் மௌனத்தில் பெருவனம் பூத்து மகிழ்கிறது. என்ற வரிகளில் தொடங்கும் கவிதை ஒரு வனத்தின் உதிர்வும் துளிர்ப்பும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தும் உன் அமைதியை முன்னிறுத்துவதாக எழுதப்பட்ட வரிகளில் சிறகசைக்கிறார் புத்தர் .

- தாழக் கிடக்கிறது
  வாழ்வெனும் பெருங் கொடி
  என்பதில் எத்தனை பாடுகளை
  மறைத்து வைத்திருக்கிறது புன்னகை .

அங்குதான் ஞானம் சுடர்விடுகிறது கவிதையாக.

- வாழ்வெனும் பெருங்கொடி
  உயர உயர
  உயர்ந்து கொண்டே போகிறது
  மகிழ்வைத்துயரை சமமென மதித்து .

எதனால் இந்த பக்குவம் வந்தது?
நிகழ்காலத்தின் உண்மையால் பேரன்
பெனும் கிளைபரப்பியதால்
என்ற கவிதை தான் இந்நூலின் மகுடம் தரித்த கவிதையாக சுடர்விடுகிறான் புத்தன் புன்னகையாலே.

காலத்தை அவதானிப்பது தான் முதல் வேலை.

- கதிர் உதிக்கிறது
  நிலவுகரைகிறது .

ஆம் வெளியெங்கிலும்
நீயே நிறைந்திருக்கிறாய்
கால வெளியின் ஒளியாக.

- மனிதர்கள் மலர
  மனிதர்கள் அடைய
  தேடித் தந்தவன் நீ.

இப்படி மானுடம் தழைக்கவும் நேசம் மலரவும் தீங்கிழைக் காத மனம் மலரவும் புத்தன் இவ்வுலகத்தின் தேடலாகிறான்.

×× நான் பிறந்த நாளென்பது
உன்னைக் கண்டடைந்த நாளில்
இருக்கிறது.

தேடலில் சித்தார்த்தன் பாரதியின் கண்டடைதல் இந்நூலின் தொடக்கமாக.

- நழுவி ஓடைக்குள் விழுந்து ....

..... சூரியனை அடைகிறேன்
அதோடு நின்று விடவில்லை

- இந்த பூமியை
  முழுவதும் அணைத்துக் கொள்ள
  மீண்டும் ஒளியாக
  பூமிக்கும் திரும்புகிறேன்.

என்ற வரிகளில் உலகையே நேசிப்பதென்பது வானம் உனதாகும் போது மட்டுமே நிகழும் அற்புதம்.

அற்ப மனிதர்களோ
அந்த வான்வெளியையும்
போர்க்களமாக மாற்றிய
தந்திரக்காரனாக விட்டானா?
அதோடு
இணைய வழியிலும்

விளையாட்டு என்பது
மறைவதும் ஓடுவதும் சுடுவதும்
இயந்திர விளையாட்டுகளில்
குழந்தைகளின் மனம் கூட
ஹிட்லரின் வெறித்தனத்தை
விளையாட்டில் காட்டுகிற
இந்த காலத்தில்
இது போன்ற சித்தார்த்
தன் பாரதியின் கவிதைப் புத்தகம்

மெய்வழியில் நேசம் காட்டும்
உயிர் வளர்க்கும் என்றே விழைகிறேன்.

♦ தனியே இல்லை நான்
ஜன்னலுக்கு வெளியே நிலவு
என் அறைக்குள் ஒரு புத்தர்.

என்ற வரிகளில் தான் இயற்கை நமது தாய் தனிமை என்பது உலகை தனதாக்கிக் கொண்டவனுக்கு இல்லை.

புத்தனாகி விடும் மாயாஜாலம் நிகழ்ந்த கணம் .

♦ உதிர்தலும் மறைதலும் போலவே
இயல்பாய் மன்னிக்கவும்
மறக்கவும் போதித்தாய்...

என்பது சாதாரண வரிகள் அல்ல. மானுடம் திசைமாறி வாழ இது ஒன்றே வழியாகும்.

♦ புத்தகத்தின்
தலைப்பின் கவிதை பக்கம் -54

உனது உருவிலேயே இருக்கின்றன பெரும் மழைக்கு பின்பான பகலில் பேரித போர்வை ஒன்றை நெய்து தருகிற வெயிலின் கைகள்.

என்ற கவிதையில் நீ மழையாகவும் இருக்கிறாய் அதன்பிறகான குளிருக்கு போர்வை நெய்து தரும் மென்வெயிலின் கைகள். என்பது புத்தனின் கைகளாக மலர்கிறது மென் வெயில்.

கடவுளாவதின் இரகசியத்தை போட்டு டைக்கிறார் கவி கடவுள் பல நிலைகளை கடந்து

♦ கடவுள் என்பது
சித்தார்த்தன் புத்தரானது.

என முடியும் வரிகளில் கூடுபாய்கிறார் கவி.

♦ எப்படி உனக்கு மட்டும் சாத்தியம்
யுத்தங்கள் நிறைந்த பூமியில்
மனிதர்களை அடையும் வழி
அன்பென்பது.

எனவினவுகிறார் வியப்பு மேலிட.

அதன் முத்தாய்ப்பாக அவர் வரிகள்

♦ நின்று கிடப்பதில்ல
துயரோ மகிழ்வோ
வாழ்ந்து கடப்பதே வாழ்க்கை.

என்பது புத்தனின் வாழ்வியல் தந்த பாடம்.

அரசனே
சாதரண மனிதனாகும் போது நாம்
எம் மாத்திரம்?

♦ தன்னைத் தவிர
தனக்கு எதையும்
துணையாக்கிக் கொள்வதில்லை
அறிவு....
....
....
பிறப்பின் வழியே
பெருமைகள் ஏதுமில்லை

# நேற்றிருந்த ஒருவன்

நேற்றிருந்த நினைவுகள்
இன்றிருப்பதில்லை
நேற்று கடந்த நதியும்
இன்று வருவதில்லை


கடந்த காலம் என்றும்
திரும்ப வருவதில்லை
காலம் சென்ற யாரும்
மீண்டு வருவதில்லை

நடந்து முடிந்த எதையும்
மாற்ற முடிவதில்லை
உதிர்ந்த மலர் என்றும்
காம்பைச் சேர்வதில்லை

உடல் பிரிந்த உயிரும்
உள் நுழைவதில்லை
உள்ளம் ஒடிந்த பிறகு
ஊமை நாடகம் தொல்லை

நேற்றிருந்த ஒருவன் இன்று
நம்முன் இல்லை
நிலையாமை உணரச் செய்தல்
உலகம் அதன் பெருமை!


நெல்லை அன்புடன் ஆனந்தி
மிச்சிகன், வட அமெரிக்கா
+17346527592

அறிவின் வழியே
செயல்களின் வழியே
மனிதர்களை அளவிட்டவன் நீ.

என முடியும் கடைசி பக்கக்கவிதை

தம்பி சித்தார்த் தன் பாரதி அவர்களின் இதய விலாசத்தை அறிமுகமாகும் யாவருக்கும் புத்தனின் புன்னகையோடு மிளிர்கிறார்.

ஒரு மலை
வாழ்வின் நிகழ்வில்
கூழாங்கல்லாக ஆற்றின் இரைச்சலில்
அமிழ்ந்து கிடந்து
வற்றியப்பின் நம் கைகளுக்கு தரும்
குளிர்ச்சி மலையினுடையது அல்ல.
ஆற்றினுடைய குளிர்ச்சி யல்லவா?
அதுபோலவே
நமக்குள்ளும்
புத்தன் இருக்கிறான்

என்பதை உணர்த்திய நூல் தம்பி சித்தார்த்தன் பாரதியுடையது. காலம் தனது வெற்றிப்பூ வை சித்தார்த்தன் பாரதியிடம் கையளிக்கும் நாள் வெகு அருகில் .

நாமும் முகமற்ற புத்தனாகிறோம் நூல் வாசிப்பின்போது. இதுவே இந்நூலின் வெற்றி.

வாழ்க தமிழ் வெல்க கவிதை

பதிப்பகம் -
நம் நதி புக்ஸ்
நூல் மதிப்பு -₹150
அழகிய வடிவமைப்பு
அட்டைப் படம் பேரழகு.

பக்கங்கள் கவிதை நேர்த்தியாக அமர்ந் திருக்கிறது அருவியின் சலசலப்பு ஓடையா கும் அமைதி போல புத்தனின் இருப்பு.

தொடர்புக்கு - 9894795383

# தடயங்கள் தண்டனை தரும்



**புல்லாங்குழலன்**

அந்த சிறு நகரத்தின் காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் தன் வெளிப் பணி முடித்து நிலையம் திரும்பி தன் இருக்கைக்குப் போகும் போது ஒரு 38 வயது பெண்மணி தன் இருக்கைக்கு எதிர் நாற்காலியில் அமர்ந்திருப்பதைப் பார்த்தார்..

பரபரப்பாய் எழுந்த அந்தப் பெண்மணி, சார் என் கணவர் நேற்று காலை புறப்பட்டுச் சென்றவர் இது வரை வீடு திரும்ப வில்லை, எனக்கு பயமாக இருக்கிறது,

என்னம்மா, கணவர் எங்கு போனார், ஏன் கலவரப்படுகிறீர்கள்?

என் கணவர் நேற்று காலையில் இங்கிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அணைக்கட்டுக்கு அருகிலுள்ள தன் பார்ம் உறவுசுக்குப் போனார். அவர் எப்போதும் அங்கு ஒரு இரவு தங்கி பணிகள் முடித்து அடுத்த நாள் காலை வீட்டிற்கு திரும்பி விடுவது தான் வழக்கம்.

ஏதாவது கூடுதல் பணிகள் இருந்திருக் கலாம்

அதில்லை சார், அவர் எப்போதும் அங்கிருந்து இரவு எனக்கு போன் செய்து விடுவார். போன் வராததால் நான் அவரை அலைபேசியில் அழைத்தேன். அவருடைய அலைபேசி சுவிட்ச் ஆப் ஆகியிருந்தது.

இன்று மதியம் வரை பலமுறை அழைத்த போதும் அதே பதிலைத் தான் அவருடைய அலைபேசி துப்பியது. அது தான் என் பயத்திற்குக் காரணம். எப்படியாவது அவரைப்பற்றிக் கண்டு பிடித்திடுங்கள் சார் என பாதி அழுகையுடன் கூறினாள் அவள்.

உனது பெயர் என்னம்மா? உனது கணவர் பெயர் என்ன?

சார் எனது பெயர் ராதிகா. கணவர் பெயர் சங்கர். நான் இந்த நகரத்தில் கவுன்சிலராக இருக்கிறேன். எனது கணவர் மெடிக்கல் ஷாப் எங்கள் டவுனில் வைத்துள்ளார். மற்றொரு ஷாப் 10 கிலோ மீட்டரில் உள்ள பதூரில் இருக்கிறது. இரண்டையும் பார்த்துக் கொண்டு, பார்ம் உறவுசையும் பார்த்துக் கொள்வார்.

நானும் மக்கள் தொண்டு செய்வதால் இருவரும் எனது இரண்டு மகன்களும்

---

## ஏதோ ஒரு

நினைவுகளை சுமந்தபடியே
இரவு பொழுதனை கடக்க முயன்றேன்.
பக்கத்தில் படுத்திருந்த
என் மகள் தூக்கத்தில்
சிரித்துக் கொண்டிருந்தாள்..
கடவுள் பேசிக் கொண்டிருக்கிறார் போல..
எனக்காகவும் கொஞ்சம் கடவுளிடம் சொல் என்று
மகளிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறேன்..
என் இரவுகள் மீண்டும் நீள்கிறது.
மகளின் அடுத்த புன்னகைக்காக

**பிரபு வா**

சனி ஞாயிறில் தான் ஒன்றாய் சேர்ந்திருக்க முடிகிறது.

சரி. நீங்கள் பதட்டப் படாதீர்கள், நான் கூடிய சீக்கிரம் அவரைக் கண்டு பிடித்து உங்களை அழைக்கிறேன். அதுவரை பொறுமையாய் இருங்கள்.

சரி என்ற ராதிகா அரை மனதுடன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றாள்.

அடுத்த நாள் பதூர் கிராமத்திலிருந்து காவல் நிலையத்திற்கு ஒரு போன் கால் வந்தது. அதில் பேசிய ஒருவர், ஐயா, டேம் போகும் வழியிலுள்ள வயல்கள் நிறைந்த மண் பாதையில் ஒரு கார் நின்று கொண்டிருப்பதை நானும் சிலரும் பார்த்தோம். அந்தக் காரில் ஒரு மனிதர் உள்ளே இருப்பதையும் பார்த்தோம். ஆனால் அவரை பல முறை கண்ணாடிக் கதவைத் தட்டிப்பார்த்தும் எழுப்ப முடியவில்லை. அவர் வாயில் நுரை தள்ளியிருப்பதைப் பார்த்ததும் தான் உங்களை அழைத்தேன்.

சரி நாங்கள் உடனே வருகிறோம். நீங்கள் அங்கேயே இருங்கள் என்ற காவலர் தன் காவல் ஆய்வாளரிடம் இந்தச் செய்தியைச் சொன்னார்.

காவல் ஆய்வாளரும் இரு காவலர் களுடன் அந்தப் பகுதிக்கு தன் ஜீப்பில் புறப்பட்டார்.

ஜீப் அந்த இடத்தை அடைவதற்கு முன்பே அந்தக் காரும் அதைச் சுற்றி நிற்கும் நான்கு ஐந்து நபர்களும் காட்சிக்குக் கிடைத்தனர்.

காரைச் சுற்றி நின்றிருந்த ஆட்களில் ஒருவர் காவல் ஆய்வாளரை நோக்கி ஓடி வந்தார்.

காவல் ஆய்வாளர் காரினுள் பார்த்த போது அந்த மனிதரின் வாயிலிருந்து நுறை தள்ளியிருப்பதைப் பார்த்தார். ஆய்வாளரின் அனுபவ அறிவின்படி அந்த மனிதர் இறந்து விட்டிருந்தார் என அறிய முடிந்தது.

இவர் யார் என்று தெரிகிறதா என்று தன்னருகே வந்த மனிதரிடம் ஆய்வாளர் கேட்டார்

சார் இவர் இங்கே அருகிலுள்ள ஒரு பார்ம் ஓனர். சங்கர் என்று பெயர். இவர் இங்கு அடிக்கடி வந்து போகிறவர் தான்.

கார்க் கதவுக் கண்ணாடியை உடைத்து அந்த மனிதரை வெளியே கொண்டு வந்தனர் காவலர்கள்.

சார் கீழே கிடக்கும் இந்தப் பாட்டி லில் இருந்த பூச்சி மருந்தை இவர் குடித்திருப்பார் போல் தோன்றுகிறது என்றார் அந்த மனிதர்.

ஆய்வாளர் சுற்றும் முற்றும் பார்த்த போது சற்று தொலைவில் அந்த பாட்டிலின் மூடி கிடப்பது அவர் பார்வைக்கு வந்தது.

அந்த மனிதரின் கால்களில் ஒன்றில் ஒரு செருப்பு கழன்று தூரத்தில் கிடந்தது.

அங்கே ஏதோ ஒரு சண்டை நடந்தது போலிருந்தது. ஆய்வாளர் இது தற்கொலை இல்லை கொலை தான் என்ற முடிவுக்கு வந்திருந்தார்.

இவருக்கு இங்கு யாராவது எதிரிகள் இருக்கின்றனரா?

இல்லை சார். இவர் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பார். இந்த கிராமத்திற்கு ஏதாவது உதவி வேண்டும்

என்றால் சுணக்கமில்லாது தந்துதவுவார். இவருக்கு இந்த நிலைமையா என்று எங்களுக்கு வருத்தம் தான் வருகிறது. பாவம்.

இவர் எங்கிருந்து இவருடைய பார்ம் உறவுசுக்கு வருவார்?

50 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள நகரத்தில் வசிக்கிறார். இவர் இரண்டு மெடிக்கல் ஷாப்கள் வைத்துள்ளார் என்றும் கேள்வி சார்.

நகரத்தின் பெயரையும் அவர் முகவரி யையும் கொடுங்கள் என்ற ஆய்வாளர், அதைப் பெற்றதும் பாரன்சிக் ஆட்களை வரச் சொல்லி அவர்கள் வேலை முடித்ததும் அங்கிருந்து புறப்பட்டார்.

சங்கரின் மெடிக்கல் ஷாப்களை பார்வையிட்டு அங்கு எந்தத் தகவலும் கிடைக்காது முகவரியை மட்டும் வாங்கிக் கொண்டு அவருடைய வீட்டிற்கு காவல் ஆய்வாளர் சென்றார்.

வீட்டில் சங்கரின் மனைவியிடம் சங்கரின் இறப்பு பற்றி பக்குவமாய் தகவல் சொன்னார். மருத்துவமனைக்குக் கொண்டு வந்திருக்கும் அவரது உடலைக் காண ராதிகாவை அழைத்துச் சென்றார்.

சங்கரின் உடலைப் பார்த்ததும் கதறி அழுத ராதிகா, நான் அப்போதே சொன்னேனே, கவலைப் படாதீர்கள், கடனை அடைத்து விடலாம் என்றேனே என்று அழுகையினூடே கதறிய ராதிகா, அதற்காக தற்கொலையா செய்து கொள்வீர் கள் என்றும் கதறினாள்.

தற்கொலை இல்லையம்மா, அது கொலையாக இருக்கலாம் என நான் சந்தேகிக்கிறேன்.

சார் அப்படியென்றால் அவரைக் கொன்ற கொலையாளியை சீக்கிரம் கண்டு பிடியுங்கள் என்று கத்தினாள்.

பொறுமையாய் இருங்கள், இப்போது நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கொடுங்கள். எதையும் மறைக்காதீர்கள்.

பதூர்காரர்கள் சங்கருக்கு அங்கே யாரும் எதிரிகள் இல்லை என்றார்களே, உங்களுக்கு ஏதாவது தெரியுமா?

அங்கே யாரும் இருக்கமாட்டார்கள் என்றே நானும் நினைக்கிறேன்.

அவருடைய அலைபேசி எண் இருக்கி றதா? அதைக் கொடுங்கள்.

சங்கரின் அலைபேசி எண்ணை வாங்கிக் கொண்டு அங்கிருந்து புறப்படும்போது,.

சரி இதைக் கண்டு பிடிக்கிறேன். அவரது பிரேத பரிசோதனை ரிசல்ட் வந்ததும் மேற்கொண்டு விசாரணையைத் தொடங்குவேன். அது வரை நீங்கள் பொறுமையாய் இருங்கள். என்றவர் தன் ஜீப்பில் புறப்பட்டார்.

உடனே மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றவர், பிரேத பரிசோதனை டாக்டரைப் பார்த்தார்.

சார் ரிப்போர்ட் என்ன சொல்கிறது

பூச்சி மருந்து அவருடைய மூச்சுக் குழாயிலும் நிறைந்திருக்கிறது.

ஒரு மனிதர் சாதாரணமாக பூச்சி மருந்து அருந்தினால் அது நேராக தொண்டைக்குழி வழியாகத்தான் செல்லும். யாராவது பலவந்தப்படுத்தி அவருக்கு அதைக் கொடுத்திருந்தால் அந்த

பயத்தாலும் அதைத் தடுக்கும் விதத்தாலும் அது திசை மாறி மூச்சுக் குழாயில் போயிருக்கலாம். அதனால் தான் இந்தச் சாவும் நிகழ்ந்துள்ளது.

நன்றி சார் என்ற காவல் ஆய்வாளர் அங்கிருந்து புறப்பட்டார்.

பாட்டில் மூடி தூரமாய் விழுந்திருப் பதும், ஒரு செருப்பு காணாமல் போயி ருப்பதும் டாக்டர் சொன்னதை உறுதி செய்வதாய் இருப்பதை உணர்ந்த காவல் ஆய்வாளர் சுந்தர் இது கொலை தான் என உறுதியானார்.

அவர் சங்கரின் பெற்றோர் வசிக்கும் வீட்டிற்குச் சென்றார்.

அவர்களுக்குச் செய்தி கிடைத்து துன்பத்துடன் அழுத கண்களோடு இருப் பதைப் பார்த்த சுந்தர்,

சங்கர் உங்களிடம் ஏதாவது விசேஷ மாகச் சொன்னாரா?

பெற்றோரும் அவரது அண்ணனும், சார் கொஞ்ச நாட்களாகவே தன் மனைவி யாரோ ஒருவருடன் கள்ள உறவில் இருப்பாளோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. தன் அலைபேசியை தனியாய் இரவில் எடுத்துப் போய் நீண்ட நேரம் யாருடனோ பேசுகிறாள். ஆனால் எனக்கு அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டு எங்களிடம் சொன்னான். இப்போது எங்களுக்கு அவன் மனைவி மீது தான் சந்தேகம் வருகிறது. சார் நீங்கள் அவளை விசாரியுங்கள் என்றனர்.

காவல் ஆய்வாளர் சுந்தர் தொலை பேசி துறையில் இருக்கும் தன் நண்பர் சத்யராஜிடம் சங்கரின் அலைபேசி எண்ணைக் கூறி. தனக்கு இதன் கால் ரெக் கார்டு ஒரு வாரத்திற்கு வேண்டும் என்றார்.

சத்யராஜ் அதை 10 நிமிடத்தில் அனுப்பியதும் அதை ஆராய்ந்தார்.

அதில் சங்கர் கொலை நடந்த அன்று யார் யாருடன் பேசினார் என்று பார்த்தபோது ஒரு எண்ணில் அதிக முறை பேசியிருப்பது தெரிந்தது.

ராதிகாவின் போன் ரெக்கார்டு பார்த்தபோது அதில் ஒரு எண்ணுடன் அவள் பலமுறை பேசியிருப்பது தெரிந்தது. அது சந்துரு என்கிற ஒரு நபரின் எண். சந்துரு ஒரு பிரைவேட் கம்பெனியில் வேலை பார்ப்பதும் தெரிந்தது.

சரி நட்பாயிருக்குமோ என்று நினைத்தால் கொலை நடந்த அன்று தான் இருவரும் நீண்ட நேரம் பேசியது தெரிந்தது.

அதோடு அதன் இருப்பிடத்தைப் பார்த்தபோது சுந்தர் அசந்து போனார். அது சரியாக கொலை நடந்த இடத்தைக் காட்டியது.

அந்த இரவு ராதிகாவும் சந்துருவும் ஒன்றாய் இருந்ததும் தெரிந்தது.

சந்தேகமில்லாமல் அவர்கள் தான் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் என்பது உறுதியாயிற்று.

சரி அன்று இரவு இவர்கள் மட்டும் தானா என ஆராய்ந்தபோது ரமேஷ் என்ற குற்றப் பின்னணி கொண்டவனும் மற்றும் மணியன், சந்திரன் என்ற நபர்களும் குற்ற வளையத்திற்குள் வந்தனர்.

இதெல்லாம் தெரிந்தும், குற்றம் நடந்ததற்கான ஒரு சரியான எவிடன்ஸ்

வேண்டியிருந்தது.

ராதிகா, சந்துரு, ரமேஷ் மற்றும் இருவர் என ஒரு குழுவாக இந்தக் கொலையில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் சங்கரின் கார் போன்று மற்றொரு காரில் தானே வந்திருக்க வேண்டும் என்று தோன்ற சுந்தர் பதூர் கிராமத்து மனிதர்களிடம் சென்று விசாரித்தார். சங்கரின் கார் எங்களுக்குத் தெரியும். அவருக்குப் பின்னால் ஒரு கருப்புக் கார் வந்தது. அதைப் பற்றி எங்களுக்குத் தெரியாது என்றனர்.

கார் வந்ததற்காக தடயமும் வேண்டுமே என்ற நினைத்த காவல் ஆய்வாளர் சுந்தர் அந்தப் பிரதேசத்தில் சிசிடிவி இல்லாததைக் கண்டார். மண் சாலையைக் கடந்து மெயின் ரோட்டில் ஏதாவது சிசிடிவி இருக்கிறதா என பார்த்தபோது ஒரு சிசிடிவி ஒரு பெட்ரோல் பங்க்கில் இருப்பது தெரிந்தது. அதில் ஒரு வாய்ப்பாக கருப்பு கார் ஒன்று அந்த பெட்ரோல் பங்க்கில் பெட்ரோல் போட்டுக் கொண்டிருப்பதும் தெரிந்தது. அதன் நம்பரைக் குறித்துக் கொண்ட சுந்தர் அது யாருடைய கார் என்று தெரிந்ததும் தெளிவான முகத்துடன் ஒரு பெருமூச்சு விட்டார்.

அது சந்துருவின் கார். கூட்டாமல் கழிக் காமல் பார்த்தாலே தெரிந்தது உண்மை.

சந்துருவிடம் கேள்விகள் கேட்டதில் அவனுடைய பதில்கள் யாவும் பொய்யாய் இருந்தது.

ராதிகாவுக்கு மற்றொரு அலைபேசி இருப்பதும் அதில் அவள் சந்துருவுடன் மட்டும் தான் பேசியிருக்கிறாள் என்பதும் அதன்மூலம் அவர்களுடைய கள்ளக் காதலும் புரிந்தது.

ராதிகாவையும் சந்துருவையும் எதிர் எதிரே உட்கார வைத்து விசாரிக்கத் தொடங்கினார் சுந்தர்.

போன் கால் ரெக்கார்டுகள், லொக்கேஷன் ரெக்கார்டு, கார் நம்பர்., ரமேஷ், மற்றும் இருவர் பற்றிய தகவல், அவர்களுக்காக வங்கியில் எடுத்த பணம் என எல்லாவற்றையும் ராதிகா முன்பு தூக்கிப் போட்டார் சுந்தர்.

அவற்றை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகாவிடம் நீங்களும் சந்துருவும் சேர்ந்து இந்தக் கொலையை அரங்கேற்றியுள்ளீர்கள் என்பது தெளி வாகத் தெரிகிறது. இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்றா கேட்கிறீர்கள், எல்லாவற்றையும் உங்கள் ஆசை நாயகர் சந்துரு தெளிவாகச் சொல்லிவிட்டார்.

இதுவரை தடயங்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகா உடனே பத்ரகாளியாகி சந்துரு உனக்காகத் தானேடா என் சொந்தக் கணவனையே கொலை செய்ய முன்வந்தேன். நீ என்னை இப்படிக் காட்டிக் கொடுத்து விட்டாயே என்று கத்தினாள்.

இப்போது அவர்களுக்கு வேறு வழியில்லை என்பதால், ராதிகா நடந்த அனைத்தையும் ஒப்புக் கொண்டாள். அனைவரும் உண்மையை ஒப்புக் கொண்டனர்.

எல்லோரையும் கைது செய்து கோர்ட் டில் ஆஜர் படுத்தினார் காவல் ஆய்வாளர் சுந்தர். காவல் துறை மேலதிகாரிகள் அவருடைய இந்த வேகத்தையும் புத்தி சாதுர்யத்தையும் வெகுவாகப் பாராட்டினர்.

நூலின் பெயர் :

## உயிரில் கலந்த சொற்கள்

ஆசிரியர் : மீ.யூசுப் ஜாகிர்
வெளியீடு : மௌவல் பதிப்பகம்
வகைமை : கவிதை தொகுப்பு
பக்கங்கள் :142 பக்கங்கள்
விலை : 150 ரூபாய்




கவிதைகள் முழுவதும் நேசத்தில் தோய்த்தொடுத்த மெல்லிய வாசனையை படிக்கிறவர்களின் மனதில் படர விட்டிருக்கிறார் நூலாசிரியர் மீ.யூசுப்ஜாகிர்

இது இவரது முன்றாவது கவிதைத் தொகுப்பு.. மௌவல் பதிப்பக வெளியீடாக வந்திருக்கிற 'உயிரில் கலந்த சொற்கள்' அன்பை ஆதாரமாகக் கொண்டு சிறப்பாக நெய்யப்பட்டிருக்கின்றன.

தன்னைச் சுற்றி நடக்கிற எல்லா நிகழ்வுகளிலும் கவிதை அமர்ந்திருக்கிறது என்பதை உணர்ந்திருக்கும் இவருக்கு பார்ப்பதையெல்லாம் கவிதைகளாக மாற்றும் வித்தை கை வந்திருக்கிறது..

மனிதர்களைகூர்ந்துகவனித்ததால்தான் சாலையின் ஓரத்தில் சடுதியின்றி பூக்கும் ஒற்றைப் பூ வாழ்க்கையை அழகாக்கிற வித்தையைச்சொல்கிறார்.

கருப்பு வெள்ளையில் வாழ்கிற அம்மாக்களின் வாழ்க்கையில் கனவுகள் மட்டுமே வண்ணமயமானதாக இருந்திருக்கின்றனவெனும் வலிக்கிற உண்மையை கவிதையாக்கியிருக்கிறார்.

பயணங்கள், தனிமை, மற்றும் நினைவுகளை பற்றி நிறைய அவதானித்து இருக்கிறது இந்தத் தொகுப்பு..

அப்படி ஒரு கவிதையில்
நினைவுகளை கடலலைகளோடு ஒப்பிட்டு இரண்டுமே ஓய்வதுமில்லை தீர்வதுமில்லை என்று எளிமையான வார்த்தைகளில் யோசிக்கவும் வைக்கிறார்.

சொற்களை சிறு உயிர்களாக உருவகப்படுத்தும் இன்னொரு கவிதை

கோபத்தில்.. கட்டமைத்து வைத்த நேசங்கள் எப்படி வெடித்து சிதறுகின்றன வென காட்சி படிமமாக்கி காட்டுகிறார்.

முக்கியமானவர்களுக்கு நாம் முக்கியமற்றவர்களாக போகிற முரணையும் வலிகளில் வாழ்ந்து வலிகளுக்கு மருந்தாகும் பெண்ணையும் இங்கே தரிசிக்க முடிகிறது..

*அதே முரணை வைத்து வார்த்தைகளுக்கும் மௌனத்திற்கும் சடுகுடு ஆடுகிறது இன்னொரு கவிதை.*

*நேசமே எல்லாவிடத்திலும் விரவியிருந்தாலும் வெவ்வேறு பிம்பங்களாக்கியதில் வெற்றி பெறுகிறார் கவிஞர். வெவ்வேறு பாடுபொருட்களின் எல்லைகளை அடுத்த தொகுப்பில் தொடுவாரென நம்புகிறேன்..*

*நான் ரசித்த சில வரிகள்..*

*பிரியமானவர்களுக்கு*
*ஒப்பனைகள் தேவைப்படுவதில்லை*

*பசியில்லாத போதும்*
*நிறைகிறது காதல்.*

*செல்லப்பெயரை யாரோ*
*அழைக்கிறார்கள்*
*திரும்பி பார்க்கிறேன்*
*பழைய நினைவுகளை..*

*உன் கை விரல் பிடியில் சுருங்கிக் போகும் எனக்கான உலகம்*

*எந்த திசைக்கு பயணித்தாலும்*
*எதிர்பட்டு விடுகிறது*
*உன் நினைவுகள்..*

*வாழ்த்துகள் கவிஞரே.. இதே போல் இன்னும் நிறைய கவிதைத் தொகுப்புக்களை தமிழ் உலகிற்குத் தாருங்கள்*

*கவிதை நூல் பெற தொடர்புக்கு- 7010219221*

**எழுத்தாளர் ச.ஆனந்தகுமார்**

# சுட்ட மாங்காயும், சுடுசோறும்...

அத்தமகனே அழகனே
அன்பான என்னவனே
ஆசைகளை வளர்த்தவனே
ஆனந்தம் தந்தவனே
இதயத்தை மகிழ்வித்தவனே
இருகரம் பற்றியவனே
ஈர்த்திட்ட மன்னவனே
ஈரமானது உள்ளமே
ஒன்ன எண்ணித்தான்
உறங்காமல் நானிருக்கேன்
ஊஞ்சலானது மனசு
ஊதக்காற்றில் நடுங்குது மேனி
எப்போது வருவீரோ
எண்ணத்தில் கலப்பீரோ
ஏங்குது நெஞ்சமே
ஏனிந்த வஞ்சமே
கட்டழகு கண்ணாளா
கட்டியணைக்க வாடா
ஆக்கி வச்சிருக்கேன் உனக்காக
சுட்ட மாங்காயும், சுடுசோறும்...
ருசியா சமச்சிருக்கேன்
ஆறுமுன்னே தின்னுமய்யா
வெரசா வாருமய்யா
பசி தீர சாப்பிடலாம்
ஓம்மேல ஆசையாச்சு
ஒதுங்கித்தான் போகலாமா
பார்வையாலே கவுத்திட்டியே
என்னால மறக்க முடியலியே
சமஞ்சுதான் நாளாச்சு
சஞ்சலத்த தீருமய்யா
நல்ல நாளும் பாருமய்யா
மஞ்சத்தாலி கழுத்துல கட்டுமய்யா
இப்போது இங்கே இருக்கு
சுட்ட மாங்காயும், சுடுசோறும்...
வந்தாக்க சந்தோசமாகும்
சிரிச்சு பேசிட தோதாகும்
ஒறவுக்காரி நாந்தானே
வெசனம் ஏதும் வேணாமய்யா....

பெ.வெங்கட லட்சுமி காந்தன்
விருதுநகர்

# சுதந்திரமே உன் விலை என்ன?

கவிமணி. இரஜகை நிலவன்
முமம்பை

‘என்ன வக்கீல் சார் நம்முடைய விஷயம் எப்படி முடிந்தது?‘ தொலை பேசியில் கேட்டார் முகுந்தன்.

‘ஸாரி சார் என்னாலே ஜட்ஜ் வாயை மூட முடியவில்லை‘ எதிர்முனை.

ஏய்யா மூணு லட்ச ரூபாய் பணம் வாங்கிட்டுத் தானே போனே அப்படியே தூக்கி மூஞ்சியிலே விட்டெறிய வேண்டியது தானே?

நீங்கள் பத்து லட்ச ரூபாய் கொடுத்தாலும் அவர் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையாம்.

என்ன தான் சொல்கிறார் கிருஷ்ணன் சார்.

அவர் உண்மைக்கும் சட்டத்திற்கும் புறம்பாக நடக்க மாட்டாராம். நீங்கள் செய்த கொலையில் புருஷன் மனைவி இருவரும் இறந்து போனதால் கண்டிப்பாக தூக்குத் தண்டனை வாங்கித் தந்தே தீருவாராம்.

நீரும் அதற்கு ஆமாம் சாமி போட்டுக் கொண்டு என்னை தூக்கிலே தொங்கவிட முயற்சி செய்து கொண்டிருக்கிறீராக்கும்.

அய்யோ தலைவா உங்களை அப்படி அனுப்பி விடுவோமா? என்னாலே அவரிடம் பேச முடியவில்லை.

சட்டத்தை நிலை நாட்ட வந்திருக்க அந்த ஜட்ஜை நாம் நாளைக்குச் சந்திக்கிறோம்.

சரி சார்.

நான் நினைத்தால் அவரை வேலை மாற்றம் செய்யவும் முடியும். வேலை யிலிருந்து துரத்தவும் முடியும் என்பதை சொன்னீரா?

எல்லாம் சொல்லிப் பார்த்தேன். மனுஷன் அசைய மறுக்கிறார். ஒரு ஏழைக் குடும்பத்தில் விளையாடி விட்டீர்களாம். ஏழைப் பெண்ணை சூறையாடியதோடு, அதைப் பார்த்துவிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன கணவனையும் கைலாசத்துக்கு அனுப்பி விட்டீர்களாம். இந்த மாதிரி துஷ்டர்கள் இந்தியாவிலே நடமாடக் கூடாது என்கிறார்.

இதெல்லாம் நமக்கு ஒரு ஜுஜுபி. என்னவோ நினைத்துக் கொண்டிருக்கி றானா அந்த ஜட்ஜ். நாளை வேண்டாம். இன்றே நாம் அவரைச் சந்தீக்கிறோம். அவருடைய வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்று பட்டியல் போட்டு வையும். நான் உடனடியாக புறப்பட்டு வருகிறேன்.

சரி தலைவா.

நான்கு கார்களில் வக்கீல் குமாரும் முகுந்தனும் மற்றும் அடியாட்களுமாக, ஜட்ஜ் வீட்டின் முன்னால் வந்து இறங்கினர்.

அடியாட்கள் வெளியில் நின்று

கொள்ள வக்கீலும் முகுந்தனும் உள்ளே வந்தார்கள்.

யோவ் வக்கீல். வீட்டிற்கெல்லாம் என்னைப் பார்க்க வரக்கூடாது என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன் கத்தினார் ஜட்ஜ் கிருஷ்ணன்.

யோவ். ரொம்ப அலட்டிக்காதே. நான் சொன்ன விஷயம் என்னாச்சு? என்றார் முகுந்தன்.

மிஸ்டர் முகுந்தன் உங்களுக்கும் எனக்கும் எந்த் பிரச்சனையும் கிடையாது. கேஸ் விஷயத்தையும் கோர்ட்டில் பேசிக் கொள்ளலாம்.

பெரிய இவன் வந்துட்டான். யோவ் கிருஷ்ணா இப்போது நான் நினைத்தால் இந்த இடத்திலேயே காலி பண்ணி விட்டுப் போக முடியும். ரிவால்வரைக் கையிலெடுத்தார். அய்யய்யோ எதுவும் பண்ணி விடாதீர்கள் தலைவா, அப்புறம் பிரச்சனைகள் வேறு மாதிரி போய் விடும். வக்கீல் குமார் முருந்தனைத் தடுத்தார்.

சுடுங்கள் மூகுந்தன், நான் இறந்து போவதைப் பற்றி எனக்கு கவலையில்லை. நிச்சயம் உண்மையும் நேர்மையும் சட்டமும் நிலைத்து நிற்க வேண்டும். நெஞ்சை நிமிர்த்திக் காட்டினார் ஜட்ஜ் கிருஷ்ணன்.

ஓஹோ சாகவும் துணிந்து விட்டீரோ டேய் இழுத்து வாருங்கள் அவரை என்று கத்தினார் முகுந்தன்.

அவருடைய ஜட்ஜின் இரண்டாவது மகள் சசிகலாவை வாயை அடைத்து அலாக்காக தூக்கி வந்தார்கள்.

‘ஒழுங்காக எனக்குச் சாதகமாக தீர்ப்பு எழுதப் போகிறீரா இல்லைக் காலேஜுக்குப் போகிற உமது பெண்ணை உமது கண் முன்னாலே சின்னா பின்னமாக்கி கொன்று போட்டு விட்டுப் போகட்டுமா என்றார் சசிகலாவின் அருகில் வந்த முகுந்தன் அவருடைய தாவணியைப் பற்றியவாறு.

அப்பா என்று அரற்றினாள் கண்ணீர் விட்ட சசிகலா.

ஓடி வந்து முகுந்தன் காலில் விழுந்த கிருஷ்ணன் என் மகளை ஒன்றும் செய்து விடாதீர்கள் உங்களுக்குச் சாதகமாக தீர்ப்பை எழுதுகிறேன் என்று கதற ஆரம்பித்தார்.

ஒழுங்காகச் சொல்லிக் கேட்டிருந்தால் பணமும் கிடைத்திருக்கும். இப்படி பிரச்சனைகளும் வந்திருக்காது. ஏன் கிருஷ்ணன் என்னை மாதிரி ஆட்களை முறைச்சுக்கிறீங்க. ம்.. நீங்கள் தீர்ப்பு எழுதற வரைக்கும் உங்கள் மகள் எந்த விதக் கஷ்டமும் இல்லாமல் எங்கள் கஷ்டடியில் இருப்பாள் என்றவாறு சசிகலாவைத் தூக்கிக் கொண்டு எல்லோரும் கிளம்ப, அய்யோ அவளை விட்டு விட்டு போங்களேன் என்று அலறியவாறு பின்னாலே ஓடினார் கிருஷ்ணன்.

■



# கலிகால(ன்)ம்!!

புயல்மழையால் வந்தது வெள்ளம்
பெருக்கெடுத்து ஓடுதே துயரம்
காலநிலை தந்தது தீவிரம்
காவு கொண்டதே பெரும் உக்கிரம்

பேயெனப் பெய்தது மழை
சிறுதீவெங்கும் பேரழிவின் சுவடு
வரலாறு காணாத வெள்ளம்
வாழ்வாதாரங்கள் தொலைத்த மனிதம்

தாழமுக்கம் தரணி சூழ
தாரைதாரையாய்ப் பேய்மழை வீழ
தண்ணீர் வெள்ளம் ஊர் நிறைந்தது
தவித்த துயரம் கண்ணீர் வரவழைத்தது

வீடு மனை வாசலற்று
வீதி விடுதிகளிலும் இடமற்று
வெள்ள நீர் வந்து நிரம்பிவிட
விடியலிங்கே கருமை படர்ந்தது

புயலா எமனோ தித்வா?
பேரழிவு பெருஞ்சேதத் துயரோ
கோரத்தாண்டவம் கொண்டதோ
கொடுமை பலப்பல புரிந்து சென்றதே

கொடூரப்பசி குளிர் நடுக்கம்
கோரமாய் மூழ்கி துர்மரணம்
கொட்டிய வெள்ளம் கொடுத்த படிப்பினைகள்
கொந்தளிக்கின்றதே இழந்த உள்ளங்கள்

எத்தனையோ மனித ஜீவன்கள்
மண்ணுலக வாழ்வை நீத்தனர்
விண்ணுலகம் விரைவாய் ஏகினர்
வேதனைகளின் விதைகள் ஆயினர்

வெள்ளத்தில் மூழ்கிய கனவுகள்
விதியினை நோகும் சிதைவுகள்
அழுது அரற்றும் உறவுகள்
ஆற்றிடு இறைவா இழப்பின் கதறல்கள்

ஆறாத துயரம் மீளாத சேதாரம்
வரலாற்றின் பக்கத்தில் மாறாத வடு
அலட்சியத்தின் அவலம் ஆகினர்
அநியாயமாக வாழ்வை இழந்தனர்

விதியென்று விடலாமா?
விடையொன்று காண வேண்டுமே
இனிமேலும் இப்படியொரு
இழிநிலை வேண்டாமே

அனர்த்தங்களின் விபரீதம்
அறியாமையின் பிரதிகூலம்
விழிப்புணர்வு தொலைத்து
வீணாணதே வாழ்வு

மீண்டெழுவோம் நாம்
மீளமைப்போம் நம் தேசம்
கட்டமைப்போம் மனங்கள்
கலிதுடைக்கும் எம் நம்பிக்கை



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# நன்மக்கட் பேறு!



**முனைவர் பா.சக்திவேல்**

ஒரு மனிதன் தன் வாழ்வில் பெற விரும்பும் செல்வங்களில் நன்மக்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள். பதினாறும் பெற்று பெரும்வாழ்வு வாழ்க என்று வாழ்த்துவது தமிழர்களின் மரபாகும். ஆலமரத்தை தாங்கும் விழுதுகள் போல ஒருவரின் புகழ், நன்னெறி, தவம், பெருமை, அறம் ஆகியவற்றை தாங்கிப்பிடிக்க நற்குணமும் குலஒழுக்கமும் சீலமும் அறப்பற்றும் வல்லமையும் கொண்ட அடுத்த தலைமுறை உருவாவதுதான் ஒரு மனிதனுக்கு பெரும்நிம்மதியையும் பேரமைதியையும் கொடுக்கும்.

சான்றாக, தஞ்சை வளநாட்டை ஆண்ட பேரரசன் திருமுறைகளை மீட்டு சைவத்தொண்டாற்றினார், சைவத்தின் நாதனாகிய சிவனுக்கு பெருவுடையார் கோயிலைக் கட்டினார், பல தேசங்களை வென்றார். அவர் தம் மகனார் இராசேந்திர சோழர் கங்கையையும் கடாரத்தையும் வென்றார், கடல் கடந்து தந்தை புகழ் பரவக் காரணமாகி தன் வீரத்தைக் காட்டினார். கங்கை கொண்ட சோழபுரம் கண்டு மாபெரும் கோவிலை அங்கு கட்டினார்.

மக்கட்பேறின் மகத்துவத்தைப் போற்றி தமிழ் இலக்கியங்களில் உள்ள நூல்களில் பல புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். அவற்றுள் சிலவற்றை இக்கட்டுரை வாயிலாகப் பார்ப்போம்.

அறிவுப் பெருக்கிற்காக எவை யெவற்றை யெல்லாம் கற்றறிந்து கொள்ள வேண்டுமோ அவற்றை எல்லாம் முறைப் படி கற்று, அறிந்த நல்ல மக்களைப் பெறுதலையே யாம் பெறுதற் கரிய பேறு எனப்போற்றுவோம். ஏனைய பேறுகளை வியந்து போற்றுவது இல்லை என வள்ளுவப் பெருந்தகை தன் குறட்பாக்க ளில் விளம்புகிறார்.

"பெறுமவற்றுள் யாமறிவது
இல்லை அறிவறிந்த
மக்கட் பேறு அல்லபிற"

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

அழகு பொருந்திய நின் மனைவியின் கருவில் பத்துமாதங்கள் நிறைந்து பின் பேரறிவு நிரம்பியவனாகவும், அன்பு செறிந்த மேன்மை, செம்மை, ஒப்புரவு, வாய்மை, நடுவுநிலை உள்ளிட்ட நற்குணங்கள் ஒருங்கே பெற்றவனாகவும் முறைசெய்து காப்பாற்றும் மன்னர்க்கு வேண்டிய அரசியல், கலைகளை முற்றாக கற்றவனாகிய சிறப்பு மிக்க புதல்வனை நீதான் பெற்றுள்ளாய்! என பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தில் அரிசில்கிழார் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும்பொறையைப் பாடும் செய்யு ளில் குறிப்பிட்டுள்ளார்.

"ஒடுங்கு ஈர் ஓதி ஒண்ணுதல் கருவில்
எண் இயல் முற்றி ஈர் அறிவு புரிந்து,
சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்
காவற்கு அமைந்த அரசு துறை போகிய
வீறு சால் புதல்வன் பெற்றனை இவணர்க்கு"

பெரியோரைக் கண்டவுடன் மரியாதை

யுடன் மென்மையாக வணங்கும் பண்பு, பகைவரைக் கண்டால் வணங்காமல் துணிந்து ஆண்மையுடன் நிற்கும் ஆண் பிள்ளைகளைப் பெற்றதனால் உன்னுடைய குலமுதியவர்களை குறை யின்றி பேணிக்காத்தாய், முன்னோர் களுக்கு செய்யவேண்டிய கடமைகளை செவ்வனே செய்து முடித்தாய் என செல்வக்கடுங்கோ வாழியாதனை கபிலர் பதிற்றுப்பத்தில் பாடுகிறார்.

"வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை
இளந்துணை புதல்வரின் முதியர்ப் பேணி
தொல் கடன் அறுத்த வேல் போர் அண்ணல்"

**என்னய்யா கம்பா**
**எழுத்தாணி ஓலையெல்லாம்**
**இன்னுமா வச்சி**
**எழுதறீங்க? - என்னமாரி**
**செல்போனு வாங்கிட்டா**
**எல்லாம் படிக்கலாம்**
**எல்லாம் எழுதலாம்**
**யா.**

**ஏடி வரதராசன்**



'ஏவா மக்கள் மூவா மருந்து' என கொன்றை வேந்தனில் கூறும் ஒளவையாரின் கூற்று பிள்ளைகள் தயார் நிலையில் இருந்து பெற்றோர்களின் மனக் குறிப்பறிந்து செயலாற்றும் தன்மையை வலியுறுத்துகிறது.

"மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்" என்று நான்மணிக்கடிகை புதல்வர்களின் பெரு மையை மனைவாழ்க்கையில் சுட்டிக் காட்டுகிறது.

"நில்லாத செல்வ நிலையை நினையாமல்
பொல்லாச் செருக்குப் புரிதல்தான் - கல்லாத
புன்மக்கள் பூணும் புலையே புலமுடைய
நன்மக்கள் காணார் நவை" என்று கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் கூறுகிறார்.

"தவறாத சந்தானமும்" என்று அபிராமி அந்தாதியில் பாடி அம்பாளை வேண்டு வர். இது குழந்தைப் பேறு என்று எடுத்துக் கொள்வதைவிட பெற்றோரின் சொற்கேட்டு நடப்பவர்கள் என்று அறிந்து கொள்வதுதான் சாலச் சிறந்த தாக இருக்கும். குலப் பெருமை காப்பவர்கள், தாய் தந்தையின் மனதறிந்து, சொல்லாமல் செயலை செய்து முடிப்பவர்கள், நேர்மைக்காகவும் நடுவு நிலையைக் காப்பாற்றவும் போராடும் போராளிகள், தீமையையும் அறத்திற்கு புறம்பானவைகளையும் இரும்பு நெஞ்சால் எதிர்ப்பவர்கள், பெரியோர்களை மதித்து வணங்கி போற்றுபவர்கள், அவர்களை பேணிக்காப்பவர்கள், குணவான்கள், அன்பையும் அறிவையும் செழித்து வளர்த்தவர்கள், பண்பும், ஆளுமையும் பெற்றவர்கள், உண்மையும் செம்மையும் பெற்ற மக்களை நன்மக்கள் என்று தமிழ் இலக்கியங்கள் அடையாளம் காட்டி நிற்கின்றன.

# உன்னோடு உன்னை மட்டுமே ஒப்பிட்டுப் பார்...

இந்த வாழ்க்கையே விசித்திரமான ஒன்று. அதில் வாழும் நாமும் விசித்திர மானவர்கள் தானே. நம்மை நாம் பார்ப்பதை விட மற்றவர்கள் மீதான நம் பார்வைகள் தானே அதிகம். பிறரின் எழுச்சிகள் கண்டு, மற்றவர் வாழும் வாழ்க்கையைக் கண்டு, பிறரின் ஆடம்பரங்கள் கண்டு நாம், நம் வாழ்வை ஒப்பிட்டுப் பார்கின்றோம். நாம் மட்டும் ஏன் இப்படி இருக்கிறோம், நமக்கு மட்டும் ஏன் நல்லதே நடப்பதில்லையென ஏராள புலம்பல்களை மற்றவர்களோடு ஒப்பிட்டு ஒப்பிட்டு தினமும் புலம்பிக்கொண்டே இருக்கின்றோம். நம்மை நம்மோடு ஒப்பிட்டுப் பார்ப்பதென்பது மிக மிக அரிது. அதுவே பிறரோடு நம்மை ஒப்பிடுவதென்பது மிக மிக அதிகமே.

மற்றவர்கள் அவர்களின் எழுச்சிக்காய் எவ்வாறு உழைத்தார்கள் என்றோ, அவர் கள் சந்தித்த இன்னல்கள் பற்றியோ போராட்டங்கள், தடைகள், வீழ்ச்சிகள் பற்றியோநாம்அறிந்திருக்கவேமாட்டோம்.

ஆனால் அவர்களின் வெளித்தோற்ற வாழ்வைப் பார்த்து நம் வாழ்வை ஒப்பிட்டு நோக்கி பெருமூச்சு விடுகின் றோம். பொறாமை உணர்வோ நம்மை அறியாமலே அவர்கள் மீது ஏற்பட்டும் விடுகின்றன...

அவர்களின் வாழ்வைப் பார்த்துப் பார்த்து ஏக்கப் பெருமூச்சுக்களதை விட்டு நம் நேரங்களதை வீணாக்குவதை விட்டுவிட்டு நாம் எழுச்சி பெற, நாம் நம் வாழ்விலே சிறப்புற்றுத் திகழ வேண்டுமானால் நாம் எப்படி இருந்தோம், இப்போது எப்படி இருக்கின்றோம், நாம் எப்படி இருக்க வேண்டும்? அதற்காய் நம் வாழ்வில் எவற்றை மாற்ற வேண்டும், எப்படியான மாற்றங்களை நம் வாழ்விலே நிகழ்த்துவதென நம்மையும் நம் வாழ்க்கையையும் அலசி ஆராய்ந்து, விட்ட பிழைகள், விட்டுக்கொண்டிருக்கும் பிழைகளை அறிந்து அவற்றைத் திருத்தும் வழிகளை மேற்கொள்ள வேண்டுமானால் நம்மை நம்மோடு தான் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமே தவிர மற்றவரோடு நம் வாழ்வைப் பொருத்திப் பார்த்து கவலைப்படுதல் கூடாது. பிறரோடு நம்மை ஒப்பிடும் போது நம்மை மேம்மடுத்தும் வழிகளைப் பெறுவது கடினம் தான். அதேவேளை நம்மோடு நம்மை ஒப்பிட்டு ஆராயும் போது நம் வாழ்வு சிறக்கும் வழிகளோ ஏராளமாய் நமக்கு கிடைக்கும்.



*பிறரின் எழுச்சிகளை நம் முன்மாதிரியாய் எடுக்கலாமே தவிர, நமக்கு இப்படி நடக்கவில்லையே, நாம் மட்டும் கஷ்டங்களையே அனுபவிக்கின்றோமே, மகிழ்ச்சியே இல்லையென புலம்புதல் கூடாது. அவ்வாறு தொடர்ந்திடும் போது நாம் தான் அழுத்தத்திற்கு உள்ளாகி நம் நலத்தை கெடுப்போமே தவிர நம் வாழ்வில் ஏற்றங்கள் என்பதுவோ இறக்கங்களை நோக்கியே செல்லும்.*

*மனித மனமோ நம்மிடம் இருப்பதில் திருப்தியடைவதை விட நம்மிடம் இல்லாதவற்றின் மீது தானே ஆசைகளும் அவாக்களும் அதிகமாய் கொள்கிறது. நம்மிடம் இருப்பவற்றிற்காய் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். மற்றவர்களின் வாழ்வின் எழுச்சிகள் கண்டு அவர்கள் சிறந்திடவும் பிரார்த்திப்போம். அதற்கு மாற்றமாய் நமக்கு மட்டும் ஏனென்ற கேள்விகளை கேட்டிடாது இருப்பதோடு உன்னை உயர்த்திட, உன் திறமைகளை வளர்த்திட உனக்கான நேரங்களை ஒதுக்கி அதற்காய் உழைத்திடல் வேண்டும்.*

*நமக்கு மேலானவர்களைப் பார்த்தால் அழுத்தங்கள் கூடும். அதே நமக்கு கீழானோர்கள் பக்கம் நம் விழிகளைத் திருப்பி நோக்கினால் எத்தனை அருள்கள் நம்மை சூழ்ந்திருக்கின்றன என்ற உண்மை நம் புத்திக்கு புலப்படும். எனவே, உன்னை உன்னோடு மட்டுமே ஒப்பிட்டு நோக்கு. அப்போதுதான் உனக்கான பாதைகள் கிடைக்கும். அதை மெருகேற்றும் வழிகளை உருவாக்கி உன்னை மேம்படுத்து. உன் வாழ்வும் அழகாய்த் தான் மாறும்...*

**அறூபா அஹ்லா**
*கல்முனை*

# சுமைகளின் சொந்தம்

விழிகளின் உள்ளே
வழிந்தோடமுடியாத வெள்ளம்
அப்படியே நிறைந்து
தத்தளிக்கிறது

கால் விரல்கள்
கசந்து நடக்க
வெறுப்பைத் தெரிவித்து
அப்படியே வீதியோரம்
வேரூன்றிய நிலையில்...

கைவிரல்களை ஒன்றன்
பின் ஒன்றாக
கடித்துக் குதறிக்கொண்டு
விழிகள் அசையாமல்
விறைத்துக் கொண்டன

எங்கோ சிறகடித்துப்
பறந்து கொண்டிருந்த
சிந்தனைச் சிறகுகள்
சிறகொடிந்து தவித்துக்
கொண்டிருக்க அப்படி
என்னதான் நடந்தது

அங்கு ஒன்றுமில்லை
சில சுமைகளுக்கு
ஒதுங்கிக் கொள்ள
இந்த மனதில் தான்
திறந்த வெளி
இருக்கின்றது போலும்...

அதோ அத்தனை விரல்களும்
இந்த முகத்தை நீட்டிச்
சொல்கின்றன
பெற்றுக் கொள்
உன்னால் முடியும் என்று
அத்தோடு அந்த யாப்பு
எழுதப்படாமல் இயல்பூக்கம்
பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டது
மட்டுமன்றி...
அது திறக்கப்படாமலேயே
மூடப்பட்டும் விட்டது...

**சேஹ்ரீ மொஹம்மது பெனாஸிரா,**
முஸ்லிம் ஹல்மில்லாவ,

## வன்னி வண்ணம் வாறதெப்போ?

காட்டுநெல்லி பூத்திருக்கு
காமிரங்காய் காய்த்திருக்கு
வாகைநிழல் காத்திருக்கு - என்
வன்னிவண்ணம் வாறதெப்போ

கொந்துகுழல் முன்சரிய
கொவ்வையிதழ் தேன்சொரிய
சின்னயிடை பின்னலிட - என்
செண்பகம்நீ வாறதெப்போ

வெள்ளிநிலா முன்னரும்ப
வெள்ளைமணல் பாய்விரிக்க
தாமரைப்பூ அடியெடுத்து - என்
தங்கரதம் வாற தெப்போ

திட்டமிட்டு எம்மினத்தை
தீக்கிரைக்குத் தள்ளுகிறார்
அட்டவணை போட்டவரை - நீ
ஆட்டுவிக்க வாறதெப்போ

பதின்மூன்று தேய்ந்ததல்லால்
படும்பாடு போகவில்லை
பொட்டையரின் போக்கதற்கு - நீ
பொத்துவிட வாறதெப்போ

தொல்பொருளின் சின்னமென்று
தோண்டியதைக் காட்சிவைப்பார்
சேதியொன்று சேருமுன்னே
.செந்தளிர்நீ வாறதெப்போ

குருந்தூர் மலையருகே
கொடியேற்றிக் கோலமிட்டார்
கருந்தேள் அதையெரிக்க - நீ
கனலெடுத்து வாறதெப்போ

நெய்தறியோ தவமிருக்கு
நூல்விலையோ அதிகரிப்பு
கூட்டிவிற்கும் கொள்ளயரை - நீ
கொள்ளிவைக்க வாறதெப்போ

மருதமுனை ஹசன்

# ஏதுமில்லை ..

மழைதுளி விட்டு போன ஈரத்தைப்போல
காதோரம் கேட்கும் புகழும் சொற்பொலியை அலட்ட
தேவையில்லை

தீர்ந்து போனதும்
மறந்துபோவதும்
தேர்ந்தெடுக்க தேவையாகும்வேலை
வந்து குவியும் ஒரு நிலையை தவிர்க்க தெரிவதில்லை

இருட்டை உடைத்து வரும் பல்லியின் சிரிப்பில்
என்னசெய்வதென்று தெரியவே இல்லை

நேரத்தை தரட்டுமென நாம் காத்திருக்க
மூக்கறுப்பதைபோலவே தோற்கவே முடியும்..

வருந்தும் விதிர்ப்பை
வெதுவெதுப்பு நீரில்
கழுவினால் கரையாதா என்ன?

கன்னத்தில் படிந்ததை
ஆசுவாசப்படுத்தி அழுது துடைத்த பின்னும்
கண்ணீர் விட்டுபோன தடம் இருக்கையில் …

சோர்ந்த அன்பினை சார்ந்தவையை
என்ன செய்தால் தகர்ந்து போகும் …

வெகுமதிபில்லாததை
நினைத்து விருவிருத்துப் போவதெலாம்
நலக்கேடு நமக்கே என்றாகையில் தூரமாக்கும்
துர்வாடையைபோல தூரமாக்கிடு…

நன்மையானவை நாளடைவு சென்ற பின்னும்
நம்மை விட்டு நகராதவை எனும்போது …

என்ன கவலை?

சஹ்னாஸ் பேகம்
முதலைப்பாளி, புத்தளம்

**கரையேறும் அலைகள்**
**கவிதைத் தொகுப்பு**
**இரஜகை நிலவன்**
**வெளியீடு**
**மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றம்**
**மும்பை**
**முதல் பதிப்பு நவம்பர் 2002**
**பக்கம் 64**
**விலை ரூபாய் 55**




கவிஞர்களது எண்ணங்கள் எப்போதும் சமூகத்தின் நகர்வுகள் மீதான தாக்கத்தை அவதானித்துக்கொண்டே இருக்கும். வாழ்க்கையின் பரபரப்பையும் அதன் வழியே மக்களின் அவசரத்தையும் சமூக அவலங்களையும் அவை மக்களிடையே ஏற்படுத்தும் தாக்கத்தையும் மனிதர் களது சிறுமைகளையும் சீர்கேடுகளையும் அரசியல்வாதிகளின்அக்கிரமப்போக்குகளையும் மக்களை ஏமாற்றும் வஞ்சகத்தையும் சூடாகவும் எள்ளல் தொனியோடும் கண்டனக் குரலிலும் சுட்டிக்காட்டுவது தற்கால கவிதைகளுக்கு உயிரும் உணர்வும் ஊட்டுகிறது. தான் வாழும் சூழலில் தன்னை பாதிக்கும் வாழ்க்கை நிலைமைகளையும் சூழ்நிலைகளையும் மனித இயல்புகளையும் வேதனையோடும் ஏக்கத்தோடும் பதிவு செய்யும் இந்தக் கவிதைகள் வாழ்வில் மனிதன் கற்றுக் கொள்வது என்ன? என்பதையும் மனிதன் மூலம் மற்ற மனிதன் எதையெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும்? என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

**பம்பாய்**

எங்கும் எதிலும்
நிதானம் இல்லாமல்
தேவையில்லாமலும்
தீப்பிடித்த வீட்டிற்குள்
வாழும் மாந்தர் தப்பித்து
ஓடுவதற்கான ஆயத்தங்களோடு
எங்கும் எப்போதும்
எல்லாத் திசைகளிலும்
அவசரம் நிறைந்த நகரமிது.

நான் வாழும் நகரம் எப்படி எல்லாம் அவசரத் தன்மையோடு மனிதர்களை கண்டு கொள்ளாமல் ஓடிக்கொண்டே இருக்கிறது என்பதை இந்த கவிதை குறிப்பிடுகிறது

பிராணவாயு பிச்சை கேட்கிறது

இயற்கையின் சாவகாச மரணம் பச்சை மரங்களின் சாக்காடு கடலை மூடி இன்னும்

**புதிய புதிய கட்டிடங்கள்**

ஓசோன் தாண்டி
சூரியக்கதிர்கள் பிராணவாயுவை
பிச்சை கேட்கிறது.

மனிதர்கள் தங்களது பேராசைக்காக இயற்கையை பாழ்படுத்தி உலகத்தில் அத்தனை வளங்களையும் தனக்கே சொந்தம் என்று கொண்டாடி கொண்ட தன்னலம் பெருகியதால் ஏற்பட்ட விளைவு வெப்ப நிலை உயர்வு பருவநிலை மாறுபாடுகள் என பல்வேறு இடர்பாடுகள் உயிரினங்களைச் சூழ்ந்து கடும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. நமக்கு ஒளியும் வெப்பமும் கொடுக்கும் சூரியனின் கதிர்வீச்சுகள் உயிரினங்களை கடுமையாக தாக்கி பாதிப்பை ஏற்படுத்தும் சூழலுக்கு நமது பேராசை விட்டுச் சென்று இருக்கிறது

**நாங்கள்**

*இதோ நிலவிற்கு*
*விலாசம் சொல்லும்*
*21 ஆம் நூற்றாண்டில்*
*இன்னும் இங்கே*
*கைரேகைகளும் ஜோசியங்களும்*
*பெரு வியாதிக்கு*
*மருந்து தேடி*
*இதயமாற்று சிகிச்சை செய்யும்*
*இந்த விளிம்பில்*
*இன்னும்*
*மந்திரக் கயிறும் மாந்திரீகங்களும்*

ஜெட் விமானத்திற்கு டிக்கெட் விலை கேட்டு அலையும் மக்கள் கூட்டத்திலும் நாளைய உலகைப் பற்றி பிரசங்கிக்கும் கிரகங்களின் நாடி பிடிக்கும் தேச ராசிகளின் முழு பக்க விளம்பரம்

எங்கோ உலகம் போய் செவ்வாயில் கால் வைக்கும் காலத்தில்

நாங்கள் நாள் நட்சத்திரம் பார்த்து காதுகுத்து விழா கொண்டாடுகிறோம்.

உலகம் அறிவியலின் துணை கொண்டு எத்தனையோ கருவிகளை கண்டுபிடித்து வேகமான ஓட்டத்திற்கு உதவி செய்து கொண்டே இருக்கின்றன ஆனால் அறிவியல் பார்வையும் அறிவியல் போக்கையும் மறந்துவிட்டு இன்னும் மூடநம்பிக்கைகளின் பின்னால் மனித குலம் சென்று வருவதை இக்கவிதை சுட்டிக்காட்டுகிறது

**அழகு**

*தொழிலாளர் வர்க்கத்தின் வியர்வை*
*முத்திலும்*
*கூலி வேலை செய்யும்*
*சித்தாளின் வேகமான நடையிலும்*
*பாதையோர ஓவியனின் கைவிரல்*
*நடனமாடும் வேகத்திலும்*
*சுமைதூக்கும் வேலையாளின்*
*கூன் விழுந்த முதுகிலும்*
*நாளைய முடிவிற்கு காத்திருக்கும்*
*முகத்தின் சுருக்க வரிகளிலும்*
*சிரிக்கும் மழலையின்*
*எச்சில் சிதறலிலும் கூட*
*அழகைக் காண்கிறேன்.*

எது அழகு? அழகின் இலக்கணம் என்ன? வெறுமனே புற அழகை பார்த்து மயங்கி விடுவதில்லை அழகின் தன்மை. உழைப்பின் வர்க்கத்தை உறுதி செய்யும் மனநிலையும் காணும் ஒவ்வொரு காட்சியிலும் நம்மை மகிழ்விக்கும் தன்மையிலும் ஒளிந்திருக்கும் அழகை இந்த கவிதை அழகாக படம் பிடிக்கிறது

**எதிர்கொள்வோம்**

*மீனாக நீந்த*
*பறவையாக பறக்க*
*பாம்பாக நெளிய*
*புயலாக சீற*
*தென்றலாக தவழ*
*பூக்களை நேசிக்க*
*முட்களின் வலியுணர*
*தெரிந்து கொள்*

வாழ்க்கையை
நேர்கொள்ளலாம்.

வாழ்க்கை என்பது இன்பங்களால் நிறைந்த பூந்தோட்டம் மட்டுமல்ல துன்பங்கள் நிறைந்த சூழ்ந்த முட்களாலும் வாழ்வை நாம் நகர்த்த வேண்டிய காலம் வரும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவளது பாதைகளுக்குள் ஏற்படும் தடைகளும் இடர்பாடுகளும் அவள் மனதில் நம்பிக்கைகளே அதிலிருந்து மீள்வதற்கு வழி செய்கின்றன மனிதன் எல்லா விதமான உயிரினங்களின் செயல்பாடுகளையும் உணர்ந்து கொண்டு முன்னேறும் போதே அவனது இலக்கு அடைவதற்கு அவையெல்லாம் உதவி செய்கின்றன.

**நாம் இந்தியர்கள்**

வேலியைத் தாண்டி
பயிர்களை மேயும்
உயிரினங்களை நம்மால்
அடித்து விரட்ட முடிந்தது
இருப்பினும் சட்டத்தின்
வேலியைத் தாண்டி
நம்மை சுரண்டி
தங்கள் பையை நிரப்பும்
அரசியல்வாதிகளை
மலர்ந்த முகத்தோடு
எதிர்கொள்ள முடிந்தது
ஏனெனில் நாம்
ஜனநாயகம் கொண்டாடும்
இந்தியர்கள்.

விடுதலை வாங்கி ஆண்டுகள் 75 தாண்டிவிட்டாலும் இன்னும் நம் நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மனிதர்களும் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள் ஒவ்வொரு தனி மனிதனின் பொருளாதார முன்னேற்றமும் ஈடேற முடியாமல் தத்தளிக்கும் சூழலே நிலவுகின்றது. அடிப்படை வசதிகள் இல்லாமல் இத்தனை கோடி பேர் இந்த நாட்டில் இன்னும் அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும் போது நம்மை ஆளும் ஆட்சியாளர்களின் செயல்பாடுகள் மீது நமக்கு கோபமும் எரிச்சலும் வருவதை மறைப்பதற்கில்லை.

நேசம்

மரங்களை மலைகளை நேசிக்கிறீர்கள்
மலர்களை
மலையில் இருந்து விழும்
அருவிகளை ரசிக்கிறீர்கள்.
------------
பூனைக்குட்டியை
நாயையும்
நேசிக்கிறீர்கள்
அழகுமிகு சோலைகளை
மழைச்சாரலையும் ரசிக்கிறீர்கள்
மானிட இதயத்தை
மானிடத்தை
ரசிக்கவும் நேசிக்கவும்
ஏன் மறந்து போனீர்கள்?

மனிதர்கள் வளர்ப்புப் பிராணிகளின் மீது காட்டும் நேசத்தையும் பாசத்தையும் அன்பையும் கருணையும் தன்னைச் சுற்றி உயிர் வாழும் பிற மனிதர்கள் மீது காட்டினால் எவ்வளவோ முன்னேற்றங்களும் சமூக ஏற்றத்தாழ்வுகள் நீங்கி சமத்துவம் எளிதில் பிறந்த விடும் என்ற பெருங்கனவை இந்த கவிதை வெளிப்படுத்துகிறது..

**தொடுகை**

சிறப்பாக குடும்பம் நடக்கும்
சிறியதாய் பெரியதாய்
பிணக்குகளோடு.
நேற்றைய உரசல்களும்
நாளைய கனவுகளும்
அழிந்து போனதால்

அடிக்கடி சொல்லி
சலிக்க வைப்பாள் மனையாள்.
எப்போது பெரியவளாகி
செலவு வைக்கப் போகிறாளோ
என மனபயம்
எழுப்பி விட்டுப் போகும்
பெண் பிள்ளை.
தன் வாகனத்திற்கும்
கல்விச்சாலை பயணத்திற்கும்
எப்போது அம்மா வழியாக
தூது விடுவான் நாளைய வாரிசு.
அவசரமாக பணிக்கு
ஓடும் போது
அடிவயிற்றில் கத்திக்குத்துகளாய்.

தன் குடும்பத்தை நேசித்து தனக்காக தன்னைத் தொடரும் தன் வாரிசுகளுக்காகவும் தன் மனைவிக்காகவும் ஓடி உழைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆண்களுக்கும் இந்த கவிதை சாலச் சிறந்த பொருத்தமாக அமைகிறது. குடும்பத்தின் ஆணிவேராக உழைப்பைச் சுமந்து கொண்டு திரியும் ஒவ்வொரு தந்தைக்கும் தினமும் வாழ்வில் ஏற்படும் இடர்பாடுகளையும் தன்னை நம்பி இருக்கும் தன் குடும்பத்தினரை காப்பாற்ற அவர்கள் ஓடும் ஓட்டத்தையும் இந்த கவிதை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

அரசியல் சமூகம் பொருளாதாரம் இல்லற அரசியல் இயற்கை நேசம் சாதியின் தாக்கம் மூட நம்பிக்கைகளின் தாக்கம் என் நம்மைச் சுற்றி தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் வாழ்வியல் செயல்பாடுகளை தனக்கே உரிய கவிதை மொழியில் ரௌத்ரம் பழக்க எழுதியிருக்கும் இந்தக் கவிதைகள் நமக்குள் நல்ல சிந்தனை அலைகளை கரையேற்றிவிடுகிறது.

இளையவன் சிவா

# என் காதல் நீ தானே...!

எனக்குள் நீ, உனக்குள் நான்
இரண்டறக் கலந்தோம்
இல்லற வாழ்வில் இனிதாய்......!!!
எனக்கு ஆடை நீ
உனக்கு ஆடை நான்
நமக்காடை நாம்.....!!!
அன்பான கொழுநன்
அழகான கணவன்
அமைதியின் அடைக்கலம்
அவனுக்கே உரித்து
அவன் என் காதல் தீபம்.....!!!
அன்று நீ தந்த பூவில்
என்றும் மலர்ந்தது இருவர்
முகமும்........!!!
வீட்டுக் கண்ணாடியை
வெறுக்கத் தொடங்கினேன்
உன் கண்களில்
எனைக் கண்டதிலிருந்து.......!!!
நான் உறக்கம், நீ கனவு
உன் வரவுக்காகவே
உறங்கினேன் அப்போது........!!!
என் இதயத்தில்
யாரும் குடியேற முடியாதபடி
இடம் பிடித்தாய் இறுக்கமாக..........!!!
இறைவன் எமக்களித்த கொடை
இருவரும் கரம் பற்றிய
இன்பமான வாழ்க்கை....!!!

ரிஃப்கா அன்ஸார்



# மனம் ஏங்குகிறது!

என் வீட்டிற்கு மிக மிக
அருகில் தான் இருக்கிறது
அண்ணாச்சி கடை

என் வீட்டிற்கு மிகவும்
அருகில் தான் தனியார்
மருத்துவனை...

மிக மிக அருகில் தான்
பேருந்து வசதியும்
பேருந்து நிலையமும்

நடந்து செல்ல கூடிய
தூரத்தில் தான் பள்ளிக்கூடம்

சிறிது நேர பயணதூரத்தில் தான்
கல்லூரிகளும் உள்ளது

இரண்டு வீதிகளுக்கு
இடையில் தான் இருக்கிறது
வாகன பழுது பார்ப்பகம்

மூன்றாம் வீதியில் தான்
பணி செய்யும் அலுவலகம்

ஐந்து வீதிகள் கடந்தால்
நியாய விலை கடை

வாகனத்தை இயக்கினால்
பத்தே நிமிடத்தில்
நட்சத்திர விடுதி

அடுத்த ஐந்து நிமிடத்தில்
பிரம்மாண்ட திரையரங்கு

அலைபேசியிலேயே
மின்கட்டண வரியும்
அலைபேசிக்கான கட்டணமும்
கட்டி விடுகிறேன்

எல்லா வற்றிக்கும் மேலாக
தந்தையின் முப்பது ஆண்டு
உழைப்புக்கு பின்னால்
பிழைக்க வந்த ஊரில்
இன்று சொந்தமாய் ஒரு வீடு

இருந்தாலும் ஏதோ ஒன்றாய்
என் மனது தினமும்
வருடியபடியே இருக்கிறது
எங்கள் ஊர்

எங்கள் ஊரில் பெரிதாக
பேருந்து வசதியே கிடையாது

மருத்துவம் பார்க்க கூட
பேருந்தோ அல்லது

தனி வாகனமோ எடுத்துதான்
செல்ல வேண்டி இருக்கும்

இரவுகளில் தெருக்கள் எல்லாம்
கருமையில் உறங்கும்

சில வீடுகளில்
மின் விளக்குகளே
இருக்காது...

ஒரே அடுப்பில் தான்
30 பேருக்கு சாப்பாடு
செய்யப்படும்

வாரம் ஒரு முறை
பொரியும் கடலையும்
தீன்பண்டமாக வரும்

அங்கே கணினிகள் இல்லை
காற்றாலைகள் இல்லை
கைபேசிக்கு சிக்னலும் இல்லை

சேவலும் காக்கையும்
அதிகாலையை எழுப்பி விடும்

பள்ளிக்கும் பத்து
கல்லூரிக்கு முப்பதும்
என மைல் கணக்கில்
நடந்து செல்ல வேண்டும்

எல்லாவற்றிக்கும் மேலாக
சொந்தமாய் இரண்டு
குடிசையை தவிற வேறு
எதுவும் இல்லை எங்களுக்கு

ஊருக்கு நடுவில்
ஒரே ஒரு தேனீர் கடை

ஐந்து ஊர்களுக்கு
ஒரு நியாய விலைக்கடை,

இன்றைக்கு சில வீடுகளில்
வண்ணத் தொலைக்காட்சி

இவ்வளவுதான் எங்கள் ஊர்

இருந்தாலும் இங்கு வந்து
நிறந்தரமாக வாழ்ந்திடவே
மனம் ஏங்குகிறது!
அதற்காகவே உழைத்து உழைத்து
ஓடாய் தேய்கிறோம்
எல்லாம் இருக்கும் இந்த பட்டணத்தில்

கவிஞர்
மீன்கொடி பாண்டிய ராஜ்



# அனைவரும் சமம்



**- முனைவர் பா.சக்திவேல்**

உலகம் தோன்றிய முதல் தோன்றிய உயிர்கள் அனைத்தும் இவ்வுலகில் வாழ, இவ்வுலகத்தில் படைக்கப்பட்டுள்ள வளங்களை தேவைக்குப் பயன்படுத்த சம உரிமை பெற்றவை. இவற்றை தாழ்த்தி உயர்த்தி சொல்லல் பாவம் என்பதை உலகம் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து வருவது ஆறுதல் அளிக்கிறது.

‘அனைவரும் சமம்‘ என்ற சமத்துவம் பழம்பெரும் அகண்ட பாரதத்தில் புதிதாகப் பேசப்படும் விடயம் அல்ல. அது தொன்று தொட்டு பல சான்றோர்களால், புலவர்களால், நல்லிணக்கவாதிகளால், ஆன்மிக நேயர்களால் வலியுறுத்தப்பட்டுக் கொண்டே வருகிறது.

பகுத்துண்டு பல்லுயிர்த் தன்மையைக் காக்க உரைத்த வள்ளுவரும், யாவரும் கேளிர்! ஒருமைப்பாட்டைக் கேளீர் எனக் கருத்தளித்த கணியன் பூங்குன்றனாரும், ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்திட விழைந்த வள்ளலாரும் பிறந்த பெருமை சார்ந்த இம்மண்ணில் இனியும் இனம், சாதி, நிற வேறுபாடுகள் அங்கொன்றும் இங்கொன்றும் நிகழா வண்ணம் எண்ணத்தில் ஒற்றுமை வளர்ப்பது இன்றைய தலைமுறையின் தலையாயக் கடமை.

எழுபிறப்பிலும் சிறப்புள்ளதாக நாம் கருதிக் கொள்ளும் மனிதப் பிறப்பின் மகத்துவத்தை, உயிர்ப்பட்டியலின் அறிவுவகைப்பாட்டில் “ஆறறிவதுவே அதனோடு மனனே!” என சிந்திக்கும் மனம் உள்ள மாந்தர்களை தொல்காப்பியர் குறிப்பிடுவதாகக் காண்கிறோம். இந்த சிந்தனை வளம் மற்ற உயிர்களுக்கும் அன்பு செய்யத்தானே தவிர ஊறு செய்ய அல்ல! என்பதை உணர்ந்து அன்பின் வழியில் உயிர்நிலை எய்தும்பொது உயர்நிலை அடைவது திண்ணம்.

நூல் பல ஆய்ந்து, தெளிந்து கற்றுரைத்த வள்ளுவரும் “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்” என பிறப்பால் அனைவரும் சமம் என்று உலகோர்க்கு அறிவித்துவிட்டார்.

□முழுதும் இகழப்படுபவரும் முழுதும் புகழப்படுபவரும் அன்றும் இல்லை; இன்றும் இல்லை; என்றும் இல்லை□ என ஞானத்தால் தெளிந்த புத்தர் தன்னுடைய தம்மபதத்தில் விளம்புகிறார்.

என்பத்து நான்கு லட்ச பிறப்பு வகை களிலும் இறைவன் உறைந்து வாழ்கிறான் என பூவுலகின் உயிர்கள் அனைத்தும் சமம் என்று வியந்துரைக்கிறார் திரு ஞானசம்பந்தர். “உறை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம் நிறை சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கேநின்றான்”.

தூய்மையை துணியாகவும் திருநீற்றை அணியாகவும் அணிந்து, தொண்டு நெறி பரப்பி, தீந்தமிழ் தாண்டகத்தால் செம்மையான சிவன் புகழ் பாடிய திருநாவுக்கரசரும் “சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும்

குலமும் கொண்டு என் செய்வீர்?" என்று மேட்டுக்குடி மக்களை விளித்து வினா எழுப்புகிறார்?

"பலவுருவந் தன்னுருவே யாய பெருமான்" "தாயுந்தந்தை பல்லுயிர்க்குந் தாமே யாய தலைவன்" என்று உயிர்கள் அனைத்திற்கும் இறைவன் ஒருவனே தலைவனாக இருக்கிறான் என உயிர் களின் ஒற்றுமையை செந்தமிழ்த் திருப் பாட்டின் மூலம் கயிலை அணைந்த பெரும்பேறுபெற்ற சுந்தரமூர்த்தி சுவாமி கள் உரைக்கிறார்.

"சாதி குலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி" என ஞானத்தின் திருஉருவாகத் திகழ்ந்த மணிவாசகரும் சமூக அவலங்களை திருவாசகத்தில் சாடியுள்ளார்.

"என்னை நன்றாக இறைவன் படைத் தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு" என்று உதித்த திருமூலரும் "ஒன்றே குலம்" என்று ஓங்கி ஒலித்தார்.

"குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின், குன்று சூழ்வான் மகனொடும், அறுவர் ஆனோம்; எம்முழை அன்பின் வந்த அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்" என கம்பர், தான் கண்ட ராம காதையில் அவதார நாயகராக விளங்கிய இராமச்சந்திரர் அனைத்து மக்களையும் குலவேற்றுமை பாராமல் சகோதரர்களாக ஏற்ற பெரும்பண்பினை, ஏனையோர்க்கு எடுத்துக்காட்டாக்கியிருக்கிறார்.

இறை சிந்தனையில் அழுந்தி சமூக அக்கறையில் எழுந்து நாளும் நற்செயல்கள் புரிந்ததன் மூலம் இறைவன் அடி சேர்ந்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் பல்வேறு குலத்தில் பிறந்தவர்கள் எனினும் தான் கொண்ட தியாகத்தால், அன்பால், கொள்கையால் உறைப்புடன் நின்றவர்கள்.

மூடக்கட்டுகளில் முடங்கிக் கிடந்த வழக்கங்களையும் பழக்கங்களையும் தனது அப்பழுக்கற்ற புரட்சிகரமான பாடல்களாலும் தனது எண்ணங்களாலும் சிந்தனையாலும் சிதறடித்தார் சிவவாக்கிய சித்தர் 'சாதியாவது ஏதடா சலம் திரண்ட நீரலோ, பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ, காதில்வாளி காரைகம்பி பாடகம் பொன் ஒன்றலோ, சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே!".

"ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை சாதியில்

இழிவுகொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே" என்று அடிமையற்ற இந்தியாவின் பரந்த எல்லையை பறைசாற்றுகிறார் மகாகவி பாரதியார்.

மனிதர்கள் மட்டுமல்ல புவியில் பிறந்த அனைத்து உயிர்களும் சமம் என்று சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவு பெற்ற, பெருமைக்குரிய மக்க ளாக நம் பாரத நாட்டின் அறிஞர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது போற்று தற்குரியது. அப்படிப்பட்ட பாராட்டிற் குறிய, நாகரிகம் செறிந்த நாட்டில் நாமும் அவ்வழி வாழ முயலுதல் வேண்டும்.

நாம் இன்று காணும் சாதி. குலபேதங்கள் இடைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை என்பது பண்டைய பாரதத்தின் வரலாற்று ஆய்வாளர்களின் கூற்று மூலம் தெரிகிறது. அவரவர் புரிந்த தொழில் அடிப்படையில் பெயர்கள் இருந்திருக்கிறதே தவிர அதை வைத்து சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கும் நோக்கம் இருத்ததாகத் தெரியவில்லை.

பிறப்பால் ஏற்படுத்தப்பட்ட தாக்குதல்களுக்கும் அடக்குமுறைக்கும் அடிபணிந்த விளிம்பு நிலை மக்களின் அடிப்படை உரிமைக்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட இன்றியமையாத் தேவைகளில் ஏற்றத் தாழ்வுகள் கூடாது என்பதற்காகவும், ஏழ்மை நிலையால் அடிப்படைத் தேவைகள் நிறை வேற்றப் படாமல் இருக்கக் கூடாது என்பதற்காகவும் சமூகத்தில் சமநிலை நிலவ வேண்டும் என்பதற்காகவுமே இட ஒதுக்கீடு மற்றும் சில சலுகைத்திட்டங்கள் அரசால் செயல் படுத்தப் பட்டு வருகிறது. இது உண்மையில் பாதிக்கப்பட்டவர்களை, உதவி வேண்டுவோர்களை சென்றடையும் போது, முறையாகப் பயன்பட்டதாக அரசால் உணரப்படுகிறது. இவற்றை குறுகிய நோக்கத்தோடும், சுயநலத்தோடும், முறை தவறி அனுபவிக்க நினைக்கும் எண்ணம் கொண்டவர்கள் தாமாக அவ்வெண்ணத்தை விட்டொழித்து வாழு! வாழ விடு! என்ற கொள்கையோடு விளங்க வேண்டும், அப்போது சமரசம் உலாவும் இடமாக இத்தேசம் மறுமலர்ச்சி பெறும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கணியன் பூங்குன்றனார் உரைத்தபடி ‘மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே‘ எவருக்கும் பணிந்தோ, எவரையும் பலன் வேண்டி புகழ்ந்தோ, எவர் தொழில் குறித்து இகழ்ந்தோ வாழும் பழக்கம் இல்லாமல் அவரவர் வாழ்வை அவரவர் எவர்க்கும் அஞ்சாமல் அறவழி வாழ்தலே தமிழ் மரபு கூறும் பண்பாடு என்று எல்லோரும் அறிதல் நலம் பயக்கும்.

■

## 1. தன்னைத் தேடும் கடவுள்...

இருளுக்குள் தொலைந்துவிட்ட
மிருகத்தைத் தேடி அலைந்து
வெளிச்சத்தில் வைத்தது கடவுள்.
தொலைக்க வேண்டி
தவம் கிடந்தோர்
கடவுளை வினவ
உள்ளே மிருகம் இல்லாத போது
என்னைக் கண்டு கொள்ளாது
எல்லோரும் கடவுளாகிடுவீரே
என்ற பயத்தின் பாதைக்குள்
கடவுளின் தேவை
மிருகத்தின் இருப்பில் ஒளிந்திருக்க
தனக்குள் தானே
தேடிக்கொண்டிருக்கும்
மனிதனிடம்
தத்தித் தத்தியே
நுழையப் பார்க்கிறார்
மனிதனால் பெயரிடப்பட்ட கடவுள்.

## 2. சொர்க்கத்தில் இருந்து அம்மா..

முறைவைத்து
மாதமொன்றென
மகன்களின் வீட்டுக்குள்
நுழையும் அப்பாவிற்கு
மறந்து போனது
பேச்சின் அவசியம்.
பேரனுக்கும் பேத்திகளுக்கும்
யானையாகி நடப்பவரின் மனதுக்குள்
அவ்வப்போது விழுகின்றன
மகன்களின் அங்குசக் குத்துகள்.
எப்போதாவது தட்டில் விழும்
சோற்றுப் பருக்கைகளில்
ஒன்றிரண்டை
ஒதுக்கி வைக்கிறார்
இப்போதும் அம்மாவுக்காக.


## 3. கலப்பை பிடிக்கும் கணினிக்காரனுக்கு...

கணினியை மேய்பவனுக்கு
கலப்பை பிடிக்க ஆசை.
காடுகளும் தரிசுகளும்
பாய்கின்ற நீரின்றி
பாலையென மாறிப்போன
பட்டிக்காட்டிலும்
இன்னும் ஏர்பிடித்து
உழவை மறக்காத
கோவணாண்டிகள் இருக்கையிலே
சொகுசுக்குள் தனை நுழைத்து
குளிர் வசதியில் மேனி வளர்த்து
இருப்பை ஆராயும்
இலட்சங்களில் புரள்பவன்
மேசையைத் துடைத்து விட்டு
மேனியை அழகாக்கி
கழனியில் இறங்குகிறான்.
காளைகள் தரும் வரவேற்பே
மனதுக்குள் பீதி தர
கார் பிடித்த கைகளுக்கு
ஏர் பிடிக்கத் தெரியாமல்
இழுத்த காளைகளின் வேகத்தில்
மண்ணைக் கீறாமல்
பாதத்தை பதம் பார்த்தது கலப்பை.
மேனியின் ரத்தமெலாம் வியர்வையென
உழைத்திட்ட தகப்பனின் இருப்பை
அடையாளம் காட்டியபடி
மண்ணோடு கலந்ததவன் குருதி.
உண்பவையும் உடுப்பவையும்
கடைகளில் கிடைக்கும் என்ற
பொதுப்புத்திக்குள்
வளரும் குழந்தையைப் போல
மண்ணெது நீரெதுவென
களையெது விதையெதுவென
நாற்றெது தூற்றெதுவென
ஏடுகளில் படித்தவையெலாம்
கண்முன்னே குழம்பி நிற்க
கழனிக்குள் கிடக்கிறான்
கணினியைக் காதலித்தவன்.

## 4. நகரா நகரத்தில் நாமும்...

நகராத சுவரெங்கும்
நாளையே நகரக்கூடும்
நம்பிக்கையின்மைக்குள்
வருக வருக அழைப்பிதழ்கள்
காட்டி நிற்கின்றன
பளபளப்பின் ஆடம்பரங்கள்.
நகரும் வாகனங்களுக்கு ஊர்ந்துவரும்
கலை பயில கையுயர்த்தி
கம்பீர நடை பயின்றபடி
மாலை தாங்க முடியாத கழுத்திலும்
தங்கம் நிறைத்து
சாலைகளின் ஓரங்களில்
வானுயரப் பதாகைகள்.
சிறுபரப்பு கிடைப்பினும்
அழகுக்கு இலக்கணம் எழுதி
ஆண்மை பெருக்கும்
அலைபேசி எண்களை விசிறியபடி
அச்சிட்ட விளம்பரங்கள்.
நாய்களும் குழிகளும்
ஓய்வெடுக்கும் நெகிழிகளின்
வலைப்பின்னலில்
வீசும் காற்றும் வெக்கையாகி
சாலைகளை சூறாவளியாக்கி
காணுமிடமெங்கும்
வாகன நெரிசல்கள்.
நகரத் தூய்மைக்கென
நாளும் அயராதுழைத்திடும்
திட்டங்களின் பட்டியலோடு
கடந்து போகிறது
ஒலிப்பெருக்கி அறிவிப்புகள்.

**இளையவன் சிவா**



# தென்றலின் கிறுக்கல்கள்



□

பாப்பாட்டி போட்டு ருக்கா பளபளனு
கேப்பாளே புத்தாடை கேட்டவள்-ஏப்பா
எனக்குப்பா இத்தோட இன்னுமொன்று என்பாள்
தனக்கு விதவிதமாய்த் தாம்

□

சின்ன வயசு சிருங்காரி சேலாடும்
கண்ணழகி காந்தமாக ஈர்க்கின்றாள்- மின்னலாக
ஓடிடுவாள் ஓயாது பேசிடுவாள் என்னவளும்
பாடசிந்தும் வெண்முத்தம் பார்

□

திரும்பிடுவாய் கண்ணேயென் தித்திக்கும் பொன்னே
அரும்பு மலராய் அழகாய்-விரும்புகின்ற
நேரம் கவனமாக நீயிருக்க வேண்டுமம்மா
வீரப்பெண் தானே விளம்பு

□

ன்ன விழிக்கின்றாய்? ஏனோ அமர்ந்துள்ளாய்?
கன்னி மனத்தில் கலக்கமென்ன?-இன்னுமா
தேர்வை எழுதத் தெளிவு பிறக்கவில்லை
பேர்பெற நிற்பாளா? பெண்




□

வண்ண உடையுடுத்தி வாடையில் வந்தவளே
கன்னம் சிவந்த கனிமொழி-மென்மையாகப்
பேசடி பெண்ணே பிறக்கட்டும் காலங்கள்
நேசமே நெஞ்சம் நிறைத்து..

□

அழகிய பெண்ணே அடுக்கடுக்காய்த் தொல்லை
இழைத்திடுவர் ஆனாலும் இங்கே-பழகிடநீ
கற்றுக்கொள் காலம் கடியதாக வந்தாலும்
இற்றிடாதே ... எல்லாம் எளிது

# புன்னகை




அது ஓர் அழகான மாலைப் பொழுது. இதமான தென்றல் காற்று. வேதனைகள் நிறைந்த அவளது முகத்தைப் பார்க்கிறேன். கண்களில் நிறம்பியிருந்த கண்ணீர் முத்து முத்தாய் உதிர்ந்து அவளது கன்னங்களை நனைக்கத்துவங்கின.

வானத்தைப் பார்க்கிறேன். இலேசான மழைச்சாரல் எனது முகத்தை நனைத்து குளிர்ச்சியை ஏற்படுத்தின. மீண்டும் அவளைப பார்க்கிறேன்.

கண்களை துடைத்துக் கொள்கிறாள். அவள் தனது முழுப் பாரத்தையும் இறக்கி வைத்துவிட்டாள் என்னிடம். எனது பதிலுக்காக காத்திருக்கிறாள் என்பதும் புரியாமல் இல்லை.

என்ன பதிலை நான் சொல்வது? எப்படிச் சொல்வது? "வெள்ளம் வரு முன் அனைக்கட்ட வேண்டும்" என பெரியோர்கள் சும்மாவா சென்னார்கள்?

வெள்ளம் வந்தபின் அனைக்கட்டுவதில் எந்த பலனும் இல்லை என்பதை அனுபவ ரீதியாக சொல்லி வைத்து விட்டார்கள்.

"அனுபவத்தில் பெறுவதை அகராதியிலும் பெறமுடியாது"

இந்த உண்மையை உணர்வு ரீதியாக இன்று உணர்ந்தவர்கள் எத்தனை பேர்?

இதைத்தான் "விதி" என்பதா?

"விதி" என எண்ணி விட்டுவிடுவதா?

முடியாது! முடியவே முடியாது!!

அவளுக்கு இருப்பது ஒரு மகன்தான். ஒரேயொரு மகன்தான். அவளது மொத்த சொத்தும் அவன்தான்.

அவன் இன்று கெட்டுச் சீரழிந்து கொண்டிருக்கிறான். அவனை திருத்த முடியாமல் திணரிக்கொண்டிருக்கிறாள் அவள். இதற்கு யார்க்காரணம்?

"நீதான் காரணம்" என்று சொன்னால் தாங்கிக்கொள்வாளா?

நிச்சயமாக தாங்க மாட்டாள். அவளால் தாங்கவும் முடியாது. அவள் அவளது கணவனுக்கு மனைவியாக மட்டுமே சிந்தித்தாள். ஒரு குழந்தைக்கு தாய் என்பதை சிந்திக்க மறந்துவிட்டாள். தனது குழுந்தைக்கு அவர் தந்தை என்பதையும் உணரத் தவறிவிட்டாள். ஒரு தாயால் தன் குழந்தையை வளர்க்க முடியும் என உறுதியாக நம்பினாள். அதுபோன்று வளர்த்தும்விட்டாள்.

ஆனால்... ஆனால்...

அந்த வளர்ந்தப்பின் விளைவு இப்படியான தாக்கத்தை தரும் என எதிர்பார்க்கவில்லை அவள். காலையில் வேலைக்குப் போனால் மாலையில்தான் வீடு திரும்புவாள். அப்பகுதியில் வாழ்பவர் களில் பலர் அப்படித்தான், பிள்ளைகள் யாவரும் பாடசாலை விட்டு வந்ததும் ஒன்று கூடுவார்கள்.

மாலையில் குர்ஆன் மத்ரஸா, மாலை வகுப்பு என சேர்த்து விட்டிருந்தாள். தினமும் அவற்றுக்கு போவதாகத்தான் சொல்வார்கள். மாலையில் விடு வந்தால் மிகவும் நல்ல பிள்ளைகளாக நடந்து கொள்வார்கள்.

சந்தேகப் படும்படியாக எதுவுமே நடந்ததில்லை. சதாரண தர பரீட்சையில் முழுவதுமாக தோற்றபோதுதான் அவள் விழிக்க ஆரம்பித்தாள். மகன் பற்றி ஆராய ஆரம்பித்தாள். ஆயினும் காலம் கடந்து விட்டிருந்தது. ஒரு நாள் திடீரென காவல் துறையினர் முற்றுகையிட்டனர். அங்குள்ள பல வால்லிபர்களை அள்ளிச் சென்றனர். அப்போதும்கூட அதில் அவளது செல்ல மகன் றினாஸும் சேர்ந்து அகப்படுவான் என்பதை அவள் கற்பனை செய்துகூட பார்க்கவில்லை.

அதிர்ந்து போனாள் ஷாரா,

அந்த வேனுக்குள் ஒரு வாலிபர் குழு உருவாகி இருந்தது. அவர்கள் பல போதைப்பொருட்களுக்கு அடிமைகளாகி இருந்ததோடு மட்டும் அல்லாமல் பல தீய பழக்கங்களுக்கும் அடிமையாகி இருந்தனர். அதில் முக்கிய அங்கத்தவனாக றினாஸும் இருப்பது அப்போதுதான் தெரிந்தது ஷாராவுக்கு.

அவள் அறியாமல் இருக்கும்வரை நல்லபிள்ளையாக இருந்த றினாஸ், அவள் அவனைப் பற்றிய உண்மைகளை தெரிந்துகொண்ட பிறகு வெளிப்படையாக எந்தவித தயக்கமும் இல்லாமல் அவள் முன்னிலையிலேயே செயற்பட ஆரம்பித் தான். விட்டுக்குள் தனது அறையிலேயே போதையை பாவித்தான், நண்பர்களை அழைத்து வந்தான்.

அன்னை தடுத்தால் அவளை எதிர்த்து சண்டையிட்டான், அடிக்கடி பணம் கேட்டு தொல்லைப் படுத்தினான். வீட்டில் இருக்கும் பொருட்களை திருடி பணம் பெற்று நண்பர்களோடு போதையில் ஈடுபட்டான், ஏற்கனவே பல பொருட்கள் திருட்டுப் போயிருப்பதை பிறகுதான் உணர்ந்தாள்.

மிகுந்த வேதனையோடு மீண்டும் என்னை நோக்குகிறாள்.

"உன் பிள்ளையை உன்னால் வெறுக்க முடியுதா ஷாரா?"

அவளுக்கு உணர்த்த வேண்டும் என்ப தற்காகவே கேள்வியை எழுப்புகிறேன். அவள் வியப்புடன் பார்க்கிறாள்.

"அது எப்படி முடியும் ஹப்ஸா? அவன் என் மகன்!" என்கிறாள் அவசரமாக.

"ஆமா, அவன் உன் மகன்தான். எவ்வ ளவோ தப்புகளை தவறுகளை செய்றானே. ஏன் வெறுக்க முடியலை?"

மீண்டும் தொடுத்த வினாவுக்கும்

உடனே விடையளிக்கிறாள்.

"ஏன்னா, பெத்த பாசம், பத்து மாசம் சுமந்து பெத்தேனே. அந்த பாசம்தான்." என்கிறாள்.

நீ பத்து மாசம் சுமந்து பெத்ததுக் காகவோ, இரவு பகலா கண் முழிச்சி, பாலூட்டி, சீராட்டி வளர்த்ததுக்காகவோ வாழ்க்கை முழுக்க உன் புள்ள உன்கூட வரப் போறதில்லை. இடையில் ஒரு துணையைக் கண்டதும் உன்னை விட்டு விலகிப்போயிருவான். அதுக்கப்புறம் உன்னை நினைச்சுப் பாக்குறதும் சந்தேகம் தான். இருந்தாலும் அவனை வெறுக்க முடியலை. ஆனா..

காலம் முழுக்க உனக்கு துணையா இருந்து, நல்லது கெட்டதுகளையெல்லாம் பகிர்ந்து, வாழ்க்கைக்கு தேவையான உணவு, உடை, வீடுண்டு எல்லாதையும் தந்த உன் கணவனை மட்டும் எப்படி வெறுக்க முடிந்தது உன்னால?

ஒரேடியா ஒதுக்கித் தள்ளிட்டு எப்படி பிரிஞ்சு வாழ முடிஞ்சது இத்தனை காலமா?" என்று எனது சந்தேகமற்ற கேள்வியில் சஞ்சலம் படுகின்றாளா என அவளது விழிகளை ஆராய்கிறேன். ஆம்"!

சஞ்சலங்கள் யாவும் அவளது வாழ்கை யில் ஐக்கியமாகி விட்டது போன்று அடிக்கடி கவலைப் படுகின்ற அவளது விழிகளில் இன்னும் கண்ணீர் துளிர்ப்பது புதுமை அல்ல. ஆயினும் இன்று துளிர்த்திருக்கும் இந்த கண்ணீர் அவளுக்கு மாத்திரமல்ல, அவளது வாழ்விலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது தேவையாகும்.

"அவர் எப்படி இருந்தாருன்று உணக்கு தெரியாதா ஹப்ஸா?"

"எப்படி இருந்தார்?"

"அவர் என்னை புரிஞ்சிக்கவே இல்லை"

"நீ அவரை புரிஞ்சிகிட்டியா ஷாரா?"

"அவர் என் தேவைகளை மதிச்சதே இல்லையே"

"அவர் தேவைக்கெல்லாம் நீ மதிப்பு கொடுத்தியாம்மா?"

"அவர் சொல்றதை மட்டும்தான் நா செய்யணும். அவர் விரும்பியபடிதான். நா வாழனும்னு நினைச்சார். பெண்களை அடிமைங்களா நினைக்கிற அக்கிற புத்திக் காரர். ஆம்புளைங்களுக்கே சொந்தமான "சுயநல புத்திக்கு சொந்தக்காரர்."

"உன் வாப்பா, நானா, மகன் இவங்களும் ஆம்புளைங்க தானே ஷாரா. அப்ப அவங்களும் சுயநலக்காரங்களா?"

"எனக்குன்னு எந்த விருப்பங்களும் இருக்கக் கூடாதா ஹப்ஸா?"

"இருக்கலாம். அது தப்பில்லை. ஆனா கணவன் மனைவி இரண்டுபேருமே விட்டுக்கொடுத்து அனுசரிச்சு வாழ்ந்தா அதுதான் குடும்ப வாழ்க்கை. இல்லைனா அதுவே "நரக" வாழ்க்கையா மாறிடும் ஷாரா."

"அவரை பிரிஞ்ச பிறகுதான் எனக்கு நிம்மதியா வாழ கிடைச்சது."

"அதனால உன் மகன் தகுந்த பாதுகாப்பு இல்லாம கெட்டு சீரழிஞ்சு வாழ்கின்றானே. அது உனக்கு நிம்மாதியா?"

"இல்ல. அவனாலே இப்ப நிம்மதி யில்லாம தவிச்சுக்கிட்டிருக்கிறேன் ஹப்ஸா."

"புரியது ஷாரா, எங்கேயோ பிறந்த ஒரு ஆணும், வேறு எங்கேயோ பிறந்த பெண்ணும் கல்யாணம் மூலமா ஒன்னா சேர்ந்ததும் "தம்பதி" ஆகுறாங்க. அவங்க ளுக்கு ஒரு குழுந்தை பிறந்ததும் அது ஒரு குடும்பமா மாறிடுது. அந்த குழந்தைக்கு பாதுகாப்பும், கண்டிப்பும் கலந்த அன்பு ஒரு தந்தை மூலமா கிடைக்கணும்,

அரவணைப்பும், அறிவுரைகளும் சேர்ந்த பாசம் ஒரு தாயின் மூலமா கிடைக்கணும். அப்படி கிடைச்சாதான் அந்த குழந்தை நம்ம சமுதாயத்துக்கு ஒரு நல்ல சந்ததியா உருவாக முடியும். இல்லைன்னா அது இந்த சமுதாயத்துக்கே சாபக் கேடுதான். இது ஒரு சாதாரண விசயமில்ல ஷாரா. பெற்றோருங்க ஒத்துமையிலதான் புள்ளைங்க எதிர்காலமே அடங்கியிருக்கு."

நான் சொல்லும் வார்த்தைகளை அமைதியாய் கேட்டு கொண்டிருக்கிறாள். ஆயினும் ஆழமாக உள்வாங்குகிறாளா என ஆராய்ந்தபடியே தொடர்கிறேன்.

"அற்பத் தனமான கோபங்களுக்கு அடிமையாவுரதாலதான் ஏராளமான குடும்பங்கள் சிதைஞ்சு, சீரழிஞ்சு போயிருக்கு ஷாரா. நம்ம புள்ளைங்க வாழ்கையை பத்தியாவது யோசிக்கனும்,

பெத்தவங்க ஒற்றுமையில்லாம பிரிஞ்சு வாழ்ந்தா புள்ளைங்க மனசை ரொம்பவும் பாதிச்சிடும் ஷாரா. அவங்க எதிர்காலமே கேள்விக்குறியா அமைஞ்சிடும்."

அவள் மிகவும் அமைதியாக அமர்ந்திருந்தாள். இனிமேலாவது எதையும் நல்லவிதமாக யோசிக்கட்டும் என மௌனமானேன். தேநீரை கொண்டுவந்து அவளுக்கு கொடுத்துவிட்டு நானும் பருகியபடியே...

"இனி என்ன பண்ணப்போறே ஷாரா?" என வினவினேன்.

எங்க மேடம் சொல்ரா, சிறுவர் நன்நடத்தை பள்ளியில சேக்கலாம்னு

"அது நல்ல ஐடியா"

"நீயும் என்கூட வரணும் ஹப்ஸா."

"கண்டிப்பா வாரேன்மா" என அவளை ஆறுதல்படுத்தினேன். மறுதினம் நானும் அவளும் அவளது மகனுடன் சிறுவர் நன்நடத்தை பள்ளிக்குச் சென்றிருந்தோம்.

யாரையோ வைத்தக்கண் வாங்காமல் ஷாரா பார்த்துக் கொண்டு நிற்பதை கவனித்தேன். அவளது கண்கள் கலங்கியிருந்தன. நான் எதுவும் கேட்க வில்லை. விரும்பினால் அவளாக சொல்லட்டும் என்றிருந்தேன். ஆனால் அவள் பேசவில்லை.

திடீரென அவர் திரும்பியபோது முகத்தைக் கண்டேன். ஆம்! அது.. அது... அவளது கணவர்தான். உருவத்தில் மிகவும் மாறிப்போயிருந்தார். ஷாராவின் முகத்தை கவணித்தேன். அவள்குமுறி அழுகிறாள்.

உடனே எழுந்து சென்று அவரிடம் பேசினேன்.

"இந்த பையன் யாருனு உங்களுக்கு தெரியுமா?" என சற்று அழுத்தமாக விணவினேன்.

"ம்.. தெரியும், என் மகன் றினாஸ்தான்."

"இவன் இப்படியாவதற்கு நீங்களும் ஒரு காரணம்தான்" என்றேன். அவர் பதில் சொல்லவில்லை. மெடம் முன்னால் வந்து சொன்னாள்.

"இவர் சொன்னதாலதான் நா இந்த ஏற்பாட்டையெல்லாம் செஞ்சேன், இனி எதுக்கும் கவலைப்படாதீங்க, றினாஸ் வாழ்கை இதோட முடிஞ்சு போகல்லை. அவனுக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கு. அது இவங்க ரெண்டு பேரோட கையிலயும்தான் தங்கியிருக்கு, இனிமேலாது இந்த "ஈகோ"வை களைஞ்சிட்டு ரெண்டு பேரும் ஒத்துமையா ஒரு புது வாழ்கையை வாழுங்க. இன்னும் நிறைய புள்ளைங்களை பெத்து அவங்களை நல்ல சந்ததிகளா வளத்து, நல்ல சமுதாயத்தை உருவாக்க உங்க பங்களிப்பை செய்ங்க" என்றபோது ஷாராவின் முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது.

■

# பொறுப்பேற்போம் நாமே!

தன்னலமே பெரிதாக நினைத்தின்று மாந்தன்
    தனித்தியங்கும் போக்கினையே காண்கின்றோம் இங்கே!
முன்னோர்கள் கூற்றினையும் மதியாது செல்வான்!
    முன்னேற்றம் என்றெண்ணித் தீச்செயலைச் செய்வான்!
வன்முறையில் ஈடுபட்டு வாழ்வினையே தொலைப்பான்!
    வளமழித்து உயிரழித்து நிம்மதியைக் குலைப்பான்!
எண்ணத்தில் மாசடைந்த நிலைதானே கண்டான்!
    ஏற்றமுடன் திருத்திடவே பொறுப்பேற்போம் நாமே!

கட்டுக்குள் அடங்காத காட்டாறு போலே
    கண்மூடித் தனமான இளையோரின் போக்குக்
கெட்டொழிந்து போகுமுன்னே தடமாற்றம் வேண்டும்!
    கேட்டதனை உணர்த்தி நாமும் வழிகாட்ட வேண்டும் !
கொட்டித்தான் கிடக்கிறதே உலகினிலே வாய்ப்பு !
    கோடிட்டுக் காட்டிடவே துணையாக நிற்போம்!
தொட்டுவிடும் தொலைவேதான் வானென்று சொல்வோம்!
    தோல்வியிலே துவள்வோரை மடைமாற்றிச் செல்வோம்!

கல்வியதில் போதிப்போம் நன்னெறியை மேலாய்!
    கருத்துடனே ஏற்றிடுவோம் பொறுப்பதனை வீறாய்!
செல்லுமிடம் எங்கிலுமே செப்பிடுவோம் நேராய் !
    செயலாற்றல் இருந்தால்தான் ஒழிந்திடுமிக் கோரம்!
சொல்லிக் கொண்டிருந்தாலே பயனேதும் இல்லை!
    சுழற்ற வேண்டும் சாட்டையினைச் சட்டமென்ற பெயரால்!
வல்லமையால் வீழ்த்திடுவோம் வாய்மையுடன் கூடி!
    வளமான எதிர்காலம் இளையோர்க்கு வார்ப்போம்!



ஓசூர் மணிமேகலை




## சித்த மருத்துவர் சி.வரதராசன்

**நேர்கண்டவர்: திரு ஏ.டி.வரதராசன்**

*வணக்கம் ஐயா...*

*1) தங்கள் முழு பெயர் மற்றும் பூர்வீகம் பற்றி சுருக்கமாகச் சொல்லுங்கள்?*

வணக்கம். என்னுடைய முழு பெயர். எனது சி.வரதராசன். தற்போது சிவ. வரதராசன் என்று பயன்படுத்துகிறேன். எனது ஊர் பெரங்கியம். இது கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், தொழுதூர் அஞ்சலில், தொழுதூர் அருகாமையில் ராமநத்தம் ஊராட்சியில் உள்ளது. ராமநத்தத்திலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் உள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் ராமநத்தம் உள்ளது. பெரங்கியம் வெள்ளாற்றங்கரையில் உள்ளது. பல நூறு ஆண்டுகளாக எனது பூர்வீகமும் அதுவே.

அஞ்சல் எண் : 606303.
தொலைபேசி எண் : 9442833140,
8015106507.

*2) சித்த மருத்துவம், ஆங்கில மருத்துவம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

சித்த மருத்துவம் என்பது நிரந்தரமான தீர்வை தரக்கூடியது. சித்த மருத்துவம் ஒவ்வொரு நோய்களுக்கும் முழுமையான தீர்வை தரக்கூடியது. இது சற்று நீண்ட காலம் சாப்பிட வேண்டிய தேவைக்குறியது. நோயினுடைய தன்மை பொறுத்து தான் சாப்பிட வேண்டிய காலம் அமைகிறது. ஆங்கில மருத்துவம் என்பது உடனே தீர்வு தரக்கூடியது ஆனாலும் நிரந்தரமாக குணப்படுத்தாது. ஆனால் சித்த மருத்துவம் என்பது

நிரந்தர தீர்வையும் முழுமையான நலனும் தருவதனால் சற்று காலதாமதம் ஆவது என்பது இயற்கை. அதேபோல சில நோய்களுக்கு உடனடி தீர்வும் உண்டு. சித்த மருத்துவத்தில் உடனடி தீர்வு உள்ள மருந்துகளும் உள்ளன.

*3) பக்க விளைவுகள் அல்லாத போதும் சித்த மருத்துவத்தைப் பெரும்பாலானோர் பின்பற்றாததற்குக் காரணம் என்ன?*

பக்க விளைவுகள் இல்லாத சித்த மருத்துவத்தை பெரும்பாலானவர்கள் பின்பற்றுவதில்லை என்பதை விட, பின்பற்றுகிறார்கள் என்பது தான் உண்மை. உடனடி தீர்வை நோக்கி சென்ற நோயாளர்கள் அந்த உடனடி தீர்வு நிரந்தரம் இல்லை என்பதோடு, அந்த உடனடி தீர்வு வேறொரு பிரச்சனையை உடலில் உருவாக்குவது என்று அறிந்த பிறகு சித்த மருத்துவத்திற்கு வருகிறார்கள். அப்படி வருபவர்கள் முழுமையான மருத்துவம் செய்து கொள்கிறார்கள். இதில் சித்த மருத்துவத்திற்கு வருகிறவர்கள் குறைவு என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. முற்காலத்தை விட இப்பொழுது சித்த மருத்துவத்தை நோக்கி மக்கள் ஏராளமான பேர் வருகிறார்கள் என்று தான் என்னால் கூற முடியும்.

*4) தங்கள் அனுபவத்தில் ஆகப் பெரிய நோயை குணப்படுத்தியது உண்டா? என்ன நோய்?*

நீங்கள் பெரிய நோய் என்று கூறுகிறது அனைத்தும் நீண்ட காலம் தீர்வு இல்லாமல் இருக்கின்ற நோய்களையே!

ஆங்கில மருத்துவர்கள் 'ஃபேட்டி லிவர்' என்று சொல்லுகின்ற காமாலை நோயை முழுமையாக பலருக்கும் குணப்படுத்துகிறோம். தோல் நோய் என்று சொல்லுகின்ற மேகநோய். அது பலருக்கும் குணப்படுத்தியுள்ளோம். வயிற்றுப் புண்ணை நிரந்தரமாக குணப் படுத்துகிறோம். சிறுநீரகத்தில் ஏற்படும் சிறுநீரகக் கல் யூரியா கிரியேட்டின் போன்ற நோய்களை குறிப்பிட்ட விகிதாச் சாரத்திற்கு கொண்டு வந்து ஏறாமல் சமனில் வைத்திருக்கிறோம். நீண்ட கால நோய் அனைத்திற்கும் பல்வேறு விதமான நோய்களுக்கும் எனது 30 ஆண்டுகால மருத்துவத்தில் நிறைய குணப்படுத்தி இருக்கிறேன். என்னிடம் சிகிச்சை பெற்ற மக்களே இதற்கெல்லாம் உதாரணமாக இருக்கிறார்கள்.

*5) காலம் காலமாக நீரிழிவு நோய் களுக்கு நிரந்தர தீர்வு இல்லையே...? இதற்கு காரணம் என்ன?*

காலங்காலமாக நீரிழிவு நோய்களுக்கு நிரந்தர தீர்வு இல்லையே என்று நீங்கள் கூறுகிறீர்கள். நீரழிவு என்பது ஒரு நோயில்லை என்று கூறுவார்கள். ஏனென்றால் நீரழிவு சுகர் கம்ப்ளைன்ட் என்பார்கள். அதாவது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் இருக்கிறது என்று நமக்கு அறிவுறுத்துவது தான் சர்க்கரை. இது இன்சுலின் குறைபாட்டினால் வருகிறது என்று கூறுகிறார்கள். சர்க்கரை நம் உடலுக்கு தேவை. சர்க்கரை இல்லை என்றால் மனிதன் வாழ முடியாது. நீரிழிவு என்பது அந்த சக்கரை ரத்தமாக மாற்றப்பட முடியாத நிலை என்று கூறுகிறார்கள். அப்படியானால் நாம் அதற்கு தகுந்த முறையில் உணவு முறைகளை மாற்றி அமைத்துக் கொண்டாலே அது கட்டுப் பாட்டிற்கு வந்துவிடும். இதற்கு இயற்கை உணவு முறை மற்றும் இயற்கை மருத்துவம் மிகச் சிறந்த தீர்வை தருகிறது. இந்த சர்க்கரை நோயாளிகள் நோயின் தன்மையையும் மருத்துவத்தையும்

அறிந்து உணவு முறையில் கடைபிடித்து கொள்ளலாம். ஆகையினால் நீரிழிவு நோயை கட்டுப்படுத்துவது உணவில் மிக எளிதில் செய்யலாம். மேலும் அவர்கள் முழுமையாக அதிலிருந்து விடுபட வேண்டுமானால் அவர்களும் தன்னை சித்தர் நிலைக்கு உயர்த்திக் கொண்டு, ஒரு சித்தர்களைப் போல தன்னுடைய வாழ்வை வாழ்வாரேயானால் நீரழிவு நோய் என்ன!? எல்லா நோய்களும் உடனே நீக்கப்பட்டு, இந்த உடல் காயகல் பாக்கப்பட்டு நோயின்றி பல ஆண்டுகள் வாழலாம் என்று சித்தமருத்துவமும் சித்தர்களும் கூறுகிறார்கள். அப்படி ஒப்பிடும் பொழுது எந்த நோயும் ஒரு சித்தனுக்கு பெரிய செய்தி அல்ல. இவைகள் எல்லாம் ஒரு சித்தன் நினைத்தால் சாதாரணம். எனவே சாதாரண மக்களுக்கு இது பலவீனம் என்று தான் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

*6) முற்காலத்தை விட இப்போது நோய்களின் எண்ணிக்கைக் குறைந்துள்ள தாகப் புள்ளி விவரங்கள் சொல்கிறது இதற்கு காரணம்... ஆங்கில மருத்துவமே என்பதைத் தாங்கள் எப்படிப் பார்க்கி றீர்கள்?*

முந்தைய காலத்தை விட இப்போது நோய்கள் எண்ணிக்கை குறைந்துள்ளதாக புள்ளி விவரங்கள் காட்டுவது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம், ஒரு 30 ஆண்டுகளுக்கு முன் ஒரு தாலுகாவில் ஒரு பெரிய நகரத்தில் எத்தனை மருத்துவமனைகளும் எத்தனை மருந்தகங்களும் இருந்தன? இப்போது வளர்ந்துள்ள மக்களுக்கு நீங்கள் அதே விகிதாச்சாரத்தை எடுத்துக் கொண்டா லும், எத்தனை மருந்தகங்களும் எத்தனை மருத்துவமனைகளும் இருக்கிறது என்று எண்ணி பார்த்தால் அது பெருக்கல் விருகத்தை விட அதிகமாகவே இருக்கிறது. எனவே முந்தைய காலத்தை விட நோய்கள் குறைவாக இருக்கிறது என்ற புள்ளி விவரம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. பல மடங்கு நோய்கள் அதிகமாகி இருக்கிறது. அதிகமாகிக் கொண்டே இருக்கிறது என்பதுதான் உண்மை.

*7) மன நோய்களை சித்த மருத்துவம் குணமாக்குமா?*

தமிழ் மருத்துவத்தில் பித்தம் அதிக மாவது தான் பித்து அல்லது மனநோய் என்று கூறி இருக்கிறார்கள். இதற்கு உடலில் உள்ள உஷ்ணத்தை குறைப்பதற்கான சர்பகந்தா, பேய்பீர்க்கம் விதை போன்ற மருந்துகள் இருக்கிறது. ஆனால் இந்த துறை அவர்களை உடனிருந்து தங்க வைத்து பல மாதங்கள் பயிற்சி அளித்து குணப்படுத்த வேண்டிய ஒரு சூழல் இருப்பதினால் அப்படிப்பட்ட தகுதி இல்லாதவர்கள் மருத்துவர்கள் அதை எடுத்துக் கொள்வ தில்லை. பிற மருத்துவர்கள் அதை எடுத்து செய்கிறார்கள். சிறப்பாகவும் செய்கிறார்கள். இன்றைய கால சூழ்நிலையில் தமிழ் மருத்துவர்கள் மனநோயை அதிகம் எடுத்துக் கொள்வ தில்லை என்பது உண்மைதான். ஆனால் அதற்கும் மருந்து உண்டு. எல்லா நோய்களுக்கும் மருந்து உண்டு. குறிப்பாக மனம் கெட்டுப் போனால் உடல் கெட்டுப் போகிறது என்பதை தமிழ் மருத்துவர்கள் அருள், இறக்கம் போன்ற உயர்ந்த செயல்களை செய்து வந்தால் அவர்களுக்கு மனநோய் வராது என்ற அடிப்படை உண்மையை சொல்லுகிறது. நாம் எல்லோரும் இரக்கமுள்ளவர்களாக அன்புள்ளவர்களாக தயவு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை தமிழ் மருத்துவத்தில் இருக்கிறது. தமிழ் மருத்துவம் இன்று அதில் அதிக கவனம் செலுத்தவில்லை. மனநோயாளிகளை பராமரிக்க கூடிய தகுதி உள்ளவர்கள்

இல்லை என்பதை காரணம் என்று நான் கூறுகின்றேன்.

*8) ஒருவருக்கு சர்க்கரை அளவு குறைகிறதா கூடுகிறதா என்பதை எப்படித் தெரிந்து கொள்ளலாம்?*

சர்க்கரை நோயாளர் ஒருவர் சர்க்கரை நோயோடு நெடுநாள் இருப்பாரேயானால் அந்த நோயாளருக்கே தெரியும் இப்பொழுது சர்க்கரை நோயுடைய அளவு கூடி இருக்கிறதா? குறைந்திருக்கிறதா? என்று. சர்க்கரை அளவு கூடும் பொழுது அடிக்கடி சிறுநீர் கழித்தல், அடிக்கடி பசித்தல், அரிப்பு போன்ற புற அறிகுறிகள் தோன்றும். அப்படி தோன்றினாலே அவர்கள் சர்க்கரை அதிகமாக இருக்கிறது என்று தெரிந்து அதை குறைத்துக் கொள்வார்கள். சர்க்கரை நோயாளிகளுக்கு இது இயல்பாக தெரியும். குறி குணங்கள் எந்த புள்ளிவிவரங்களை விடவும் சிறந்தது என்பது தமிழ் மருத்துவத்தில் சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

*9) கொழுப்பு மற்றும் சர்க்கரை அளவைத் தெரிந்து கொள்ள ஆங்கில மருத்துவத்தில்...... இரத்தப் பரிசோதனை உள்ளது.... ஆயினும் இந்தக் கணக்கைச் சித்த மருத்துவம் எவ்வாறு கணிக்கும்?*

தமிழ் மருத்துவம் இந்த முறையிலான நோயறியும் தன்மையை முழுமையாக ஏற்றுக் கொள்வதில்லை. புள்ளி விவரங்கள் (பாயிண்ட்) ஒரு நோயின் தன்மையை கண்டுபிடிப்பது என்று கூற முடியாது. அளவு என்பது ஒரு மனிதனுக்கு மனிதன் வேறுபடும். ஒரு மனிதன் உடல் நானூறு புள்ளி இரத்த சர்க்கரையை தாங்கிக் கொள்கிறது. இன்னொரு மனிதனுக்கு இருநூறே தாங்க முடியாது. இந்த அளவீடு பார்ப்பதனால் அது ஒரு நோயை குணப்படுத்தக்கூடிய தகுதி என்று கூற முடியாது . ஆனால் தமிழ் மருத்துவத்தில் குறிகுணம் என்று இருக்கிறது. அந்த குறி குணமே கூடல், குறைவை சொல்லிவிடும்.

உதாரணமாக ஆங்கில மருத்துவர்கள் ஃபேட்டி லிவர் என்று சொல்வதை, தமிழ் மருத்துவம் காமாலை என்று கூறுகிறது. இதற்கு புள்ளி விவரமோ அல்லது விஞ்ஞானமோ தேவையில்லை. ஆதிகாலத்தும் சரி இன்றும் சரி தமிழ் மருத்துவத்தில் நாடி தெரிந்தவர்கள் அனைத்து நோய்களையும் துல்லியமாக கணிப்பார்கள். இதில் அளவு மற்றும் புள்ளிவிவரம் என்பது தமிழ் மருத்துவத்திற்கு தேவையில்லை. மாறுபடும் அந்த குறிக்குணமே அவருடைய அளவு மற்றும் தன்மையை காட்டிவிடும். ஆகையால் எங்களுக்கு புள்ளிவிவரம் என்பது குறிக்குணமே. ஆகையினால் புள்ளி விவரம் அது கூடுவது குறைவு என்பதை குறிகுணத்தை வைத்து கண்டுபிடித்து விடுவோம்.

*10) அறுவை சிகிச்சையின் போது வலி தெரியாமல் இருக்க ஆங்கில மருத்துவத்தில் மயக்க மருந்து உள்ளது.... சித்த மருத்துவத்தில் இதுபோன்ற வழிகள் உள்ளனவா?*

மளிகைக் கடைக்காரரிடம் சென்று சாப்பாடு கேட்கக்கூடாது! உணவகத்திற்கு சென்று மளிகை கேட்கக் கூடாது! அறுவை சிகிச்சையின் பொழுது வலி தெரியாமல் இருக்க ஆங்கில மருத்துவத்தில் மருந்து உள்ளது என்று நீங்கள் கூறுகிறீர்கள். தமிழ் மருத்துவத்தை பொருத்தவரை சரியாக மருந்தை உட்கொண்டால் அவர்களின் நோய் அறுவை சிகிச்சை நோக்கி செல்லாது. அறுவை சிகிச்சைக்கு தீர்மானித்த நோய் களை கூட சித்த மருத்துவர்கள் அறுவை சிகிச்சையை தடுத்து விடுவார்கள். எனவே அறுவை சிகிச்சை செய்து தடுப்பதற்கான

முறைகள் எத்தனையோ தமிழ் மருத்து வத்தில் இருக்கிறபொழுது, நீங்கள் அறுவை சிகிச்சை செய்வதே தேவை இல்லை. நாங்கள் அறுவை சிகிச்சையை தடுத்து விடுவோமே! ஆகையால் வலியில் லாமல் என்று கேட்டதற்கு எனது பதில் அறுவை சிகிச்சையை தடுப்பதற்கு வழி இருக்கிறது என்பதே. தமிழ் மருத்துவம் முழுக்க அறுவை சிகிச்சை தடுக்கும். எல்லா நோய்களுக்கும் அறுவை சிகிச்சை இல்லாமல் வாழ முடியும். தமிழ் மருத்துவம் குழந்தையை கிள்ளுவதில்லை அதனால் குழந்தையை கத்(தி)த வைக்காது.

*11) தைராய்டு நோய்க்கு என்ன உணவு முறை மேற்கொண்டால் நல்லது?*

தைராய்டு ஒரு நோயல்ல. அது கழுத்தில் உள்ள தைராய்டு சுரப்பினுடைய கூடுதல் குறைச்சலால் வருவது. தைராய்டு சுரப்பியால் வருகின்ற பிரச்சினைகளில் உடல் உஷ்ணமடைந்து உடல் மெலிந்து கொண்டே போகின்ற தைராய்டு பிரச்சினை என்று ஒன்று உண்டு. அதற்கு உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடிய பன்னீர் திராட்சை மிகச் சிறப்பாகப் பலன் தருகிறது.



அதே போல பெண்களின் தூர நாட்கள் தாண்டித் தாண்டி வருவதனால் ஒருவித தைராய்டு பிரச்சனை உண்டாகிறது. அதனால் உடல் எடை கூடுகிறது. அப்படி எடை கூடுகிற தைராய்டு பிரச்சனைக்கு, உடல் குளிர்ச்சியை தடுக்கின்ற வெற்றிலை பாக்கு முறையாகப் மென்று சாப்பிட்டு வந்தால், உடல் உஷ்ணம் ஏறும். உடல் எடை குறையும். இது அனுபவம். உடல் எடை பெருக்கின்ற தைராய்டு உடலினருக்கு பப்பாளி பழம், சுண்டை வற்றல் குழம்பு ஆகியவை நோயை கட்டுப்படுத்தும்.

*12) குழந்தைகள் பிற்காலத்தில் நீரிழி வால் அவதிப் படாமல் இருக்க என்ன உணவுகள் மேற்கொள்ளலாம்?*

குழந்தைகள் இனி வருங்காலத்தில் நீரழிவு நோயில் ஆட்படாமல் இருப்பதற்கு நம் முன்னோர்கள், நம் பாட்டன், பூட்டன் சாப்பிட்ட உணவு முறையையும் அந்த கலாச்சாரத்தையும் பின்பற்றினால் இந்த நோய் அனைத்தும் 90% குறைந்து விடும் மகிழ்ச்சியாக வாழலாம். சிறுவர்களுக்கு வரும் சர்க்கரை வியாதிக்கு தமிழ் மருத்துவம் செய்வதில்லை.

*13) தூக்கமின்மை ஏற்பட்ட காரணம்?*

உடல் குளிர்ச்சி அடைந்தால், தூக்கம் நன்றாக வரும். உடல் சூடு ஆவது தான் தூக்கமின்மைக்கான பெரும் காரணம். எல்லா வகை மருந்துகளும் உடலை குளிர்விக்க செய்வதன் மூலம் தான் தூக்கத்தை வர வைக்கிறது. எனவே உடலை குளிர்ச்சி செய்யும் உணவும் மருந்தும் தூக்கத்தை வரவழைக்கும்.

*14) நீரிழிவு நோய் வந்த பிறகு எந்த உணவையும் தைரியமாகச் சாப்பிட முடியவில்லை.... உதாரணமாக இனிப்பு,*




எண்ணெய்ப் பலகாரம் போன்றவை.... இதற்கு வேறு வழியே இல்லையா?

பசி நேரத்தில் பழங்களை சாப்பிடுவதி னால் சர்க்கரையின் அளவு ஏறாது. ஆனாலும் சர்க்கரை அளவு அதிகமாக இருக்கின்ற பொழுது மருத்துவர் சொல் கிறதை கேட்பது மிகவும் அவசியம். நல்லது.

விரும்புவதை சாப்பிடுவது என்றால் நோய் வந்த பிறகு எப்படி சாத்தியம்? பள்ளம் இருக்கிறது என்று தெரிந்த பிறகு இந்த பள்ளத்தில் பைக்கை விடுவதற்கு வழி இல்லையா என்று கேட்பது போல் இருக்கிறது!

*15) வெறும்சைவம்மட்டுமேஉண்பவர் களுக்கும்... உணவு சம்பந்தப்பட்ட நோய் கள் வருகிறதே... இது எப்படி?*

நோய் வருவதற்கான காரணம் அனேகம். தமிழ் மருத்துவம் வினைகளே பிணிகளுக்கு காரணம் என்று கூறுகிறது. சூழ்நிலைகளே நோய்களுக்கு காரணம் என்று கூறுகிறது. பாரம்பரியமே நோய் களுக்கு காரணம் என்று கூறுகிறது. இப்படி வினை, பாரம்பரியம், சூழ்நிலை என்று பல்வேறு காரணங்கள் இருக்கின்ற பொழுது, நாம் உணவை மட்டும் வைத்து நோய் வருகிறது என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

*16) உங்களின் குரு யார்.... அவரைப் பற்றி ஒருசில வார்த்தைகள்?*

நான் பல துறைகளில் ஈடுபாடு உடையவன். எனது பல்வேறு துறை களுக்கும் குரு உள்ளார்கள். உதாரணமாக, நான் தமிழ் கவிதையில் ஈடுபாடு உள்ளவன். என் கவிதைக்கு தத்தனூர் தமிழ்மணி என்று ஒரு ஆசிரியர் எனக்கு குருவாக அமைந்தார். மருத்துவத்தில் மேகரை சதாசிவ ஐயாவும் திருச்சி சித்த மருத்துவ சங்க செயலாளர் மாரிமுத்து ஐயா அவர்களும் என்னுடைய குரு ஆவார்கள். ஆன்மீகத்தில் எனக்கு



விழுப்புரம் அருட்பா கோவிந்தசாமி ஐயா என்பவர் குரு. யோகம், தியானம் இவற்றிற்கு கள்ளக்குறிச்சி அருகில் மண்மலை முனைவர் சண்முகம் அவர்கள் எனது குரு. இப்படி பல்வேறு விதமான குருக்கள் எனக்கு உண்டு.

*17) சைவத்தில் நாம் குறைத்துக் கொள்ள வேண்டிய உணவு எது? ஏன்?*

உங்கள் கேள்வியை நான் இப்படி எடுத்துக் கொள்கிறேன். நாம் உண்ணும் உணவை அருசுவைகளாக பிரிப்பார்கள். இந்த அறுசுவைகளும் நமது உடலில் வாத, பித்த, கபமாக பரிணமிக்கிறது. இந்த வாத, பித்த, கப அளவுகள் கூடினாலும் குறைந்தாலும் நோய் வரும். புளிப்பும் துவர்ப்பும் வாதம். கசப்பும் கைப்பும்(உப்பு) பித்தம். இனிப்பும் கார்ப்பும் கபம். இச்சுவையுள்ள உணவுகளை கூட்டலாம் குறைக்கலாம். 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்ற வள்ளுவர் பெருந்தகை உடைய அடிகளை நினைவு கூறுகிறேன்.

*18) உங்களைப் பேட்டி காணும் 'தமிழ்நெஞ்சம்' மாத இதழைப் பற்றி ஒரு சில வார்த்தைகள்...*

தமிழ்நெஞ்சம் ஐம்பது ஆண்டு 50 ஆண்டுகள் தாண்டி வெற்றி நடை போட்டு வருகிறது என்பதை நான் அறிவேன். அந்த வகையில் இந்த இதழுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்தினையும் நன்றியை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*19) சித்த மருத்துவக் குறிப்புகள் செய்யுள் வடிவில்தான் இருக்கும்... அவற்றில் உங்களுக்குப் பிடித்த செய்யுள் எது? யார் இயற்றியது? எந்த நோய்க்காக இயற்றியது?*

'அகத்தியர் நேத்திரவிதி 500' என்ற நூலில், கண் நோய்கள் 96-கும் மிகச்சிறந்த மருந்தை பாடல் வடிவில் கூறியிருக்கிறார். அதில் ஒரு பாடல்

'இந்துப்பு திப்பிலி இயல்பீத ரோகிணி
நந்திப்பூச் சாற்றில் நயந்தரைத் திட
அந்தகன் கண்ணிற்கு அருந்ததி காணுமே'

இந்தப் பாடலின் பொருள்: இந்துப்பையும், அரிசித் திப்பிலியையும், பீதரோகிணியையும் தனித்தனியே சம அளவு எடுத்து ஒன்று கலந்து, அதை நந்தியாவட்டைப் பூச் சாறை விட்டு கல்வத்தில் நன்கு அரைத்து, கண்களுக்கு சொட்டுச் சொட்டாக விட்டு வர, கண் நோய்கள் தீரும். குருடனும் பார்வைப் பெறுவான். வடதுருவத்தில் உள்ள மிகச்சிறிய அருந்ததி நட்சத்திரத்தையும் காண்பான்.

இது, என்னைக் கவர்ந்த மிகச்சிறந்த சுருக்கமான பாடல்.

# சக பாலினமே... சரித்திரமே..

எத்தனை எத்தனை
முகங்கள் உனக்கு...
அத்தனையும்
மலை போல் இருக்கு...
அதுவே
உன் வெற்றிக்கணக்கு!

அடுப்பங்கரைக்கும்
அங்கனக்குழிக்கும்
நடந்தே காய்ப்பு விழுந்த
உன் கால்கள்
இந்த உலகின்
மூலை முடுக்கெல்லாம்
இன்று தடம் பதிப்பது
உன் வெற்றித் திருநாட்கள்!

பாத்திரங்கள் கழுவிக்கழுவி
காய்கறிகள் வெட்டிவெட்டி
மென்மையற்றுப் போன
உன் கைகள்
மென்பொருளுக்கு
மெல்லிய மொழியெழுதி
இன்று கணினிக்கு
அதுவே உயர் பாசுரமாய்!

நேற்றோ ஏறிட்டுப்
பார்க்கவே யோசித்த நீ...
இன்றோ நேர்கொண்ட பார்வையில்
பலர் யோசிக்க வாழ்கிறாய்...

அச்சம் மடம் நாணம் பயிர்ப்போடு
உன் வீரத்தையும்
மனதில் நிலை
நிறுத்திக்கொண்டாய்!

வேறுபாடுக் காட்டும் உலகில்
ஆணிவேராய்
இந்த அகிலம் சுமக்கிறாய்!
பண்பாடு பாரம்பரியம்
காத்து நிற்பதோடு
மூடப் பழக்க வழக்கங்களை
கோபங் கொண்ட காளியாய்
காலி செய்கிறாய்!

உன் பிரம்மிப்பூட்டும் அவதாரங்கள்..
அத்தனையும்
மனித வாழ்வின் அரிதாரங்கள்...
பாடுபொருளாய் மட்டுமல்ல...
என்றும் எங்கள்
வாழ்வின் பொருளாயும் நீ..
அன்பின் அருளாயும் நீ!

உன்னை வெறுமனே
வாழ்கவென்றும்..வெல்கவென்றும்
வாழ்த்த மனம் ஒப்பவில்லை...
'உனக்குப் பின்னால் நாங்கள் இருக்கிறோம்
என்ற உற்சாகத்தோடு
உறுதிமொழிக் கொடுக்கிறது
இந்த ஆண் மனசு..ஆம் ஆழ் மனசு!

ம.சக்திவேலாயுதம்

# கற்பகத்தின் கல்யாணம்





## 13

**அன்புச்செல்வி சுப்புராஜ்**
பட்டாபிராம், சென்னை - 600072

'சக்ஸஸ்...' என்றபடி யாருமறியாது கட்டைவிரலை செல்வம் உயர்த்தியதைப் பார்த்ததும் குங்குமமாய் முகம் சிவக்க சட்டெனத் திரும்பியவளைப் பார்த்து 'ம்ம்ம்... ம்ம்ம்... நடக்கட்டும்.... நடக் கட்டும்' கிண்டலடித்த தங்கச்சியைப் பார்த்து 'என்ன வெளையாட்டு... இந்த தட்டுகள எல்லாம் எடுத்துட்டுப் போ...' பொய்க்கோபத்துடன் மிரட்டியபடி ஸ்டூல் மேலிருந்த செல்வத்தின் புகைப்படம் மற்றும் சம்பளபில்லை எடுத்தாள்.

'இப்பதா போனாங்க... அதுக்குள்ள போட்டோவ பாக்குற... அக்கா இதெல் லாம் சரியில்ல சொல்லிட்டேன்' கலகல வென சிரித்த தங்கச்சியிடம் 'போடி அங்குட்டு, சும்மா கிண்டலடிச்சுக்கிட்டு... அம்மா வரவும் தரதுக்குதா எடுத்தேன். இந்தா நீயே பீரோல வை' கை நீட்டிய கற்பகத்தைப் பார்த்து விழுந்து, விழுந்து சிரித்தாள் தங்கச்சி.

'என்ன சொல்லிட்டேனு இம்புட்டு சிரிப்பு சிரிக்குறவ'

'இல்ல... உன் வாய்தா இந்தாங்குது... ஆனா கையப்பாரு... போட்டோவ இறுக்கிப் பிடிச்சுருக்கு... எனக்கென்னவோ இது கல்யாணத்துலதா போய் முடியுமுனு தோணுது...' தங்கச்சி சொல்லவும் திடுக்கிட்டு விழித்தாள் கற்பகம்.

'காதல் வந்துருச்சு... ஆசையில் ஓடி வந்தேன்... ஏய் காதல் வந்துருச்சு... ஆசையில் ஓடி வந்தேன்' சுற்றி வந்து பாடிய தங்கையை வெறித்துப் பார்த்தாள்.

'எல்லாஞ் சரியா வரும்க்கா... எத நெனச்சும் வெசனப்படாத, வா... வா சோத்தைப் போடு, செம பசி'

'நீயே வச்சு சாப்பிடுடி.. நா க்ளாசுக்கு போக வேண்டாமா?'

'ஆமா... பெரிய இந்தக் கிளாசு, பத்திருபது பேருக்கு தையல் சொல்லித் தரதுக்கு இம்புட்டு அலப்பறை' சொல்லிய படியே ஓடிய தங்கச்சியை, சிரித்தபடியே துரத்தினாள் கற்பகம்.

'அப்பாடா... உம்மூஞ்சில சிரிப்பைப் பார்த்துட்டேன்... நீயும் வா, சாப்பிட்ட பொறவு போவ'

சாப்பிட்டதும் தையல் வகுப்பு நடக்கும் இடத்திற்கு போனாள். இவள் நுழையும் முன்பே கலகலவென்ற சிரிப்பு சத்தம் வாசல் வரை கேட்கவும்... சிறிது கோபத்துடன் கேட்டைத் திறந்து உள்ளே போனவளைப் பார்த்து வகுப்பு அமைதியானது.

'வாம்மா புதுப்பொண்ணு... என்ன மொகம் இம்புட்டு கடுகடுன்னு இருக்கு' துளசியக்கா கிண்டலடிக்க 'அநாவசியமா கேலி பண்ணாதீக அக்கா, இப்ப என்ன பொண்ணுதானே பார்த்துட்டு போயிருக்காங்க. அதுபத்தி பொறவு

யோசிக்கலாம். தையல் வேலையக் கவனிக் காம அதென்ன தெருவுக்கு கேக்குற அளவுக்கு சிரிப்பு... பெரியவுக நீங்களும் இப்படி பண்ணலாமா?'

'சிரிச்சது குத்தமா தாயி, ஏதோ இத்தன நாளுல இன்னைக்கு தா உன் வீட்டுல நல்ல விசயம் நடக்குது. அதா நாங்களும் சந்தோசப்பட்டோம்'

'அதுக்குள்ள இங்க வந்து சொல்லிட் டீங்களா? அதெல்லாம் ஒன்னுமில்லக்கா, இப்ப வீடு இருக்குற சூழ்நெலைல அப்பாவுக்கு ஒடம்பு சரியாகணும். அது மட்டுந்தா வேணும்'

'சரி, சரி எல்லோரும் வாய் பார்க்காம தைக்கத்தொடங்குங்க... வசந்தி இன்னைக்கு அந்த பாவாடைய முடிச்சிட பாரு... சுகந்தி இடுப்ப நெளிக்காம தைக்கப் பழகு... ஏபுள்ள ராஜி, கையில திம்பிள் மாட்டாம ஹெம்மிங் பண்ணாத சொல்லியிருக்கேனா இல்லையா... இஷ்டத்துக்கு தைக்க வேண்டி யது, அப்புறம் ஊசி குத்திடுச்சு, இரத்தம் வந்துடுச்சுனு மூஞ்சிய சுழிக்க வேண்டியது' படபடன்னு பொரிந்த கற்பகத்தின் புதுமுகத்தை எல்லோரும் திகைத்துப் பார்த்தனர்.

அன்றைய இரவு பத்து மணிக்கு மேல்தான் வீட்டிற்கு வந்தார்கள் அம்மா. கதவைத் திறந்து விட்டு, சாப்பாடு எடுத்து வைத்தபடியே அப்பாவின் உடல்நலம் குறித்து விசாரித்துக் கொண்டிருந்தாள். அப்போது பாதித் தூக்கத்தில் எழுந்து வந்த தங்கச்சி 'அம்மா... ஒரு சந்தோசமான விசயம், அக்காவுக்கு நாளன்னைக்கு பூ வைக்க வராங்க' என்று சொல்லவும் 'என்னடி லூசு மாதிரி ஒளருற... எதுல வெளையாடுறதுனு வேணாமா?' கடுகடுத்த அம்மாவைப் பார்த்து 'அய்யோ அம்மா, அக்கா லவ் பண்ண ஆரம்பிச்சுடுச்சு... நாளன்னைக்கு பூ வைக்க வராங்க' தங்கச்சி பேசப்பேச 'எடு அந்த வௌக்குமாத்தை... என்ன பேச்சு பேசுறவ, இப்ப வீடு இருக்குற நெலைல எதுக்கு இந்த துடுக்குத்தனம்? பெரியவளே அந்த வௌக்குமாத்தை எடு, சின்னவள நாலு போடு போட்டாதா அடங்குவா' கோபத்துடன் பேசிய அம்மாவைப் பார்த்து திருதிருவென முழித்தாள் கற்பகம்.

'நீ முழிக்குற முழியே சரியில்லையே... என்ன நடந்துச்சு, ரெண்டு பேரும் இப்ப உண்மைய மட்டுந்தா சொல்லணும், இல்ல நடக்குறதே வேற'

அம்மா பேசும் சத்தம் கேட்டு தம்பிகளும் எழுந்து வர, அக்கம்பக்கத்திலிருப்பவர்களும் வாசலில் வந்து கூடத் தொடங்கினார்கள்.

தொடரும்





சிறுவர் சங்கமம்



# அதிசய மீனும் அறிவாளிப் பிள்ளைகளும்

ஒரு ஊரில் ஒருத்தர் இருந்தாராம்.

அவர் தினமும் அவங்க ஊருல இருக்க குளத்துக்குப் போய் நிறைய மீன் பிடிச்சிட்டு வந்து, அவங்க வீட்டுல அடிக்கடி மீன் சமைச்சு சாப்பிடுவாங்களாம்.

அப்படி ஒரு நாள் அவரு மீன் பிடிக்க,

தூண்டில் போட்டு காத்துக்கிட்டு இருந்தாராம். மீன் மாட்டினதும் பார்த்தா& அதுல வித்தியாசமான கலர்ல, பயங்கரமான உருவத்தோட ஒரு மீன் மாட்டுச்சாம். அது பெரிய ஷார்க் மாதிரியே இருந்துச்சாம்.

‘இது என்ன வித்தியாசமான மீனா இருக்கேல் ன்னு அதைப் பார்க்க ரொம்ப பயமா இருந்ததாம் அவருக்கு. அதனால் தூண்டிலை அப்படியே போட்டுட்டு பயந்து வீட்டுக்கு ஓடிப் போயிட்டாராம்.

‘மீன் எங்க,மீன் எங்க?’ ன்னு அவரோட பிள்ளைங்க பசியில அடம் பண்ணாங்களாம்.

அப்புறம் அவரு அவங்கள சமாதானப்படுத்தி அந்த மீனைப் பத்தி சொன்னாராம்.

’அச்சோ அப்பா! மீன் கரைக்கு வந்துட்டா தா செத்திடுமே! அப்புறம் ஏன் பயந்துட்டு வந்தீங்க?’ ன்னு பிள்ளைகள் கேட்டு சிரிச்சாங்களாம்.

’அட, ஆமாம்ல! பதட்டத்துல அதை மறந்துட்டேனே’ ன்னு சொன்னாராம்.


அதுக்கப்புறம் மறுபடியும் குளத்துக்குப் போய், தூண்டிலை எடுத்துட்டு, வேற மீன் பிடிச்சிட்டு வந்து சமைச்சு சாப்பிட்டாங்களாம்.

நீதி:

பயம் வந்தா பதட்டப்படக் கூடாது. அடுத்ததாக என்ன செய்யணும்னு யோசிச்சு புத்திசாலித்தனமாக செயல்படணும். நன்றி!

**பி. ரிதன்யா**, ஒன்றாம் வகுப்பு, முசிறி

# அடுத்த தலைமுறை



செ.ப. கமல்சங்கர், சென்னை

ராசர்பாடினு ஒரு நகரம் இருந்துச்சு அங்கே அதிகமான மக்கள் வசித்து வந்தார்கள். பல வீடுகள் இருந்தும் ஒரு ஒரு வீட்டுக்கும் இடைவெளி மிக அதிகமாக இருந்தது. சாலைகளிலும் அதிக போக்குவரத்து கிடையாது. -ரேஷன் கடை போன்ற முக்கிய இடங்களிலும் அதிக கூட்டம் இருக்காது . சாலைகளில் எல்லாம் மின்சார வண்டிகள் தான் போகும்.

ஆனால் வாரத்தின் கடைசி நாள் மட்டும் ஒரு இடத்தில் அதிக கூட்டமாக இருக்கும் அது தான் அந்த ஊரின் முக்கிய பகுதியான மிக பெரிய சந்தை. இங்கு சிறு குறு வியாபாரிகளின் அனைத்து பொருட்களும் விற்பனைக்கு இருக்கும். மளிகை சாமான்கள் முதல் வீட்டுக்கு தேவையான அனைத்து பொருட்களும் இங்கே கிடைக்கும். எல்லோருக்கும் ஒரு மரக்கன்றுகளும் வழங்கப்படும்.

குழப்பமாக இருக்கா? அதைப்போல தான் அந்த ஊருக்கு புதுசா குடிபெயர்ந்து வந்த சக்கரவர்த்தி என்ற பையனுக்கும் இங்கு நடப்பது எல்லாம் மிகவும் புதுசாக இருந்தது. சக்கரவர்த்தியின் அப்பா ஒரு மென்பொருள் வேலை பார்த்தார் அதனால் எப்பொழும் பணிநிமித்தமாக அவருக்கு பணியிட மாற்றம் நடக்கும். அப்படித்தான் மாறி இந்த ஊருக்கு வந்து இருந்தார்.

சக்கரவர்த்தி அந்த ஊரில் உள்ள பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து இருந்தான். அவன் இதுவரை இருந்த ஊர் போல இப்போ உள்ள ஊர் இல்லை. அவன் இதுவரை இருந்த ஊரில் மக்கள் குறைவாக இருந்தாலும் இடநெருக்கடி மற்றும் வாகன நெருக்கடி அதிகமாக காணப்பட்டது. ஆனால் இந்த ஊர் அவனுக்கு புதுவிதமாக இருந்தது.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை அன்று எல்லோரும் ஒரு விலங்கின் சிலைக்கு முன் கூடினர். அதன் முன் ஒரு உறுதிமொழி எடுத்துக்கொண்டு அனைவரும் கலைந்து சென்றனர். இப்படி அங்கு நடப்பது எல்லாம் சக்கரவர்த்திக்கு மிகவும் மர்மாகவே இருந்தது. அவனுக்கு ஏதுமே புரியவில்லை இதைப்பற்றி யாரிடம் கேட்பது என்றும் தெரியவில்லை.

மறுநாள் பள்ளிக்கூடத்துக்கு சென்று யாரிடமாவது கேட்கலாம் என நினைத்தான். அதுபோல அங்கு சென்றதும் அந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்த வசந்த்திடம் சென்று கேட்டான். ஆனால் எனக்கும் இந்த சந்தேகம் இருந்தது நான் இதுபற்றி யாரிடமும் கேட்டதில்லை நண்பா. வேண்டுமானால் ஒன்று செய்ய லாம் என் வீட்டின் அருகில் ஒரு பாட்டி இருக்கிறார்கள் அவர்களிடம் சென்று கேட்டு பார்க்கலாம். என்னுடைய பல நாள் சந்தேகத்திற்கும் பலன் கிடைத்தது போல இருக்கும் என்றான்.

சரி வா, நாளைக்கு நாம அந்த பாட்டியை போய் பார்க்கலாம் என்றான் வசந்த்

மறுநாள் அந்த பாட்டியைப் பார்க்க இருவரும் சென்றனர்.

பாட்டி, பாட்டி என்று அழைத்து கொண்டே வீட்டின் உள்ளே இருவரும் சென்றனர். பாட்டி இந்த ஊர் நான்

பார்த்த மற்ற ஊர்களை அல்லாமல் மிகவும் வித்தியாசமாக உள்ளதே ஏன் என்றான் சக்கரவர்த்தி கண்டிப்பாக சொல்கிறேன் கண்ணா

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்பு இந்த இடத்தில் மிக பெரிய காடு ஒன்று இருந்தது. அந்த காட்டில் உள்ள விலங்குகள் மற்ற காட்டு விலங்குகளளைப் போல அல்லாமல் நன்றாக பேசும். அவைகள் அந்த காட்டில் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தது. அந்த காட்டில் உள்ள மரங்கள் அனைத்தும் மிகவும் விசேஷமானவை அதனால் அதனை வெட்டி செல்ல நிறைய மனிதர்கள் துடித்தார்கள். காட்டில் உள்ள விலங்குகள் பேசுவது மட்டுமல்லாமல் மனிதர்கள் பேசுவதை புரிந்து கொள்ளும். அதனால் யாராலும் இந்த காட்டை ஒன்றும் செய்யமுடியவில்லை.

ஒரு நாள் அந்த காட்டில் உள்ள மரங்களை வெட்ட ஒரு மனிதர்கள் கூட்டம் முடிவு கட்டியது. இதனை அறிந்த முயல் கூட்டம் அரசரிடம் வந்து கூறியது இதனை தடுக்க அனைத்து விலங்குகளும் சேர்ந்து ஒரு அவசர கூட்டம் நடத்தின.

எல்லோரும் நான் சொல்வதை கவனமாக கேளுங்கள். தெற்கு பக்கமாக மனிதர்கள் உள்ளே நுழைந்து காட்டையே அழிக்கப் பார்க்கிறார்கள். அதை தடுக்க நடவடிக்கை எடுக்கவே இந்த கூட்டம் என்றது சிங்கம்.

அவர்களை உள்ளே வராமல் தடுக்க ஒரு கயிறு கட்ட வேண்டும். அதற்கு குரங்கும் முயலும் முல்லை கொடி எடுத்து வந்து கயிறு தயார் செய்யுங்கள். அவர்களைப் பிடிக்க ஒரு குழி வெட்ட வேண்டும் அதற்கு யானை அவர்கள் தண்ணீர் கொண்டு வந்து மண்ணை நனையுங்கள். காண்டாமிருகமும் நீர்யானையும் சேர்ந்து பள்ளம் தோண்டுங்கள். அந்த பள்ளத்தை மறைக்க காய்ந்த இலைகளை ஒட்டகச்சிவிங்கி சேகரித்து வாருங்கள் என்றது சிங்கம்.

சனிக்கிழமை இரவு சிங்கம் சொல்லியது போல அனைத்தும் நடந்தது. குரங்கும் முயலும் தயாரித்த கயிற்றை புலியும் சிங்கமும் சேர்ந்து கட்டின. அவர்கள் நினைத்தது போல மனிதர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை உள்ளே நுழையும்பொழுது விலங்குகள் விரித்து வைத்த வலையில் மரங்கள் வெட்ட வந்த மனிதர்கள் மாட்டிக்கொண்டனர்.

அப்பொழுது அங்கு வந்த சிங்கம் அவர்களிடம் பேச ஆரம்பித்தது. இந்த இயற்கை எல்லா உயிரினகளுக்கும் பொதுவான ஒன்று. அதை இப்படி நீங்கள் அழித்தால் எல்லோரும் அழிந்து விடுவோம். அது போல இந்த மொத்த காடும் நாங்கள் அனுபவிக்க விரும்பவில்லை. நாங்கள் இந்த காட்டில் ஒரு பகுதியை மட்டும் எடுத்து கொள்கின்றோம்.

நீங்கள் மற்ற இடங்களில் மனிதர் குடிபெயர்ப்புக்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் எனக்கு ஒரு வாக்குறுதி தர வேண்டும் என்றது சிங்கம்.

என்ன சொல்லுங்கள் சிங்கராஜா எங்களுக்கும் முழுக்காடும் வேண்டாம் சிறு இடம் மட்டும் போதும் என்று மரம் வெட்ட வந்தவர்கள் கூறினர்.

சரி, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இங்கு வசிக்கும் அனைவரும் மரக்கன்றுகள் நட வேண்டும். நீங்கள் அழிக்கும் இந்த காட்டை நீங்களே பசுமையாக உருவாக்க வேண்டும்.

அதுமட்டுமில்லாமல் அதிக புகைகள் வெளியிடும் வாகனங்கள் போக்குவரத்து

சாதனங்களை பயன்படுத்த கூடாது. குடி இருக்கும் வீடுகள் குறைத்த பட்ச இடைவெளியில் இருக்க வேண்டும். வீடுகளை சுற்றிலும் மரங்கள் இருக்க வேண்டும்.

காற்றை மாசுப்படுத்தும் நீரைமாசு படுத்தும் எந்த தொழில்நுட்பமும் இங்கே வர கூடாது.

மக்கள் விளைவிக்கும் காய்கறிகளை சந்தை மூலம் வாங்க வேண்டும். இதை யெல்லாம் எப்பொழுதும் கடைபிடிக்க வேண்டும் இதை நீங்கள் செய்ய தவறினால் நாங்களும் இயற்கையும் சேர்ந்து உங்களுக்கு கண்டிப்பாக தண்டனை கொடுப்போம்.

நீங்கள் மிக பெரிய அழிவை இழப்பை சந்திக்க நேரிடும் மறந்து விடாதீர்கள் என்றது சிங்கம்.

கண்டிப்பாக நீங்கள் சொன்னதை நிச்சயம் கடைப்பிடிப்போம். இதை வரும் தலைமுறை பின்பற்ற ஊருக்கு நடுவில் உங்கள் சிலை அமைத்து அதன் முன் வாரத்தின் கடைசி நாள் அன்று உறுதி எடுப்போம் என்று கூறினார்கள்.

அதை தான் கண்ணா இதுவரை பின்பற்றி வருகின்றோம். நீங்களும் இதை கடைபிடிக்க மறக்காதீர்கள் என்று சொல்லி முடித்தார் பாட்டி.

மிக நல்ல விஷயம் பாட்டி சக்கரவர்த்தியால் எனக்கும் பல நாளாக இருந்த பல கேள்விகளுக்கும் பதில் கிடைத்து விட்டது என்றான் வசந்த். இருவரும் மிகுந்த மனநிறைவுடன் அங்கு இருந்து கிளம்பினார்கள். அடுத்த தலைமுறைக்கு இதை எடுத்து சொல்ல அவர்கள் தயாராகிவிட்டார்கள். ■

# பத்து கால்கள் நண்டு

×××

பத்து கால்கள் நண்டு ஒன்று
பக்கவாட்டில் நடக்குது
முத்து போல கண்ணு இரண்டு
தண்டுகள் மீது இருக்குது


தட்டையான ஒடு சுமந்து
தண்ணீரிலே விளையாடுது
சிறுசிறு கால்கள் எல்லாம்
சிட்டுசிட்டுனு அசையுது

அலை வரும்போது ஓடி
அடியில் ஒளிந்து கொள்ளும்
அமைதியான கடல் நண்பன்
அழகாக வாழ்ந்து கொள்ளும்

நண்டு சொல்வதைக் கேட்போம்
நம்ம கடலைக் காப்போம்
குப்பை எதுவும் போடாமல்
குட்டி மனசு வளர்ப்போம்

**அன்புச்செல்வி சுப்புராஜு**
பட்டாபிராம், சென்னை – 600072





ஜீ.தேஜேஷ்
அரசு நகராட்சி நடுநிலைப் பள்ளி
கோவில் பதாகை




ஜீ.நறுமுகை
அரசு நகராட்சி நடுநிலைப் பள்ளி
கோவில் பதாகை





இரா.ஷிவானி
அரசு நகராட்சி நடுநிலைப் பள்ளி
கோவில் பதாகை



இரா.சோபிகா
அரசு நகராட்சி நடுநிலைப் பள்ளி
கோவில் பதாகை

**நூல்:** **நூலாசிரியர் : கவிஞர். அன்புச்செல்வி சுப்புராஜூ**

# லாந்தர் விளக்கின் வெளிச்ச சிதறல்கள் (தன்முனைக் கவிதைகள்)




லாந்தர் விளக்கின் வெளிச்ச சிதறல்கள் 'ஏகாந்தம் தொட்டு, எதார்த்தம் பேசி, நுட்பக் காதல் நயமாய் கூறி நகரும் அழகிய மாலை நேரத்து கதம்பமாலை. மரிக்கொழுந்து. சாமந்தி, இளஞ்சிவப்பு அரளியும், சம்பங்கியுமாய் பச்சை, மஞ்சள், சிவப்பு, வெள்ளை என மிளிர்ந்து, விரைந்தோடும் கால்களையும் நிறுத்தி. கணநேரம் கண்ணைக் கவர்ந்து, கருத்தில் நுழைந்து, நகர்ந்து சென்றாலும் நுகர்ந்த மணம் நாசியைத் தாண்டி யோசிக்க வைக்கும் கலவைதான் கவிஞர். அன்புச்செல்வி சுப்புராஜூ எழுதியுள்ள இந்த அழகியத் தன்முனைக் கவிதைகள்.

இயற்கையைப் பேசும் அழகியல், மனப்பதிவுகளின் நுட்பங்களைப் படம் பிடிக்கும் மனம் சார்ந்த கவிகள், சூழல் பேசும் சீரிய வரிகள், மழையைப் பார்த்ததும் மகிழும் மழலையாய் குழந்தை மனக்கவிதைகள் என அணிவகுக்கும் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒருவித அழகு. சில தூரத்து விண்மீன்களாய்ப் பார்க்கப் பார்க்க நெருங்கி வந்துக் கண் சிமிட்டிக் கதை பேசுகின்றன. சில விடிவெள்ளியாய் விழி பார்த்த விநாடியில் வியக்க வைக்கின்றன.

முரண்களால் முட்டி மோதி முதிய பருவத்தை முள்காடாய் மாற்றும் மனித மனத்தை மெல்ல அதட்டி, அன்பாய் பேசி, முரண்களைத் தகர்த்து, வியந்து உலகம் விழி விரிக்க அந்திமத்தில் ஆழ்ந்த நிம்மதி காண் என்ற நேர்மறைச் செய்தியை கூறும் கவிதை, நூலாசிரியரின் ஆழ்ந்த அனுபவத்தையும் அதை நயம்பட நான்கு வரிகளில் கவிதையாக்கும் திறனையும் சொல்கிறது. நூலின் தொடக்கப் பக்கங்களில் வரும் இக்கவிதை மேலும், மேலும் கவிஞர் கூற வரும் கருத்துகளைக் காண நூலின் அடுத்தப் பக்கங்களைப் புரட்டிப் படிக்கத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

அதைத் தொடர்ந்து வரும் இரண்டு போதி மரங்களைப் பற்றிக் கூறத்தான் வேண்டும். முதலாவது, ஆசைகளை அள்ளித் தின்னும் போதி மரச்சுள்ளிகள். அது ஆழமும் நுட்பமும் நிறைந்தது என்றால். மறு போதி மரக்கவிதையில். ஆசை நிலா எட்டிப்பார்த்து அழகியல் வகைமையில் சிக்குவது சிலாகிப்பு.

**கொத்தாய் சுருளும் மனிதம்**
**மீண்டும் மரமாகி விடுவோமா**
**ஆலோசனை செய்கின்றன**
**மேசைகளும், கட்டில்களும்.**

அழிந்துபடும் மனிதத்தை பேதமையை சுட்டும் வார்த்தைகளை சுட்டெரிக்கும் சூழழியல் கவிதைக்குச் சான்றாக்கலாம்.

மௌனமும், நிசப்தமும் கவிஞரின் பல கவிதைகளுக்கு நிறைவாகப் பின்னணிக் குரல் கொடுத்துள்ளன.

**கேட்கப்படும் கேள்விகள்**
**வேள்வியில்வீழ்கின்றன**
**ஆழ்ந்த மௌனங்களில்**
**விடைகளும் அடக்கமாகின்றன.**

அதைத் தொடர்ந்து,

**வாய் மூடி பேசினாய்**
**விழிகள் மொழிபெயர்த்தன**
**மெல்ல அசைகிறது**
**எனது நிசப்தம்.**

சிற்றுயிர் கொண்டு வாழ்வின் பெரும் நம்பிக்கை பேசும் கவிதையாக மலர்ந்துள்ள மலர்வனத்தின் துகள்கவிதை.

பயணப்படும் மகரந்தப் பார்வை பெருவழி இயக்கத்திற்கு சிறுதுளி சான்று.

**தேடலை அடைவோம்**
**நம்பிக்கையுடனே பயணிக்கிறது**
**வண்டின் கால்களில்**
**ஒட்டியிருக்கும் மகரந்தம்.**

கனிந்த காதல் பேசிவரும் கவிஞர் 'நினைவில் இருந்து விலகி நில்லேன்' என இறைஞ்சுவது நகர்ந்து விடாதே நான் உன்னை அன்றி வேறு என்ன எழுதிவிடுவேன் என நினைக்கிறாய் என்று கூறுவது போல் வந்தமர்ந்த குளிர்ச்சொற்கள்.

ஒருங்கே சுமந்துகொண்டு ஒட்டாதென நடத்தும் ஓரங்க நாடகத்தை ஓசையில்லாமல் பேசும் மனநேசக் கவிதை இந்நூலின் அழகிய அங்கமாகி அணி சேர்க்கிறது.

சுயம் இழந்தாலும் மானம் காக்கும் சாயமிழந்த ஆடை என எதார்த்தம் பேசும் எளிய எழுத்துக்கள், ஆயின் ஏற்படுத்தும் தாக்கமோ அதீதம். ஞானப்பெருவெளியும் பரவெளி வெளிச்சமும் கை கோர்த்தும் வரும் கவிதைகள் பக்கம் 40ல் பார்வைக்குக் காத்திருக்கின்றன.

நிசப்தத்தின் நிதர்சனம் கூறும் நிச்சய மொழிகளை தூரிகையாக்கி பெருவெளிக்கு கைகாட்டியாகநிற்கும்மைல்கல் கவிதைகளும் இதில் காணக்கிடைக்கின்றன.

நிகழ்காலத்தை நிர்கதியாக்கி விட்டு, மெல்ல விழுங்கும் மலைப்பாம்பாய் எதிர்காலத்தின் குரல்வளை நெரிக்கும் இறந்தகாலத்தின் நினைவு நீட்சிகளைக் கூறும் கவிதையினையும், மௌனத்திற்கு ஆயிரம் அர்த்தங்கள் கூறும் அகராதியின் பக்கங்களையும் பற்றிக் கூறாமல் நகர்ந்தால் லாந்தர் வெளிச்சத்தில் சிறந்தவைகளை மறந்தவள் ஆகிவிடுவேன்.

**உதிர்ந்த எச்சத்தில்**
**முளைத்த மரத்திடம்**
**பெருமை பேசுவதில்லை**
**எந்தப் பறவையும்**

மேலோட்டப் பார்வைக்கு ஒரு சூழமியல்சொற்கோவையாகத்தெரிந்தாலும் சுடர்விடும் சுத்தவெளியின் அத்வைதம் பேசி ஆணவம் அழித்துவிடடா அற்பப்பதரே! என சொல்லும் (செல்லும்) ஆழங்கள் அது பல காத தூரம். சுடும் எதார்த்தத்தின் எடுத்துக்காட்டாய் வரும் சொற்கள்... இதோ உங்கள் பார்வைக்கு&வாழ்க்கையின் முரணுக்கு முன்னுதாரணம் என்றும் கூறலாம்.

**அடிவயிற்றுத் தீயை**
**அணைக்க வந்ததோர் சடலம்**
**வெட்டியான் முகத்தில்**
**கீற்றாய் மகிழ்ச்சி.**

தனிமை, வெறுமை, வெம்மை என வரிசை கட்டி வந்து மனஆழம் கூறும் மானுடக் கவிதைகள் ஒவ்வொரு முறை படிக்கும் போதும் புதுப்புது பொருள் தரும் பன்முகம் கொண்டவையாக உள்ளன.

**நிதர்சனங்கள் உணர்த்தும்**
**நிறைவின்மை வெளியில்**
**நிசப்தமாக உழல்கிறது**
**தனிமைக் குடுவை**

இவ்வரிகளை ஒரு சோறு பதமாக கொள்ளலாம்.

வனப்பேச்சிவண்ணத்தமிழை வசப்படுத்தி, வானம் நோக்கி கை விரித்து விடுக்கும் வேண்டுகோள், ஆஸ்திரேலியாவின்கக்கியகனல்காட்டினையும், கலிஃபோர்னியாவின் வருடாந்திர காட்டுத் தீயையும் கிளறி கண்முன் கொண்டு வரும் சூழலியல் சார்ந்த ஆத்மார்த்த கவிதைகள்.

**எதிர்வினை ஆற்றவியலா எல்லையில் முளைக்க முயலும் விருப்ப விதைகள்.**

**விலங்கிட்ட மனத்தை வேடிக்கை மட்டுமே பார்க்கக்கூடிய நாதியற்ற சுதந்திரம்.**

**வலுவிழந்த கணத்தின் வாழ்க்கைப் பாடம் உறுதியென விளைய.. நிலைத்த நிம்மதி.**

**போனால் போகட்டுமென வெஞ்சினம் விடுத்தது நிமிர்வின் உச்சம்.**

**இழிந் தலையும் பழித் தலையும் கடந்துசெல். பேரன்பும் பிரியங்களும்.**

மாபெரும் சக்தியாய் கிட்டுமென்ற ஞானச்சிதறல் லாந்தர் விளக்குத் தரும் வாழ்க்கை வெளிச்சங்கள் ஆகின்றன.

ஆழ்மன வடுக்களை வலக்கரத்தால்

புறந்தள்ளி, புறப்படு காத்திருக்கிறது எனக்கான பேரன்பும் பிரியங்களும் நிரம்பிய வாழ்க்கை என்ற விவேகம் விதைத்த கவிகளின் பட்டியல் தான் மேலே காணக் கிடைக்கிறது.

**தன்னைத் துளைத்த வண்டிற்கு நன்றி கூறும் மூங்கில்**

**ஓங்கிய மரத்தின் உச்சிக் கூடு பார்த்து வியக்கும் அடுக்ககக் குருவியின் அவலம். காற்றில் மனித வாசனை கதிகலங்கும் மரக்கிளைகள்.**

**புளியம்முத்துக்களை முதிர் மரமாய் காணும் கருணைக் குழந்தைகள்.**

**மரமாகும் ஆசையுடன் குறுகித் தவிக்கும் போன்சாய்கள்.**

**பூ விழி துடைத்து பூத்து மகிழும் புது மலர் மழலை உள்ளம்.**

**கோடரியைக் கோபிக்கும் அறச்சீற்ற அரும்பறவை.**

**விழுதுகள் நிலத்தில் ஊன்ற கனவுகளுடன் காத்து நிற்கும் வேர்கள்.**

*மரத்தையும் மண்ணையும் மலரையும் பேசும் கவிச்சித்திரங்கள் அவற்றை மட்டும் பேசவில்லை என்பதை நாம் அறிவோம். அவற்றுடன் ஊடாடி மனித மனங்களின் அவலங்களையும், அலைக்கழிப்புகளையும் அலசி, மழலைகளிடமும், சிற்றுயிர்களிடமும் உள்ள அறமும், அன்பும் மனிதனிடம் முகவரியற்றுப் போன முகாந்திரம் என்னவென்று வினாக்களை வீசிச் செல்கின்றன.*

*அருந்தமிழறிஞர். கவிஞர். ஆரூர் தமிழ்நாடன் அவர்களின் அழகிய அர்த்தம் பொதிந்த காலத்தின் மகுடம் காத்திருக்கிறது என்ற நேர் மறை வாழ்த்துடன் அமைந்துள்ள அணிந்துரை, வெளிச்சத்தோடு வெண்ணிலவை வாழ்த்த அழைத்து வந்துள்ள இயக்குனர். திரு.இராசி அழகப்பன் அவர்களின் வாழ்த்துரை, பக்கம் தோறும் பறவைகளைக் கொண்டு அழகியல், சூழலியல், மானிட மன நிகழ்வுகள், காதல் என கவிதைகள் புனைந்தது கண்டு சிறகோபதேசம் என சிலாகிக்கும் சீரிய பத்திரிகையாளரான திரு.மானா பாஸ்கரன் அவர்களின் வாழ்த்துரை அனைத்தும் இந்நூலுக்கு பெருமை. சேர்க்குமாறு விளங்குகின்றன. மூன்று அறிஞர்களும் ஆழ்ந்து படித்து இரசித்து உணர்ந்து இந்நூலிலிருந்து கவிதைகளை மேற்கோள் காட்டி வாழ்த்தியுள்ளது நூலின் பால் அவர்களுக்குள்ள ஈர்ப்பினை காட்டுகிறது, இதனை நூலாசிரியருக்கு மகுடத்தில் மற்றுமொரு சிறகெனக் கொள்ளலாம்.*

*இரணங்கள், வலி இவை கொடுத்த வலிமை, வழிமுறைகள், வலியின் வரமாய் பிறந்த வாய்ப்புகள் என மனச்சுவடுகளை மாறிமாறிப் பேசி வந்தாலும், காதலும், கருணையும் அழகியலும் என்ற கலவைதான் வாழ்க்கை, அவற்றை கையாளும் திறனில் தான் வாழ்வின் மகிழ்வு அமைந்துள்ளது என்பதைக் கூறும் முகமாக பல்வேறு கவிதைகள் கொண்ட அழகிய நூலினை வாசித்த அனுபவம் அகத்தினை விட்டு அகல்வது அரிது.*

**முத்தாய்ப்பாக**
**அடர் இருளில்**
**என்ன தான் பேசுகின்றன?**
**மொட்டவிழ்ந்த**
**வெளிச்சப் பூக்கள் !!**

*என்ற அழகியலோடு கூடிய கவிதை வரிகளோடு விடைபெற்றால் நாளையென்ற அடுத்த நகர்வுக்கு மகரந்த மணம் ஒரு வழித் துணையாகும் என்று நம்பிக்கையுடன், நற்கவிகள் மென்மேலும் தர உளமார வாழ்த்தி மகிழ்கின்றேன்.*

**ராஜி வாஞ்சி**

ஹூஸ்டன், டெக்சாஸ்.

அமெரிக்கா.



## புன்னகை

தூரிகையின் புன்னகை
அவள் ஓவியத்தின்
இதழ்களில்
தெரிகிறது.

## வணங்குகிறோம்

கடவுளை வணங்கும் போது
கடவுளை மட்டுமின்றி
தீபம் காட்டுகிற
அர்ச்சகரையும்
சேர்த்தே நாம்
வணங்கிக் கொண்டிருக்கிறோம்.

## மேகம்

வான் மேகம்
பகுத்தறிவாளனாக மாறி
கருப்பு உடை
அணிந்த பிறகே
நமக்கு மழையைத்
தருகிறது.

## நடனம்

கப்பல்கள்
தனது நடனத்தை
கடல் மேடையில்
அரங்கேற்றுகிறது.

## சுமை

மூட்டை தூக்கும்
வேலைக்கு செல்வதில்லை
புத்தக மூட்டையை
சுமந்த
குழந்தைகள்.



**கவிஞர் எம்.சோலை**
அம்பத்தூர்.

# மங்கையர் முடிவு

தன்முனை சரம்

●

என் உறுதி
என் மனம்
என் கனவு
என் இலக்கு

●

என் முடிவு
என் விருப்பம்
என் கடமை
என் கண்ணியம்

●

பெண் பேசும் பேச்சு
மண் ஏசும் இன்று
ஒண்சுடர் அவள் என்றே
பண் பாடும் என்றும்



**சசிகலா விஸ்வநாதன்**

# அஞ்சா நெஞ்சம்

அஞ்சா நெஞ்சம்
அடிபணியா ஆளுமை
துஞ்சாத வீரம்
தூரநோக்குடன் தூய்மை

அலி கொமய்னி
அகிலத்தின் அதீவீரர்
இறுதிவரை உறுதியோடு
இஸ்லாத்தின் ஆணிவேராய்

மண்டியிடாத மகாவீரர்
மரணத்தில் மண் கலங்க
மனிதரிலே புனிதராக
மறுவுலகம் ஏகிவிட்டார்

இறகைவிட லேசாக
அவராத்மா உயர்ந்துசெல்ல
இறுகியமலைக் கனமாய்
எம்முள்ளம் அழுத்தமாக

குடும்பசகிதம் சென்றுவிட்டார்
கவின்சொர்க்கம் கண்டிடவே
ஷஹீதுடைய சோபனங்கள்
சேமமாய் சூழ்ந்திடவே

அடிமைசாசனம் உட்படா
அதீதநம்பிக்கை மானிடர்
ஆட்டமிடும் பொம்மையாய்
மாறிடாத தியாகியார்

வீரம்செறிந்த இதயத்தை
வைத்திருந்த நாயகர்
வீணிலே தன் நாடுதனை
விட்டுக்கொடுக்கா பெருமகன்

தள்ளாதவயதிலும் அடிபணியா
தீரமிக்க தலைவராய்
தரணியிலே வாழ்ந்திட்டார்
தேசம் காத்து நிலைத்திட்டார்

அதிகாரக்கும்பல் செய்திட்ட
சதிகாரச்செயலில் மாட்டியே
மேலான உயிரை மாய்த்திட்ட
மேன்மையின் மகாதலைவராய்

விதைத்த விதைகள் உறங்குமா
எதிர்த்த கதைகள் மறக்குமா
விதியின் கையில் நீங்களும்
விலை தந்து விரைந்தீரோ

புதைந்த உண்மைகள் யாவுமே
பூதமாய் வெளிக்கிளம்பியே
பேரதிர்ச்சி பேரிடியென
பகைவரைச் சூழ்ந்திடுமே

சர்வதேசம் ஆண்டிடும்
சர்வாதிகாரம் மாண்டிடும்
சமநீதி சகத்தினில்
சீக்கிரம் எழுந்து தளைத்திடும்

கொமய்னி நீங்கள் உலகினில்
காட்டி விட்ட வழிதனில்
எதிர்த்து நின்று நிலைக்குமே
எங்களணி ஜெயிக்குமே

வீரவணக்கம் தியாகியே
விடைதந்தோம் தலைவரே
வலிக்கும் இதயத்தில் வீரரே
வலிமையின் சிகரம் நீங்களே!!

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

# சொல்லாத காதல் !?



மனதுக்குள்ளிருந்த காதல்
மஞ்சரியான நோதல்..

அறுத்துக் கொண்டே
அழுதாகும் ஆர்ப்பரிப்போடே..

நெஞ்சுக்குள் வேகும்
நெகிழியாய் வழியும்...

திங்களின் தண்ணொளியாய்
தின்னும் ஆதவனாய்...

திருவிழா இடிபாடுகளில்
திருதிருவென்றே குழந்தையாய்..

கனவுகளின் காட்சிகளில்
கரவொலி எழுப்பிடும்..

ஊனத்தின் உண்மையை
ஊமையான சோகமாக்கும்.

சிறகிழந்த பறவையின்
சிக்கலான ஆசையிலா?

**கவிமணி. இரஜகை நிலவன்**
மும்பை...



## துளிப்பாக்கள்...

1. தாகம் கொண்ட கண்கள்
கடலை சிறிதாக்கியது
நீரூற்று

2. விடுமுறை நாள்
வகுப்பறை இருக்கையில்
வண்ணத்துப்பூச்சி

3. தனிக்குடித்தன வீடு
ஒரே கூட்டில்
பலவண்ணப் பறவைகள்

4. தூண்டும் விரல்
காட்டிக்கொடுக்கிறது
தீபத்தின் ஜோதி

5. குளத்தில் தூண்டில்
ஆடி நடுங்குகிறது
விண்மீன்



6. முற்றிய கதிர்கள்
இளைத்து வருகிறது
எலி வளை

7. நகரும் காற்று
திசையைக் காட்டுகிறது
தலை சாயும் தீபம்

8. மீன் கொத்திப் பறவை
அலைகளால் துரத்துகிறது
பெருங்கடல்

9. விலகும் கார் மேகம்
வாலை ஆட்டுகிறது
காகிதப் பட்டம்

10. வயல் வெளியில் வீடு
புகைப்படத்தில் இருக்கிறது
அப்பாவின் தோளில் கலப்பை...

**ஐ.தர்மசிங்**
நாகர்கோவில் ,கன்னியாகுமரி

# ஹைக்கூ... 

1. வாகனம் குப்புறம் கவிழ்ந்தது
வண்டியில் இருந்த முட்டைகள் பலவும்
உடைந்து வீதி நிரம்பியது ..

2. மதுபானங்கள் நிரம்பிய வாகனம்
வீதியில் விபத்துக்குள்ளானதால்
குடிமகன்கள் மகிழ்ச்சி.

3. நூலகத்தில் தலைக்குனிந்து படித்தவர்கள்
என்றுமே தலை நிமிர்ந்து நடக்கிறார்கள்
சரஸ்வதியின் பூர்ண ஆசியில் .

4. வாசிப்பினை தினமும் நேசித்தார்
முயலாமையினை ஓரந்தள்ளினார்
பாரததேசத்து ஜனாதிபதி யானார் ,

5. ஆமைபோல் பொறுமை கொண்டிடலாம்
முயல் வேகம் பெறலாம் ஓட்டத்தில்
முயலாமையால் தோல்விநிச்சயம் .

6. காலை வணக்கம் பரிமாறும்
நட்பு வட்டங்கள் காட்டுகின்றன
மனித நேயப்பண்பாடு .

7.நல்வணக்கம் ஒன்று போதும்
முகநூல் நண்பர்களின் விருப்பம்
உறவுகள் தொடர்கின்றன

8. புரிதலால் ஏற்படும் உறவு
கணவன்,மனைவி வாழ்வினில்
அன்யோன்யம் நீடிக்கின்றது.

9.அருள் தினமும் வேண்டும்
அதன் வழி நடந்தால் கிடைத்துவிடும்
நல்ல ஞானம் .

10. தூண்டிலில் புழு
ஆசைப்பட்டது மீன்
மீனவனுக்கு ஆதாயம்.

11. புதிய தலைமுறையினர்
ஆன்ட்ராய்டு அலைபேசிக்கு
அடிமையாகிவிட்டனர்

12. தோசைக்கல் உள்ளே இருந்தால்
நல்ல உணவகம்
வெளியே இருந்தால் கையேந்தி பவன்.

13. பூக்கள் மலர்வதால்
வண்டுகளின் வரத்து
குறைந்து விடுகிறது.

14. கூட்ட நெரிசல்
உரசல்கள் ஏராளம்
அங்காடித்தெருவில்

15. நகரும் நத்தை
வேடிக்கை பார்க்கிறது
முயல்.

16. பெண்கள் விடுதி
சிரிப்பும் கிண்டலும்
அதிகமாகவே கேட்கின்றது.

17. வறண்டகுளத்தில்
நிலவை பார்த்திட
காத்திருக்கின்றது தவளை...

18. கம்பளி போர்வை
அலமாரியில் இருந்து வெளிவந்தது
மார்கழி மாதம் .

19. மறைந்த மனைவியை
நினைவுபடுத்துகிறது
மார்கழி மாத கடும் குளிர்.

20. அடிக்கடி தண்ணீர் தெளித்தும்
வாடிப்போயிருக்கும்
மீன்காரியின் முகம்.

இரா.சீ.பாலகுமார் .M .A.,



தொடர் : 11

ரஸ்னா ரம்ஸான்
இலங்கை , அக்குறணை

# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்

ஐஸ்வர்யாவின் கையில் இருந்த காபி கப்கள் தரையில் விழுந்து சிதறியது. ஒரு நிமிடம் அந்த அறையில் பரவிய கனத்த மௌனத்தை அந்த சத்தம் உடைத்தது.

ஐஸ்வர்யாவின் கண்கள் விரிந்தன. தன் முன்னே நிற்பது கனவா நனவா என்று புரியாமல் திகைத்து நின்றாள். அதே சமயம், அஷ்வினின் உள்ளத்தில் இத்தனை காலமும் இருந்த கோபம், ஏக்கம், காதல் எல்லாம் ஒன்றாகத் திரண்டு வந்தன. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்த அந்த சில நொடிகள், மற்றவர்களுக்கு ஏதோ ஒரு இனம் புரியாத உணர்வு தோன்றியது.

அவினாஷுக்கு அஷ்வினின் பார்வையை வைத்தே அவன் காதலித்த பெண் இவள் தானோ என்ற சந்தேகம் தோன்றியது.

நிசப்தத்தை கலைத்தாள் ராகினி ‘என்ன அஷ்வின் சேர், அக்கா ரெண்டு பேரும் இவ்வளவு அதிர்ச்சியாகுறீங்க உங்க ரெண்டு பேருக்கு ஏற்கனவே அறிமுகம் இருக்கா?

அந்தக் கேள்வியில் ஐஸ்வர்யா சுயநினைவுக்கு வருகிறாள். அஷ்வின் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, கீழே சிதறியிருந்த கண்ணாடித்

துண்டுகளைப் பார்க்கிறான்.

அஷ்வின் ஏதோ சொல்லவர முன்பே 'இல்ல மா எனக்கு இவர முன்னாடி தெரியாது எல்லாரும் கூட வந்ததால சாலினியோட அண்ணா தான்னு புரிந்து கொண்டேன் அவ்வளவு பெரிய ஹோட்டல் செப்ஃ நம்ம வீட்டுக்கு வந்திருக்காரே அதான் ஷாக் ஆகிட்டன்.

வாங்க சேர் உக்காருங்க எல்லாரும் உள்ள வாங்க வந்து உக்காருங்க

அங்கே நின்றிருந்த ஆனிஷா, அஷ்வினைப் பார்த்ததும் திகைக்கிறாள். அஷ்வினுக்கும் ஆனிஷாவைத் தெரியும். ஆனால் ஐஸ்வர்யா தன் பார்வையாலேயே ஆனிஷாவை எதுவும் பேச வேண்டாம் என்று எச்சரிக்க ஆனிஷா சொல்ல வந்ததை முழுங்கி கொள்கின்றாள்.

அஷ்வினுக்கு ஐஸ்வர்யா மேல் கோவம் இருந்தாலும் காதல் அதிகமாக இருந்தது அவள் அவனை கண்டதும் வந்து தன்னிடம் அடைக்கலமாவாள் என நினைத்தான் அவள் அவனை தெரியாது என கூறியது அவனிதயத்தில் ஈட்டியால் குத்துவது போன்று இருந்தது அவ்வலி அவன் ஈகோவை எழுப்பி விட்டது.

சாலினி ' அண்ணா கொஞ்சம் இந்தப் பக்கம் வாங்க அங்க கண்ணாடித் துகள்கள் இருக்கு

அஷ்வின் மெதுவாக, 'பரவாயில்லை ஷாலு.. சில நேரங்கள்ல நாம ரொம்ப பத்திரமா வச்சிருக்கோம்னு நினைக்கிற விஷயங்கள் கூட இப்படித்தான் கை நழுவி உடைஞ்சிடுது' என்கிறான். இது ஐஸ்வர்யாவை நோக்கி வீசப்பட்ட அம்பு போல இருந்தது. ஐஸ்வர்யா கைகூப்பி, 'ஸாரி சார்... தெரியாம கை நழுவிடுச்சு' நீங்க அந்த பக்கமா உக்காருங்க என்று மிகவும் அந்நியமானவள் போல பேசுகிறாள்.

அஷ்வினின் பார்வை ஐஸ்வர்யாவின் கழுத்தில் பாய்கிறது. அங்கே அந்த செயின் இல்லாமல் இருப்பதை உறுதி செய்து கொள்கிறான்.

அஷ்வின் தன் சட்டைப் பையிலிருந்து அந்த உடைந்த இதயம் கொண்ட டாலரை வெளியே எடுக்கிறான். 'இது உங்களுடையது தானே?'

ஐஸ்வர்யா பேச முன்பே ராகினி ஆமா சேர் இது அக்காவோட ஸ்பெஷல் டாலர் எப்பவுமே அவ கழுத்துல இருக்கும் எனக்கூற ஐஸ்வர்யா தரையை பார்க்க அஷ்வின் அவளை பார்க்கிறான்.

அவினாஷ் மெதுவாக ஐஸ்வர்யாவை ஒரு போட்டோ எடுத்துக்கொண்டு சாலினியின் கைபற்றி வெளியே வருகிறான்.

சாலினி 'ஹலோ எதுக்கு இப்போ வெளிய கூட்டி வந்தீங்க'

அவினாஷ் ஒரு நிமிஷம் சைலன்டா இருங்க எனக்கூறிவிட்டு கவின்க்கு கோல் பன்றான் அழைப்பு ஏற்க்கப்பட்டும்

அவினாஷ் 'டேய் கவின் நா ஒனக்கு ஒரு போட்டோ அனுப்பி இருக்கன் அது அஷ்வின் காதலிச்ச அந்த பொன்னானு பார்த்து சொல்லு

கவின் 'டேய் கன்பார்பம் அவ தான்டா

அவ எங்க இருக்கா

உனக்க்கு எப்டி அவள தெரியும்'

அவினாஷ் 'டேய் கூல் அப்றம் எல்லாத்தையும் சொல்றன் எனக்கூறி அழைப்பை துண்டிக்கிறான்'

சாலினி நடந்த உரையாடலை நம்ப

*முடியாது திகைத்து பார்க்கிறாள்*

*அவினாஷ் 'சாலினி அஷ்வின் அப்றம் இந்தப் பொண்ணு பெயர்... ஹா ஐஸ்வர்யா ரெண்டு பேரும் காதலிச்சி பிரிஞ்சவங்க இன்னமும் அஷ்வின் மனசுல அந்தப் பொண்ணு இருக்கா அவ மனசுல என்ன இருக்குனு தெரியல உண்மை வெளிய வரனும்னா அஷ்வின் ஹோட்டல்ல அந்தப் பொண்ணு வேல செய்யனும்'*

*சாலினி 'ஆதி உண்மையா நா நினக்கல*

*எனக்கும் ஐஸ்வர்யாக்கா அண்ணாக்கு வைஃ ஆக வந்தா சந்தோசம் தான் அவங்க இன்னக்கி செய்த டிஷ்ஷ அண்ணா புகழ்ந்தாரு அத வச்சு அவங்கள அண்ணா ஹோட்டல்ல வோர்க் பண்ண வைக்கலாம்*

*சாலினியும் அவினாஷூம் வெளியே பேசிக்கொண்டிருக்க, உள்ளே வீட்டின் ஹாலில் ஒருவித தர்மசங்கடமான அமைதி நிலவியது. அஷ்வின் கையில் வைத்திருந்த அந்தப் பாதி இதய டாலரை ஐஸ்வர்யாவிடம் நீட்டினான்.*

*'இந்தாங்க... இது உங்களுடையதுன்னு உங்க தங்கச்சி சொல்லிட்டா. கை நழுவி விழுந்த காபி கப் மாதிரி, இதையும் எங்கேயோ நழுவ விட்டுட்டீங்க போல,' என்றான் அஷ்வின். அவனது குரலில் கேலி கலந்த வலி இருந்தது.*

*ஐஸ்வர்யா நடுக்கத்துடன் அதை வாங்கிக்கொண்டாள். 'தாங்க்ஸ் சார்... எங்கேயோ விழுந்துடுச்சு, தேடிட்டு இருந்தேன்,' என்று மட்டும் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர முயன்றாள்.*

*'இருங்க ஐஸ்வர்யா...' அஷ்வினின் குரல் அவளை நிறுத்தியது. 'உங்க சமையலை இன்னைக்கு என் ஹோட்டல்ல டேஸ்ட் பண்ணேன். ரொம்ப பிரமாதம். ஒரு சாதாரண 'சர்வன்ட்' வேலையை விட, ஒரு 'ப்ரொபஷனல் செஃப்' ஆகுற தகுதி உங்களுக்கு இருக்கு. என் ஹோட்டல்ல ஒரு வேகன்சி இருக்கு... நீங்க வந்து ஜாயின் பண்ணிக்கலாம்.'*

*ஐஸ்வர்யா திடுக்கிட்டுத் திரும்பினாள். 'வேண்டாம் சார்... எனக்கு இந்த வேலையே போதும். நான் நிம்மதியா இருக்கேன்.'*

*'நிம்மதியா? இல்ல பயமா?' அஷ்வின் அவளருகே நெருங்கிச் சென்று தாழ்ந்த குரலில் கேட்டான். 'பழைய நினைவுகள் வந்து உன்னைச் சுடும்னு பயப்படுறியா? இல்ல நான் உன் முன்னாடி நிக்கிறதை உன்னால தாங்க முடியலையா?'*

*அப்போது சாலினியும் அவினாஷூம் உள்ளே வந்தனர். சாலினி உற்சாகமாக நடித்தபடி, 'ஐஸ்வர்யா அக்கா! அண்ணா சொல்றது சரிதான். அந்த மெமரீஸ் ரெஸ்டாரன்ட்ல ஒர்க் பண்றது பெரிய விஷயம். ப்ளீஸ் அக்கா... எங்களுக்காக ஒத்துக்கோங்க. அப்போதான் நாம அடிக்கடி மீட் பண்ணலாம்,' என்றாள்.*

*ராகினியும் ஆச்சரியத்துடன், 'அக்கா... இது பெரிய ஆப்பர்சூனிட்டி கா! நீ ஏன் யோசிக்கிற? ஒத்துக்கோ கா,' என்று வற்புறுத்தினாள்.*

*ஐஸ்வர்யா தர்மசங்கடத்தில் ஆழ்ந் தாள். ஒருபுறம் அஷ்வினின் எதார்த்தமான சீண்டல்கள், மறுபுறம் விவரம் தெரியாத தங்கையின் ஆசை. ஆனிஷா மட்டும் ஒரு மூலையில் நின்று ஐஸ்வர்யாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தெரியும், ஐஸ்வர்யா இப் போது ஒரு அக்னிப் பரீட்சையில் நிற்கிறாள் என்று.*

*அவினாஷ் நிலைமையைச் சமாளிக்க, 'சரி... இப்போவே பதில் சொல்ல வேணாம். யோசிச்சு சொல்லுங்க. நாங்க கிளம்புறோம்,' என்றான்.*

அனைவரும் விடைபெற்று வெளியே றினர். அஷ்வின் காரில் ஏறும் முன் ஒருமுறை அந்த வீட்டைத் திரும்பிப் பார்த்தான். ஜன்னல் மறைவில் ஐஸ்வர்யாவின் கண்கள் கலங்கி இருப்பதை அவன் கவனித்தான்.

அவர்கள் கிளம்பிய பின் ரிஷாந்த் கிளம்பும் போது ராகினியை பார்த்து ஏளனமாய் சிரிக்க அவள் முறைத்து விட்டு வீட்டிற்குள் செல்ல ரிஷாந்த் புன்னகைத்தபடி ப்ரியாவை தன் பைக்கில் ஏற்றிய படி தன் வீட்டை நோக்கி சென்றான்.

காரில் செல்லும்போது அவினாஷ் மெதுவாக கேட்டான், 'டேய் அஷ்வின்... எதுக்கு அவளை உன் ஹோட்டலுக்கு வரச் சொல்ற? மறுபடியும் காயப்படவா?'

அஷ்வின் பிடிவாதமாகச் சொன்னான், 'அவ செஞ்சது துரோகம்னு நான் நம்புறேன். ஆனா அவ கண்களைப் பார்த்தா ஏதோ ஒரு மர்மம் இருக்கிற மாதிரி இருக்கு. அவ என் கண்ணு முன்னாடியே இருக்கணும். அப்போதான் உண்மை என்னன்னு எனக்குத் தெரியும்!'

வீட்டிற்குள், ராகினி தூங்கிய பிறகு, ஆனிஷா ஐஸ்வர்யாவிடம் வந்தாள். 'ஐஸ்... அஷ்வின் இன்னும் உன்னை லவ் பண்றான்னு நினைக்கிறேன். ஆனா அவன் பேச்சுல ஒரு வன்மம் இருக்கு. அந்த ஹோட்டலுக்குப் போறது ஆபத்தா கூட இருக்கலாம்.'

ஐஸ்வர்யா அந்த உடைந்த டாலரைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். 'அவர் என்னை வெறுக்கட்டும் ஆனிஷா. அந்த வெறுப்புதான் எனக்குப் பாதுகாப்பு. ராகினிக்காக அந்த வேலைக்கு நான் போவேன்... ஆனா அஷ்வின் கிட்ட இருந்து என் மனசைத் தள்ளியே வச்சிருப்பேன்.

ஆனிஷா 'நீ என்கிட்ட அஷ்வின் துரோகம் செய்ததா தானே சொன்ன அப்போ அவன் மேல தப்பில்லயா'

ஐஸ்வர்யா 'இல்ல அவர் வாழ்க்கைல நா திரும்ப போய் அவருக்கு பாரம் கொடுக்க விரும்பல ஆனிஷா அந்த விடயத்த பத்தி கேட்காத விடு'!'

ஆனிஷா குறுக்கிட்டு, 'ஐஸ்... நீ சொல்றது எனக்குக் குழப்பமா இருக்கு.



என்கிட்ட அழுதப்போ, அஷ்வின் உனக்குத் துரோகம் செய்ததா தானே சொன்ன? இப்போ ஏன் அவர் வாழ்க்கையில பாரமா இருக்க விரும்பலன்னு சொல்ற? அப்போ தப்பு அவர் மேல இல்லையா?' என்று ஆழமாகப் பார்த்துக் கேட்டாள்.

ஐஸ்வர்யாவின் கண்கள் ஒரு நிமிடம் நிலைகுத்தின. மெதுவாக ஜன்னல் கம்பிகளைப் பற்றிக்கொண்டவள், 'தப்பு யார் மேல இருந்தா என்ன ஆனிஷா? பிரிஞ்சுட்டோம்... அதுதான் உண்மை. அவர் இப்போ ஒரு பெரிய இடத்துல இருக்கார். என் நிழல் பட்டாலே அவருக்குக் கோபம் வருது. அந்த கோபத்துக்கு பின்னாடி ஏதோ ஒரு காயம் இருக்குன்னு எனக்குத் தெரியுது. ஆனா, அதை ஆத்த வர்ற தகுதி எனக்கு இப்ப இல்ல. அன்னைக்கு நடந்தது விதியா இல்ல சதியான்னு தெரியல... ஆனா இன்னைக்கு நான் ஒரு சாதாரண சர்வன்ட், அவர் மெமரீஸ் ஹோட்டலோட ஓனர். இந்த இடைவெளி அப்படியே இருக்கட்டும்,' என்றாள் குரல் தழுதழுக்க.

ஆனிஷா விடாமல், 'அப்போ அன்னைக்கு அந்தப் பொண்ணு கூட அஷ்வினைப் பார்த்தது உண்மையா இல்லையா? அதை ஏன் அவர்கிட்டயே நேர்ல கேட்கக் கூடாது?' என்றாள்.

ஐஸ்வர்யா கசப்பாகச் சிரித்தாள். 'கேட்குறதுக்கு அங்க காதல் மிஞ்சல ஆனிஷா, வெறும் கசப்புதான் இருக்கு. அவர் அன்னைக்கு என்னை நம்பல... நான் இப்போ அவரைத் தேடிப் போகல. ஆனா ராகினி... அவளோட படிப்பு, அவளோட எதிர்காலம் இதுக்காக நான் அந்த ஹோட்டலுக்குப் போய் தான் ஆகணும். அஷ்வின் என்னைத் துன்புறுத்தினாலும் சரி, பழிவாங்கினாலும் சரி... என் தங்கச்சியோட கனவுக்காக நான் எதையும் தாங்குவேன்,' என்று உறுதியாகக் கூறினாள்.

மறுபுறம் காரில்...

அவினாஷ் அஷ்வினைப் பார்த்துக் கேட்டான், 'டேய் அஷ்வின், அந்த டாலரைப் பார்த்ததும் ஏன் இப்போவே அவகிட்ட எல்லாத்தையும் கேட்கல? ஏன் வேலையில சேரச் சொல்லி வற்புறுத்துற?' அஷ்வின் சாலினியை காட்ட அவினாஷ்

'சாலினிக்கு எல்லாம் தெரியும் அஷ்வின் சாலினியின் கையைப் பிடித்துக் கொண்டு அவினாஷிடம் சொன்னான், 'அவினாஷ்... ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி அவ என்னை விட்டுட்டுப் போனப்போ, நான் செத்துடலாம்னு நினைச்சேன். ஆனா இன்னைக்கு அவளை அதே கண்களோட பார்த்தப்போ, எனக்குள்ள இருந்த பழைய காதல் அப்படியே இருக்குடா. ஆனா அவளோட அந்த 'தெரியாது'ங்கிற பொய்... அது என்னை எரிய வைக்குது. அவ என்கிட்ட இருந்து தப்பிச்சுப் போகக் கூடாது. என் ஹோட்டல்ல அவ என் கண்ணு முன்னாடியே இருக்கணும். அன்னைக்கு ஏன் என்னை விட்டுட்டுப் போனான்னு அவ வாய் வழியாவே நான் சொல்ல வைப்பேன். அதுவரைக்கும் இந்த ஆட்டம் ஓயாது,' என்றான் ஆக்ரோஷமாக.

சாலினி மெதுவாக, 'அண்ணா... கோபத்துல ஏதும் தப்பு பண்ணிடாத. அவங்க பார்த்தா அப்படித் தெரியல. ஏதோ ஒரு கட்டாயத்துல தான் இப்படி இருக்காங்கன்னு தோணுது,' என்றாள் சமாதானமாக.

அஷ்வின் பதிலளிக்காமல் ஜன்னல் வழியே வெறித்தான். அவனது இதயத்தின் ஒரு பாதி அவனது சட்டைப் பையிலும், மறுபாதி ஐஸ்வர்யாவின் கையிலும் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், இருவருக்கும் இடையே ஈகோ எனும் சுவர் உயர்ந்து நின்றது.

(நேசம் கொடரும்..)

# நிழலின் அருமை

## பாத்திமா ஹகீமா அமீனுதீன், ஓட்டமாவடி


அந்த அழகிய அந்திப்பொழுது எப்போதும் போலவே அமைதியாகப் படர்ந்திருந்தது. ஆற்றங்கரை ஓரத்தில் இருந்த அந்தப் பழைய சிமெண்ட் பெஞ்சில் அஸ்மாவும், பரீனாவும் அமர்ந்திருந்தார்கள். அந்த இடத்திற்கும் அவர்களுக்குமிடையே ஒரு ஆத்மார்த்தமான உறவு இருக்கிறது. சிறுவயதிலிருந்தே இருவரது ஓய்வான பொழுது களும் இந்த இடத்தில் தான் அதிகம் கழிந்திருக்கிறது. அது போல் தான் இன்றும் இருவரும் அந்த இடத்திற்கு தமது ஓய்வு நேரத்தை கழிப்பதற்காக வந்திருந்தார்கள்.

பரீனாவின் கண்கள் அஸ்மா அணிந் திருந்த அந்தப் புதிய தங்க வளையல் களையே மொய்த்துக் கொண்டி ருந்தன..

'என்ன பரீனா... அப்படிப் பார்க்கிறாய்? நேத்து ரசீத் இதைக் கொண்டு வந்தாரு. 'உன் கைக்கு இதுதான் அழகா இருக்கும் அஸ்மா'ன்னு அவரே போட்டு விட்டாரு தெரியுமா?' என்று அஸ்மா வெட்கத்துடன் சிரித்தாள்.

பரீனா ஒரு பெருமூச்சை வெளியேற்றி விட்டு, தனது கைகளை மறைக்க முயன்றாள். 'ரொம்ப அழகா இருக்கு அஸ்மா. ரசீத் நானா கெடச்சதுக்கு நீ குடுத்து வச்சுருக்கனும்டி மா.. உன்னை ராணி மாதிரிப் பார்த்துக்கிறாரு. என் கதையைத் தான் உனக்குத் தெரியுமே... நேத்து ஒரு நல்ல அபாயா எடுத்துத் தாங்கன்னு அவர்கிட்ட கேட்டேன். 'இந்த மாசம் மழையால வேலை கம்மி பரீனா, அடுத்த மாசம் பாக்கலாம்'னு ஒத்த வரியில முடிச்சுட்டாரு. சில நேரத்துல எனக்கு அழுகையே வந்துடும்' என்றாள் கசப்புடன்.

அஸ்மா அவளது கையைப் பற்றிக் கொண்டாள். 'அப்படிச் சொல்லாதே



பரீனா. காசிம் நானா உன்மேல வச்சிருக்கற அன்பு யாருக்குக் கிடைக்கும்? அவரு உழைப்பாளி, ரொம்ப நேர்மையானவரு. காசு பணம் எல்லாம் இன்னைக்கு வரும், நாளைக்கு போகும். ஆனா அன்புதான் என்னைக்கும் நிலைச்சு நிக்கும்' என்று ஆறுதல் கூறினாள்.

ஆனால் பரீனாவின் உள்ளம் அதை ஏற்கவில்லை. 'அன்பு மட்டும் வயித்தை நிரப்புமா அஸ்மா? நீ நினைச்ச இடத்துக்கு கார் வருது, நினைச்சதை வாங்கறே. எனக்கு ஒரு சின்ன ஆசை நிறைவேறக்கூட அடுத்த மாசம் வரைக்கும் காத்துக்கிட்டு இருக்க வேண்டியிருக்கு. நிம்மதிங்கறது வசதியிலதான் இருக்குன்னு எனக்குத் தோணுது' என்றாள். அஸ்மாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியாமல் சங்கடமாகிப் போனாள்..

அப்படியே நாட்கள் உருண்டோடின..

பரீனாவின் வீட்டில் ஒவ்வொரு நாளும் ஒப்பீடுகள் ஒரு கசப்பான போராகவே மாறியது. ஒரு நாள் இரவு காசிம் வேலை முடிந்து களைப்பாக வந்தபோது, பரீனா முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

'ஏன் பரீனா, முகம் ஒரு மாதிரியா இருக்கு? உடம்புக்கு ஏதும் முடியலையா?' என்று காசிம் அக்கறையாக நெற்றியில் கையை வைத்தவாறு கேட்டான். பரீனா உடனே கையைத் தட்டி விட்டு 'உடம்புக்கு ஒன்னும் இல்லை, மனசுக்குத்தான் ஏதோ பண்ணுது.. இன்னைக்கு அஸ்மா வீட்டுக்கு போயிருந்தேன். அவ புருஷன் அவளுக்குப் புதுசா ஐபோன் வாங்கித் தந்துருக்காரு. எனக்கு ஒரு சாதாரண போன் கூட வாங்கித் தர உங்களுக்குத் துப்பில்லை. கூலி வேலை செய்யறவங்களைக் கட்டிக்கிட்டதுக்கு இதுதான் எனக்குக் கிடைச்ச பரிசா?' என்று வார்த்தைகளைக் கொட்டினாள்.

காசிம் மௌனமாக நின்றான். அவனது கண்கள் கலங்கின. 'பரீனா, நான் என்ன திருடியா வர முடியும்? வெயில்லயும் மழைலயும் நான் சிந்துற ஒவ்வொரு துளி வேர்வையும் உனக்காகத்தான். என்கிட்ட இருக்கறதை வச்சு உன்னைச் சந்தோஷமா வச்சுக்கப் பாக்கறேன். ஆனா உனக்கு அஸ்மா வாழ்க்கைதான் பெருசாத் தெரியுது. ஒருநாள் இந்த ஆடம்பரத்துக்குப் பின்னாடி இருக்கற வலி என்னன்னு காலம் உனக்குச் சொல்லும்..' என்று கூறிவிட்டு படுக்கச் சென்று விட்டான்..

சில வாரங்களுக்குப் பிறகு, அஸ்மாவின் வாழ்க்கையில் அந்தப் பேரிடி விழுந்தது. அஸ்மாவின் வீட்டில் அன்று ஆடம்பர அமைதி நிலவியது. ஏசி மெல்லிய சத்தத்துடன் ஓடிக்கொண்டிருக்க, அஸ்மா தனது அறையில் அமர்ந்து ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள். ஆனால், அவளது கவனம் அதில் இல்லை. கடந்த ஒரு மாதமாக ரசீத்தின் நடவடிக்கைகளில் பெரும் மாற்றம் தெரிந்தது. எப்போதும் அவளோடும் குழந்தையோடும் பொழுதைக் கழிக்கும் அவர், இப்போது வீட்டுக்கு வருவதே ஒரு கடமை போல இருந்தது.

அன்று இரவு 11 மணி இருக்கும். ரசீத் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவரது கைப்பேசி மேசையில் மெல்ல அதிர்ந்தது. ஒரு குறுஞ்செய்தி வந்திருந்தது. பொதுவாக அஸ்மா அவர் போனைத் தொடுவதில்லை. ஆனால், அந்த நள்ளிரவு நேரத்தில் வந்த செய்தி அவளுக்குள் ஒரு இனம் புரியாத நடுக்கத்தைத் தந்தது. மெல்ல போனை எடுத்துப் பார்த்தாள்.

'தூங்கிட்டீங்களா? நாளைக்கு நம்ம புது வீட்டுக்கு அந்த லெதர் சோபா வருது. நீங்க நேர்ல வந்து பாத்தா நல்லா இருக்கும்

- இப்படிக்கு நூர்.'

அஸ்மாவின் இதயம் ஒரு நிமிடம் நின்றது போலிருந்தது. 'புது வீடா? நூர் யாரு?' அவளது கைகள் நடுங்கின. தூக்கத்திலிருந்த ரசீத்தை எழுப்பினாள்.

'ரசீத்... ரசீத்... எழுந்திருங்க!'

ரசீத் கண்கள் சொருக எழுந்து அமர்ந்தார். 'என்ன அஸ்மா? இந்த நேரத்துல ஏன் எழுப்புற?'

'இந்த போனைப் பாருங்க. யாரு இந்த நூர்? எதுக்கு உங்களுக்கு இப்போ மெசேஜ் பண்றாங்க? எந்தப் புது வீட்டைப் பத்திப் பேசுறாங்க?' அஸ்மாவின் குரல் கம்மியது.

ரசீத் ஒரு நிமிடம் அதிர்ந்து போனார். ஆனால், அடுத்த கணமே தன்னைச் சுதாகரித்துக் கொண்டு போனைப் பிடுங்கினார். 'இது... இது பிசினஸ் அஸ்மா. நூர் என் கம்பெனியோட புது பார்ட்னர். நாங்க ஒரு புது ஆபீஸ் கட்டறோம், அதைத்தான் அவ அப்படிச் சொல்லியிருக்கா. நீ ஏன் தேவையில்லாம சந்தேகப்படுற?' என்று எரிச்சலோடு கத்தினார்.

'பிசினஸ் பார்ட்னர் நள்ளிரவுல இப்படியா மெசேஜ் பண்ணுவாங்க? நிஜத்தைச் சொல்லுங்க ரசீத்.. உங்களுக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்?' அஸ்மா விடவில்லை.

'போதும் நிறுத்து அஸ்மா! உனக்குத் தேவையான எல்லா வசதியையும் நான் செஞ்சு தர்றேன். இந்த வீட்ல உனக்கு என்ன குறை? தேவையில்லாத விஷயத்துல தலையிடாதே' என்று கூறிவிட்டு போனை எடுத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றார். அன்று இரவு முழுவதும் அவர் உள்ளே வரவில்லை.

மறுநாள் காலை, அஸ்மா ஒரு முடிவெடுத்தாள். ரசீத் கம்பெனிக்குச் சென்ற பிறகு, தனக்குத் தெரிந்த ஒரு நண்பர் மூலம் ரசீத்தின் கார் எங்கே செல்கிறது என்பதைக் கண்காணித்தாள். மாலையில் அந்த நண்பரிடமிருந்து போன் வந்தது. 'அஸ்மா, ரசீத் பிரதர் இப்போ சிட்டிக்கு வெளியே இருக்கிற ஒரு புது வில்லாவுக்குப் போயிருக்காரு. கூட ஒரு பெண்ணும் இருக்காங்க.'

அஸ்மாவுக்கு உலகம் சுற்றியது. உடனடியாக ஒரு டெக்ஸியைப் பிடித்து அந்த முகவரிக்குச் சென்றாள். அது ஒரு பிரம்மாண்டமான வீடு. ரசீத்தின் கார் வாசலில் நின்றது. படபடக்கும் இதயத்துடன் உள்ளே நுழைந்தாள். அங்கே ரசீத்தும், ஒரு இளம்பெண்ணும் சிரித்துப் பேசிக்கொண்டே சோபாவில் அமர்ந்திருந்தனர்.

அஸ்மாவைக் கண்டதும் ரசீத் திடுக்கிட்டு எழுந்து நின்றார். அந்தப் பெண்ணின் முகத்தில் எந்தப் பயமும் இல்லை.

'நீ இங்க எதுக்கு வந்த அஸ்மா?' ரசீத்தின் குரலில் அதிகாரம் இருந்தது.

'நீங்க இங்க என்ன பண்றீங்க ரசீத்? யாரு இந்தப் பெண்?' அஸ்மா கதறினாள்.

அந்தப் பெண் எழுந்து வந்து, 'ஏய்.. ஏன் கத்துற? நான்தான் நூர். ரசீத்தோட ரெண்டாவது மனைவி. நாங்க மூணு மாசத்துக்கு முன்னாடியே நிக்காஹ் செஞ்சுக்கிட்டோம்' என்று ஆணவம் கலந்த அமைதியோடு சொன்னாள்.

அஸ்மா நிலைகுலைந்து போனாள். 'ரசீத்... இது உண்மையா? எனக்குத் தெரியாமலா? என் வாழ்க்கையை இப்படியா சிதைப்பீங்க?' என கதறி அழுதாள்...

ரசீத் இப்போது வெடிக்கத் தொடங்கினார். 'ஆமா அஸ்மா, இது உண்மைதான். நூர் என் பிசினஸை கவனிச்சுக்கிறா. எனக்குத் துணையா இருக்கா.. உன்னை விட பிசினஸ் நொலேஜ் அவக்கு இருக்கு.. உனக்கு நான் எதைக் குறை வச்சேன்? நகை குடுத்தேன்.. கார் குடுத்தேன்.. அந்த வீட்டுல நீ ராணி மாதிரி இருக்கலாம்.. அவ இங்க இருப்பா.. உனக்கு வசதிதானே முக்கியம்? அதை நான் தர ரெடியா இருக்கேன். அப்புறம் என்ன உனக்குத் தேவை?'

'வசதி மட்டும்தான் வாழ்க்கைன்னு நினைச்சீங்களா ரசீத்? என் அன்பு, என் விசுவாசம் இதெல்லாம் உங்களுக்குக் கேலியா போச்சா? ஒரு துரோகியோட பணத்துல வாழ்றதை விட, ஒரு ஏழையா தெருவுல நிக்கிறது மேலானது.. இப்போவே இந்த நிமிஷமே நான் உங்களை விட்டுப் போறேன்' என்று கதறினாள் அஸ்மா.

'போய்க்கோ... உன்னை யாரும் தடுக்கல. ஆனா ஒன்னு தெரிஞ்சுக்கோ, அந்த வீட்ல இருக்குற ஒரு பொருள் கூட உனக்குச் சொந்தம் இல்லை.. எல்லாத்தையும் நான்தான் வாங்கிக் குடுத்தேன்..' என்றார் ரசீத் அலட்சியமாக..

அஸ்மா தனது கழுத்திலிருந்த வைரக் கல் பதித்த மாலையையும், கைகளிலிருந்த வளையல்களையும் கழற்றி அங்கிருந்த மேசையில் வீசினாள். 'இந்த அழுக்கு எனக்கு வேண்டாம் ரசீத்.. நான் பணத்தை காணாத பொண்ணு இல்ல.. வசதி மேல எனக்கு ஆசையுமில்ல.. நான் உங்கள உண்மையா நேசிச்சன்.. உங்க துரோகம் கலந்த ஒரு காசு கூட என் உடம்புல இனி இருக்கக் கூடாது..' என்று சொல்லிவிட்டு அழுதுகொண்டே வெளியே ஓடினாள்..

ரசீத் கல் போல் நின்றான்.. அவனது இதயமும் கல் போல் தான் இறுகி இருந்தது.. 'ஹனி.. டோன்ட் வொரி.. போகட்டும்! எப்படி போக வைக்குறது எங்குற டென்ஷன் இனி நமக்கில்லை..' என மனதில் பூரித்த சிரிப்போடு அவனது கையைப் பற்றினாள் நூர்..

அஸ்மா உடைந்து போனாள்.. வீட்டுக்கு வந்து அறையில் அமர்ந்து கதறி அழுதாள்.. அவளை சுற்றியுள்ள அனைத்தும் அவளை நெருஞ்சி முள்ளாய் வருத்தின.. அவளது பெற்றோர் விவரம் அறிந்து ஓடி வந்தனர்.

அவளது தந்தை சொன்னார், 'அஸ்மாம்மா, காசுக்காக ஒரு துரோகியோட நீ வாழ வேண்டிய அவசியம் இல்லை. வா... நம்ம வீட்டுக்குப் போயிடலாம்.. உனக்கும் உன் குழந்தைக்கும் நாங்க எதற்கும் குறை வைக்க மாட்டோம்..'

அஸ்மா தனது பெட்டிகளை எடுத்துக் கொண்டு அந்த மாளிகையை விட்டு வெளியேறினாள்.

மறுநாள் காலையில் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு பரீனா அதிர்ச்சியுடன் ஓடி வந்தாள். அஸ்மா தனது பெற்றோர் வீட்டில் சோர்வாக அமர்ந்திருந்தாள்..

'அஸ்மா... என்ன இதெல்லாம்? ரசீத் நானா இப்படியா செய்வாரு? நம்பவே முடியலையே!' என்று பரீனா பதறினாள்.

அஸ்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சொன்னாள், 'பார்த்தியா பரீனா? நீ எதைப் பார்த்துப் பெருமூச்சு

விட்டியோ, அந்த வாழ்க்கை இன்னைக்குச் சாம்பலாகிடுச்சு. ரசீத் எனக்கு எல்லாத்தையும் தந்தாரு, ஆனா உண்மையான நேர்மையைத் தரல. அன்னைக்கு நீ சொன்னியே நிம்மதி வசதியிலதான் இருக்குன்னு... இன்னைக்கு அந்த வைரத்தை விட உன் வீட்டுல காசிம் தர்ற அன்பான அரவணைப்பு எவ்வளவோ மேலானதுன்னு எனக்குத் தோணுது.'

பரீனா அப்படியே உறைந்து நின்றாள். அன்று மாலை அவள் வீட்டுக்குத் திரும்பியபோது காசிம் வாசலில் அமர்ந்து அவளுக்காகக் காத்திருந்தான்.

அவள் வந்ததும், 'பரீனா, இன்னைக்கு கொஞ்சம் எக்ஸ்ட்ரா வேலை கிடைச்சது.. இதோ உனக்குப் பிடிச்ச நெய் பூந்தி வாங்கிட்டு வந்திருக்கேன். அஸ்மா எப்படி இருக்கா?' என்று கனிவோடு கேட்டான்.

பரீனா ஓடிச் சென்று காசிமின் கைகளைப் பற்றிக் கொண்டு கதறி அழுதாள். 'காசிம், என்னை மன்னிச்சுடுங்க. இவ்வளவு காலமா உங்களோட அன்பைப் புரியாம, கானல் நீரைப் பார்த்து ஏங்கிக்கிட்டு இருந்தேன்.. அஸ்மாகிட்ட இல்லாத ஒன்னு என்கிட்ட இருக்கு... அது உங்களோட உண்மையான அன்பு. இந்த ஒரு வேளைக் கஞ்சியும், உங்களோட நேர்மையும் போதும் எனக்கு. இனி ஒருபோதும் நான் எதற்கும் ஆசைப்படமாட்டேன்' என்று அழுதுகொண்டே அவன் மார்பில் சாய்ந்தாள்.

காசிம் சிரித்துக்கொண்டே அவளது கண்ணீரைத் துடைத்தான். அன்று அந்தச் சிறிய ஓட்டு வீட்டில் பரவியிருந்த நிம்மதி, அஸ்மாவின் மாளிகையில் ஒருபோதும் இருந்ததில்லை என்பதை இருவரும் உணர்ந்தனர்.



# அம்மா வரும் வரை..

**சிவசு-மணியன்**

‘ராஜேஷ்,.. ‘கண்ணா.. உள் கேட்டு வாசல்ல பத்திரமா உக்காந்துக்க. வெளிக் கதவை அம்மா வர வரைக்கும் திறக்கக் கூடாது. சரியா ?..‘

ஆட்டோகாரர் கோவிந்தன் வெளி கேட்டைத் தாழிட்டு விட்டு, மற்ற மாணவர்களை இறக்கிவிடச் சென்று விட்டார்.

ராஜேஷ் ,ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நர்சரி பள்ளியில் யுகேஜி படிக்கிற குழந்தை. அப்பா அம்மா இருவரும் பக்கத்து ஊரில் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறார்கள். தினசரி வேலை முடிந்து வீட்டிற்கு வருவதற்கு மாலை 5 மணி ஆகும். மூன்று மணிக்குப் பள்ளி முடிந்து ராஜேஷ் வீட்டிற்கு வருவதற்கு மாலை 3.30 முதல் 3.45 மணி வரை ஆகும்.



ஆட்டோக்காரர் வீட்டில் விட்ட பிறகு பூட்டப்பட்ட வீட்டின் வாசலில் தினசரி பெற்றோர்கள் வரும் வரை உட்கார்ந்து கொண்டு தான் இருக்க வேண்டும்.

இது தினசரி நடக்கும் நிகழ்ச்சி தான்.

வழக்கம்போல்உள்ளேஉள்ளபடியில் உட்கார்ந்து கொண்டிருந்த ராஜேஷ், உள் கேட்டில் ஏதோ அசைவதைப் பார்த்தான். பாம்பு என்று தெரிந்து பயத்துடன் வெளி கேட்டின் பக்கம் வந்து தாழ்ப்பாளைத் திறக்க முயன்று முடியாமல் உள்ளேயும் போக முடியாமல் அழுது கொண்டே நின்று விட்டான்.

அந்த நேரத்தில் வாசலில் எந்த விதப் போக்குவரத்தும் இருக்காது.

கம்பெனி யிலிருந்து முதலில் வந்த ராஜேஷின் அம்மா கமலா கதவைத் திறந்து ,அழுது கொண்டிருக்கும் குழந்தையை விசாரித்தார்.

‘பா..பா...ம்..பு‘ என்று பயத்துடன் உள்கேட்டைக் காண்பித்து வேகமாக அழுதான் ராஜேஷ்.

அந்த இடத்தைப் பார்த்த கமலாவிற்கு ஒன்றும் தெரியவில்லை.

குழந்தையை வாரி அனைத்துத் தூக்கிக் கொண்டு உள்கேட்டைத் திறந்து வீட்டிற்குள் சென்றாள்

அம்மாவின் அரவணைப்பில் சமாதான மான குழந்தை அப்படியே தூங்கி விட்டான்.

ஆறு மணி அளவில் வந்த கணவன் சந்திரன்

'என்னம்மா .. கவிதா குழந்தைக்கு ஒரே ஜுரமா இருக்கிறதே நீ... பார்க்க வில்லையா?'என்று உள்ளே வேலை செய்து கொண்டிருந்த மனைவியைப் பார்த்துப் பதட்டத்துடன் கேட்டான்.

விவரத்தைச் சொன்னாள் கமலா.

மருத்துவரிடம் காண்பித்து விட்டு வருவதற்குள் இரவு 10 மணி ஆகிவிட்டது.

'ஏங்க.. நான் இனிமேல் வேலைக்குச் செல்லப் போவதில்லை. நான் வரும்வரை குழந்தை அனாதையாக ரோட்டில் நிற்க வேண்டி இருக்கிறது'

நீ சொல்வது சரிதான் ஆனால் இருவரும் சம்பாதித்தால் தானே குடும்பத்தை ஓட்ட முடியும்'

'அதைவிட குழந்தை முக்கியம் இல்லையா?'

'கொஞ்சம் பொறு கமலா ,ஒரு மாதம் ஆகட்டும் நான் வேறு வேலை அதிக சம்பளத்தில் தேடிக் கொள்கிறேன்'

'சரிங்க...' குழந்தையை நடுவில் போட்டுக் கொண்டு இருவரும் படுக்கை யில் படுத்தார்கள்.

மறுநாளும் மாலை நாலு மணி அளவில் அம்மாவிற்காக வெளி கேட்டைப் பிடித்த படியே காத்திருந்தான் ராஜேஷ்..



புருஷன்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு...

அதான் ஹோட்டல் இருக்கேனு திமிர்த்தனத்துல மனைவி கிட்ட யாரும் சண்டை போடாதீங்க!

சிலிண்டர் தட்டுப்பாடு காரணமா எல்லா ஊர்லயும் ஹோட்டல்களை மூடிட்டு வராங்க!

வாய மூடி பேசாம
நாங்க போடுற உப்புமாவ
சாப்பிடுங்க.

S Chandra Sekhar

# கீழடி

ஒளிப்படர்ந்த வான்வெளியில் தமிழ் மணக்கும்
அலைகடலும் இசை பாட செவியினிலே எதிரொளிக்கும்
பொழுதெல்லாம் புகழ் மணக்கும் செந்தமிழே
மண் தோன்றிய நாளே தோன்றியவளே
மண்ணில் எழுதி வைத்தால் மழை நீர் அடித்துச் செல்லும்
ஏட்டிலே எழுதி வைத்தால் சிதைந்து விடும் என்றே
கல்லிலே எழுதி வைத்தான் முன்னோர் தமிழன்
காலமெல்லாம் அழியாத செந்தமிழை
உலகம் அழியாமல் மறைத்த உண்மையை
கீழடி கி.மு அறநூறு காலத்தைச் சொன்னதுவே
தமிழரின் வரலாற்றின் தொன்மையை பறைசாற்றியே
அகழ்வாராய்ச்சி உலகறிய செய்ததுவே
பூமியில் புதையுண்ட முன்னோர் நாகரிகத்தை
உலகோர் அறிய பரிசளித்தாய் கீழடியில்
தோண்ட தோண்ட பொற்குவியல் போல்
பானை ஓடுகளும் உலோகங்களும் கிடைத்ததுவே
கண்டெடுத்த பொருளே தலை நிமிரச் செய்ததுவே
தோண்டத் தோண்ட துளிர்கிறது தமிழினத்தின் வேராய்
உலகெங்கும் கிடைத்ததுவே தமிழ் பெருமை பேசும் அமுதமொழி
காலம் கடந்தும் வாழ்கிறதே தேனான அமுத மொழி



**பொன்முருகன்**
புதுச்சேரி



# கடலை விழுங்கும் மீன்

×××××××

**நூலாசிரியர் :**


**நர்மதா தேவி**

×××××××

**நூல் விமர்சனம்**

**தயானி தாயுமானவன்**

×××××××




'வாழ்வைப் போல காற்றில் விநோத நடனங்கள் புரியும் இலைகளைப் பார்த் திருக்கிறேன் ஒவ்வொரு முறையும் இலை யைப் பிடிக்கும் போது நடனம் மட்டும் எங்கோ ஒளிந்து கொள்கிறது '.

- தேவதச்சன்

இப்படித்தான் கவிதாயினி நர்மதா தேவி அவர்களின் கவிதைகளைப் படிக்கும் போது தோன்றியது .

எந்த வலைக்கும் அகப்படாத ஒரு கண்ணாமூச்சி வாழ்வில் நம்பிக்கையில் வாழும் அந்தச் சிறுமீனின் ஆசையைப் பாருங்கள்.. பெருங்கடலின் நீரையெல்லாம் விழுங்கிவிடும் பேராசை யென்றே குறிப்பி டுகிறார்,

அது நர்மதா தேவியின் நம்பிக்கையின் அச்சாணி.

இவ்வளவு பெரிய உலகத்திற்கு நிலவின் சிறிய ஒளி தரும் அழகை சூரியனால் தரமுடியுமா எனில் தரமுடியாது. அதுபோல இவர்கவிதைகளில் கோலோச்சும் காட்சி கள் கடல் சார்ந்த கவிதைகள் .

# என்றோ ஒருநாள் தன்னைப்பார்க்க சக்கர நாற்காலியில் வரும் கால்களையும் இதயத்தையும் நனைத்துவிட இன்னும் அதிக ஆசையுடன் ஓடி வருகிறது அந்த கடல் அலை.

ஆயிரம் பேர் கடலாடினாலும் என்றோ ஒரு நாள் வரும் கால் நனைக்க முடியாது, கடலாட முடியாத அவனின் கால்களை நனைக்க ஓடிவரும் அலைக்கு நினை வலைகள் என்றே பெயர் வைக்கலாம்.

கடலின் நீல நிற கண்களுடன் உறவாடும் மௌனமான கணத்தில் பாதச் சுவடுகள் மறைந்துவிட்டாலும், நெஞ்சம் மட்டும் கடலின் ஆழத்தில் நிசப்தத்தை நாடும் மௌனத்தின் மொழி கவிஞரின் நுட்பம் .

தீட்டு என்பதெல்லாம் பாழும் மனித ருக்குத்தான்... அந்த தெய்வத்துக்கு இல்லை, என்பதை உணர்த்தும் இந்தக் கவிதை இந்நூலின் சிறப்பான மகுடம் தறிக்கும் வரிகள் .

பக்கம் -11

# ஊர் திருவிழாவின் கூட்ட நெரிசலிலிருந்தும் பாட்டு சத்தத்திலிருந்தும் கருவறையை விட்டு விலகி வெளியேறிய தெய்வம் எங்கே சென்றது? என்பது தான் கவியின் மன விலாசத்தில் புதிய சிந்தனையில் சுடரும் கவிதை. அற்புதமான காட்சி.

உழைப்பவர்க்கு கல்லும் மெத்தையாகும் இரவசாதம் இவர் கவிதையில் கோலோச்சுகிறது.

இயற்கையை நீ நேசிக்கக் கற்றுக் கொண்டால் இயற்கையே உன்னை பாதுகாக்கும் காலத்தின் பாடம் இது.

சகமனிதனை நம்பாத நம் மனம், கண்காணிப்பு கேமராக்களை, அடையாள அட்டைகளிடமும் மனிதம் தோற்றே விட்டது என்கிற கவிதைவரிகளில் இயந்திர மயமாகி வரும் நமது வாழ்வில் நாமும் ஒருநாள் மாறிவிடுவோம் மனிதம் மறந்து என்பதை அழகாக கவிதையாக்கி விட்டார் கவி.

கூகுள் வரைபடங்கள் நம்மையும் நமது கையடக்க நாட்குறிப்புகளையும் காகித வரைபடங்களையும் பார்த்து குபீரென சிரிக்கின்றன‘. என்ற கவிதை

வாழ்வியலின் முரண்களில் நாம்
வரைபடங்களில்
தொலைந்துவிட்டோம்.

புத்தரின் பின்னிருக்கும் அரசியலை அழகாக முன்னெடுக்கிறார் கவிஞர்.

கோலோச்சும் குடும்பத்தின் காரசார விவாதங்களில் புத்தரும் வரவேற்பறையில் அமைதியாக அமர்ந்திருக்கும் புத்தர்,

நல்ல காலம் நள்ளிரவில் வெளியேறி விட்டதால் இப்படிப்பட்ட விவாதங்களுக்கு இடமில்லாது போய் விட்டது .

சிணுங்கும் இராகுலனோடும் ஆழ்ந்த துயிலின் அடுத்த நாள் அதிர்ச்சியை எப்படித்தான் தாங்கிக் கொண்டாளோ? அந்தப் பேதைப் பெண் யசோதரை, என்ற விவாதப் பொருளின் மௌனத்தில் புத்தர் அதிர்ந்து போயிருக்கலாம் என்ற கருத்தியலை முன்வைக்கும் அகம் சார்ந்த உளவியலில் கடலை விழுங்க நினைக்கும் மீனுக்கு கண்களில் உப்பின் சுவை .

அடுத்த கவிதையிலும் சொல்லப்படாத புத்தர் பயணிக்கிறார் ரெயிலில். சொல்லாமலேயே இறங்கிச்சென்றுவிட்ட நீயும் எங்கோ பரிச்சயமான முகம் தான்,

நாகரீகம் கருதி கேள்வி எழுப்பாத யசோதரையின் மறுபிம்பமாக தெரிகிறார் கவி.

அவரவர் இடம் வரும்போது இறங்கி விடுவது என்பது தவிர்க்க முடியாது பிரிவின் வலி பெண்ணுக்கு மட்டுமா? புத்தனுக்கும் உண்டு ஒரு நூற்றாண்டு தனிமை.

உன்பெயரை எங்கோ பார்க்க நேரும் தருணம் பேசிவிட வேண்டும் என்ற நினைப்பும் அப்படியே இருந்து விட்டே போகட்டும் என்பது காதலின் துயர்.

திறந்த புத்தகமாகவே கிடக்கிறது இந்த வாழ்வு . மறைப்பதற்கு ஏதுமில்லை. புதிய என்னை நீங்கள் வாசிக்க நேரிடலாம் என்ற நேர்மையான ஒப்புதல் பெறும் பெண் விடுதலை.

வாக்குவாதம் முற்றும் தருணம் ஒரு நட்பு தன் குரலை துண்டித்துக்கொள்கிறது. சமாதானம் செய்வதற்கு முன்பே தடை செய்யப்பட்ட நட்புப்பட்டியலில் சுலப

மாக முறிந்த உறவுகள் என்பது இயல்பின் கண்ணீரிலிருந்து தனித்து தன்னை பிரித்துக் கொள்ளுதல் என்பது இப்போது இயல்பாகி விட்டது என்பதை இக்கவிதையில் பதிவிட்ட வரிகளில் கவிஞர் மின்னுகிறார்.

சமாதானம் பேச நடுவில் ஒருவருமற்ற இந்த வாழ்வில் உறவுகளின் வேர்களை வெட்டி எறிவது சுலபம் தான்.

சாதியம் பேசும் மனித மனங்களுக்கு இவரது கவிதை வரிகள் தரும் சாட்டையடி இதுவரை அறிவியலாலும் கண்பிடிக்க முடியாது என்ற தொனியில் கவிஞரின் மனம் சிகரம் தொடுகிறது.

பிரிவின் வலியை விமானம் அறியாது. தழுவிய நெஞ்சம் தூரதேசம் போக புறப்பட்டு விட்டது வெறும் உடல் மட்டும் உயிரைப்பிரிய மறுக்கும் விரல்கள்

அகவாழ்வின் வலியை தன் கவிதையில் மிக அழகாக பதிவு செய்துள்ள கவிக்கு பாராட்டுகள்.

கூடவே வரும் நிலவுக்காக ஜன்ன லோர இருக்கைக்கு ஆசைப்படும் மனதை யார்தான் வெறுப்பார்கள்? நிலவே நீ மறைந்துவிளையாடும் அந்த நொடி தனிமையின் இருளை என் மீது போர்த்தி விடுகிறாயே... என்றவரிகள் ஆத்மார்த்த மானவை.

தூசரி... நீ அழைக்க வேண்டாம் ஒருகணம் நினைத்தாவது விடேன் சரணடைந்து விடுகிறேன் உன்னிடம் என்ற கவியின் வரிகள் காதலின் சொல் லொண்ணாத்துயர்.

# கடல் முழுவதும் நிரம்பி இருக்கும் உவர்ப்பினை வாரி எடுத்து தன்மேனி யெங்கும் பூசிக் கொள்கிறது முகத்துவாரத்தில் ஆறு

- இந்தக் கவிதை காதலின் மகுடம்.

கொண்டவனின் துயரம் காதலினால் இவளுடையதாகிறது.

ஓடோடி வரும் வாழ்வு
கண்ணீரில் கரைந்தாலும்
நான் ஆறு அல்ல கடலே...
இனி என்னை
கடலாகவே பாவியுங்கள் .
கடலே என்னை ஏற்காது போனாலும்
நினைவுகளால் உப்புகரிக்கும்
இந்த வாழ்வு

கடலே ....
உன்னிடத்தில் முடியட்டும்
என்பது தான் இங்கு
காதலின் முடிவுத் துயரம்.
இரட்டைக் காப்பியங்களை
நினைவுறுத்துகிறது,

இந்தக் கவிதை. பெண்களின் வாழ்வு கடலின் மீன்களின் வாழ்வு.

அழுதாலும் உலகம்
அறியவே வேண்டாம்...
மீன்களின் கண்ணீரை.
ஆனால் கடலையே
விழுங்கிவிடும் சிறு நம்பிக்கை
நட்சத்திரம் அந்த சிறியமீன் .

கண்ணகியும் மாதவியும்
ஒரு சேர நினைவில் வந்த கணம்

அற்புதம் கவிஞரே .

# தனிமையின் பறவை எதிர்குரல் கொடுக்கும் பறவையின் முகமறியாது பேசிக் கொண்டு தான் இருக்கும் என்பது வாழ்வியலின் நம்பிக்கை நம்மீது சொட்டும்

கணம்!

# புத்தர் மீது பாய்ச்சப்படும் ஒளிக்குபின்னேதான் போரின் காரிருள் மறைந்திருப்பதாக கூறும் வரிகளில் அரசியல் களமாடுகிறது.

காலம் காலமாக திருட்டுப் பட்டம் கட்டி ஒரு சமூகத்தையே அடிமையாக வைத்திருக்கும் மானுடத்தின் அதிகாரத் தொனியை கருவறுக்கிறது இவரது காகம் பற்றிய கவிதை.

சபாஷ்... இனி நீங்கள் அரசியல் கவிதைகளும் எழுதலாம்.

அரசியல் என்பது சாக்கடை யல்ல நாம் நமது உரிமைகளை மீட்டெடுக்கும் களம்.

களமாட வேண்டும் இப்படியான வாழ்வை .

இன்னும் உங்களுக்காக நிறைய கவிதை களை விட்டு வந்திருக்கிறேன். படித்து சுவையுங்கள்

வாழ்க கவி வெல்க தமிழ்
×××××××
பதிப்பகம் - நம் நதி பதிப்பகம்
தொடர்பு எண் -
98947953 83
namnadhi@gmail.com
நூல் மதிப்பு ₹120
அழகிய வடிவமைப்பு
×××××××

செங்கை மாவட்டத்தில் இன்னுமொரு கவிதைப் போராளி. நர்மதா தேவி அவர்கள் கற்றது முதுகலை பொறியியல் நம்ப முடியவில்லை

இத்தனை அழகான கவிதைகள் இவர் விரலில் பிறந்தவையா? இன்னும் பல நூல்கள் தரவேண்டும் சகோதரி.



# நாம் யார்?

இதயமலர்
மேற்கு தாம்பரம்

நாம் யார்? யாருக்காவது புரிகிறதா..? எதற்கிந்த பிறப்பு எவரேனும் அறிவாரா..? தன்னை ஆய்வு செய்து கொள்ள எவரும் முற்படுவாரா..? எத்தனை எத்தனை கேள்விகள்..? விடையறியா கேள்விகளா இவைகள்..? விசயமுள்ள கேள்விகள் தானே..? பதிலொன்று அறியும் வரை அத்தனையும் பாவமான கேள்விகளாகத் தான் தெரியும். நல்லதோ கெட்டதோ எதற்கும் விடையுண்டு. அறிய முற்படுவது அவசியமான ஒன்று. பிறப்புக்குள் ரகசியம் ஒன்றைப் புதைத்தவன் எவனோ அவனே கடவுள்.

யாரோ இருவரின் கூடலால் மட்டுமே பிறந்து விடவில்லை உயிர். உயிரைப்படைத்தவன் அதற்குள் உணர்வையும் படைத்தது தான் சிறப்பு. காரணம் கூடிய அனைவருக்கும் கரு உண்டாவதில்லை. இயற்கையும் இறையும் எதையோ செய்வதற்கு ஒரு கருவி தேவைப் பட்டிருக்க, களத்தில் இந்த பிறப்பு. பிறக்கும்போதே பிறப்பின் காரணமும் எழுதப்பட்டு விடுகிறது. கடவுள் நல்ல இயக்குனராக மட்டுமின்றி நல்ல ரசிகனாகவும் இருப்பவன்.

எத்தனை திரை போட்டு மறைத்துக் கொண்டாலும் அத்தனையையும் மீறி அருகிருந்து பார்க்கும் அற்புத சக்தி அவனுக்கு மட்டுமே உண்டு. அவனுக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேனர்கள் தேவையில்லை. உட்கார்ந்த இடத்தில் இருந்தே அங்குலம் அங்குலமாக அலசிப் பார்ப்பவன். அதனால்தான் அவன் இறைவன். எதை நம்மால் பார்க்க முடிய வில்லையோ, எதை நம்மால் செய்ய இயல வில்லையோ, அப்போது நமக்குள் கடவுள் நினைவு வருகிறது.

எதைக் கண்டு பயம் கொள்கிறோமோ, எதைக் காண ஆவல் கொள்கிறாமோ, எது வேண்டும் என்று மனம் சொல்கிறதோ, அப்போதெல்லாம் நாம் கடவுளை நினைக்கிறோம். கிடைக்க வேண்டும் என்ற உந்துதல் கடவுள் பக்கம் திருப்புகிறது. காரணம் அவனிடம் எல்லாமும் இருக்கும் அவன் நினைத்தால் எதுவும் கிடைக்கும் எதுவும் முடியும் என்ற கருத்து நம்முள் நிரப்பியிருக்கிறது. தேவையுள்ளவன் இருப்பவனிடம் கேட்க பணிக்கப்படுவது கற்ற பாடம் அல்லது உள்ள ஒரு உணர்வு.

ஆனால் யாராவது கடவுளைப் பார்த்துள்ளனரா.. தூணிலும் துரும்பிலும் நீக்கமற நிறைந்துள்ளதாகச் சொல்லப்படும் இறையை உன்னால் பார்க்க முடிகிறதா? இல்லையே? நம்மால் ஏன் முடியவில்லை என்றாவது உணர்ந்தோமோ?

கடவுள் என்பது ஒரு நம்பிக்கை மட்டுமே. உருவமோ அருவமோ உணர்வும் கடவுளே.

உணர்வுக்குள்தான் தேடுதல் விளைகிறது. தேடுதல் வெளியில் இருக்கும் வரை தேடியவை கிடைப்பதில்லை. நம்மை நமக்குள் தேடிப் பார்க்கும்போது உண்மை புரியும்.

தேவைக்கு தேடக்கூடாது தேடல் பயனில்லை. தேவையின் நோக்கமென்ன.?

மனதைக் கேட்டுக்கொள். நம்மால் மட்டும் தான் நமக்கான கேள்விகளுக்கு உண்மையான பதில் தர முடியும். அடுத்தவன் கேட்டால் பதிலில் பொய்களே நிரம்பி நிற்கும் புரிகிறதா..? ஆக உண்மையறிந்த நாம் உண்மையாக நமக்குள் தேடினால் உண்மையாக உணரப்படும் ஒன்றே இறை.

இறையென்பது அன்பு, கருணை இவை உடுத்தி நிற்கிறது. மனிதத்தோடு மற்றவர்களின் தேவை உணரும்போது இரக்கம் பிறக்குமானால் தேடல் விடை யளிக்கும். மாறி நின்றால் மாற்றம் வந்து சேரும். தேடலில் பயன் பெறத் தேவையானது கருணையும், அன்பும் மட்டுமே. விலை கொடுத்து வாங்கக்கூடிய எதுவும் பெரியது அல்ல; உணர வேண்டும்.

நமக்குள் உருவாகும் உணர்வுகளில் தான் இறையிருக்கின்றான். தேடலால் உணர்ந்திடலாம். ஏழையின் சிரிப்பில் இறைவன் இருப்பது ஏழைக்கு செய்யும் உதவியென உணர வேண்டும். மழலையின் சிரிப்பில் இறைவனை உணரும்போது அங்கு வஞ்சகம் இல்லை என உணரலாம். தேடல் என்பதற்கு பெரிய தவம் தேவை யில்லை. சூதறியா மனதும் சூழல் அறிந்த கனிவுமே போதுமானது.

எதற்காக பிறந்தோம் என்றால், ஏதோ ஒரு காரணம் எழுதப்பட்டிருப்பதாக முதலில் அறிந்தோமே, அதுதான். மற்றவர்களை எப்படிப் பார்க்கிறோம் என்பதில்தான் நமக்குள் இறையை உணர முடியும். காரணமில்லாமல் எந்த உறவும் வருவதில்லை. காரணமே இல்லாமல் யாருடனும் தொடர்பும் ஏற்படுவதில்லை. அப்படிப்பட்ட தருணங்களில் வழித்தட உணர்வு நிலை கொண்டு அவர்களுக்கு உதவுகிற நிலையா அல்லது தேவைகளைப் பெறுகிற நிலையா என்பதுதான் இறை உனக்கு உணர்விக்கும் பாடம். சுயத்தை இழக்காது. மற்றவரின் நிம்மதிக்கும், மகிழ்வுக்கும் நாம் காரணமானால் நாம் இறையை உணரலாம். மாறாக உணர்வுகளுக்கு வடிகாலாக மற்றவரை எண்ணி தேவைகளைத் தீர்த்துக் கொண்டால்எத்தனைபிறவியெடுத்தாலும் இறையை உணர் முடியாது.

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கை என்பது ஒரு விசா தான். வந்து போகும் பயணி நாம். வந்தவன் போவது நியதி. இருக்கும் வரை இனியவனாய் இருந்தால் விசா நீட்டிப்பு உண்டு. அது வரம். வரத்தைப் பெற்றிட வாழ்வை அர்த்தமாக்க வேண்டும். வாடிய பயிருக்கு வடிக்கும் நீராக இருந்தால் போதும். வாழ்வின் பாதை தெரியும்.

கல்நெஞ்சம் இல்லாது சுயநலமில்லாது நடந்து வந்த பாதையை மறக்காது நாமிருந்தால் நம்முள் கடவுளைக் காண லாம். நேற்று நம்மைக் கொண்டாடியவர்கள் வேறொன்றைக் கண்டதாலே வீண்பழி சுமத்தலாம். விலகியும் போகலாம். மனம் தளராது இருத்தல் முக்கியம். காலப் போக்கின் விளையாட்டல்ல வாழ்க்கை. எதுவும் நிரந்தரமுமில்லை. அடுத்த நொடி நாம் அறியாதது. இருக்கும் வரை மகிழ்வோடிருப்போம். மகிழ்வித்து இருப் போம். நம்மால் ஒருவருக்கு மகிழ்வு கிடைக் கிறது என்றுணரும் போது அதற்காக முற்படும்போது கடவுளைக் காணலாம். வீண் விவாதங்கள் வெற்றியாவதில்லை. விளை மனதுள் உள் உணர்வை திறந்திட்டால் கடவுளை உணரலாம். நாம் யார் புரியும்.

இதயமலர்மேற்குதாம்பரம்.அவனவன் செயல் அவனவன் பார்வை. திருத்தம் தானாக வரும்.


தேடிப்போய் திருத்த நினைத்தால் தெருவில் தான் நிற்க வேண்டும். கர்மம் என்பது அவனவன் வாழ்க்கையிலேயே நடந்தேறும். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. களம் நாம் விதைத்த விதையாலே தான். பயிரோ, களையோ பக்குவமாயிருந்தால் பயிருக்கு சேத மில்லை. மனதே செயலைத் தீர்மானம் செய்யும்போது ஊரைப்பார்த்து சூடு போட்டுக் கொள்வதும் உபத்திரவம் தான். வந்தால் மகிழ்வு, இல்லையேல் பாடம். பாடங்களே நம்மைப் பக்குவப்படுத்தும்.

கலங்கியே காலத்தை விரயமாக்கினால் கடந்து போனவைகள் எல்லாம் கை கொட்டி சிரிக்கும். நின்று விடக்கூடாது. நின்று விட்டால் ஏறி மிதித்துக் கொண்டே இருப்பார்கள். நாம் இருந்த தடயம் கூட அழிக்கப்பட்டு விடும். துணிந்து எதையும் முன்னெடுத்தல் அவசியம். துவளாது செயலாற்றுவோம். வருவதை ஏற்றுக் கொள்ளும் மனநிலை தான் மகிழ்வின் முதல்நிலை. நடந்த வந்த பாதையைப் பார்க்காது நடக்க வேண்டிய தூரத்தை அண்ணாந்து பார்த்தால் தலை சுற்றும். அடுத்தவன் கால் கொண்டு நாம் நடக்க முடியாது.

முயற்சி நம்முடன் பயணிக்கும் போது தூரம் தொலைவில் இருக்காது. முடியும் என்று நம்பி கடமையைச் செய்வதே முன்னேற்றத்தின் ஒளி. முடிக்க வேண்டுமே என்று கடமைக்காக செய்யாது முடித்து விட்டேனே என்ற மகிழ்வு தான் நல்ல தொடக்க மாகும். முயற்சி யுடையவனை காலம் கை விடுவதில்லை. கலங்காது முன்னேற, கனவுகள் கட்ட விழும். காட்சிகள் மாறும். விமர்சனங்கள் கூட வித்தியாசமாய் வரும். ரசித்தல் நலம். புன்னகையால் கடந்து செல்வோம். பொருளுரைத்து காலத்தை வீணாக்காது கடமையை எண்ணிப் போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

எதுவும் காரணமின்றி நடப்பதும் இல்லை. மனமே விடியலுக்கு வாசல். மனதைத் தொலைக்காது கவனமாய் அடிவைத்தால் ஒவ்வொரு விடியலும் நன்றாகவே அமையும். மற்றவர்கள் நம்மைப்பற்றி விமர்சனங்கள் வைக்கலாம். துவண்டு விடக்கூடாது. விமர்சனங்கள் நம்மைப் பாதிக்காதவாறு மனதை கட்டில் வைக்க வேண்டும். யாரும் இங்கே சுத்தமான தங்கமில்லை. உணர்ந்தால் போதும். சில நேரங்களில் நாம் தவறு செய்திருக்கலாம். அதை பெரிதாக்கி நம்மைவிட்டு விலகினால் போகட்டும்.

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏன் நகர்ந்தது எப்படி நடந்தது என தன்னைத்தானே கேட்டுக் கொள்ளாத வர்களின் கேள்வியறியா பதிலுரைகளால் தவிப்பை உண்டாக்கியவர்களைத் தாண்டிச் செல்லும் நிலையை நாம் உண்டாக்கிக் கொண்டால் விடியல் விடியலாகவே இருக்கும். ■



# தங்கம்

தங்க விலையேற்றம் தாண்டவம் ஆடுதே
அங்கம் முழுதும் அணியவே - தங்கத்தைப்
பெண்கள் பறிகொடுத்துப் பாவமாய் நிற்கின்றார்
கண்முன் களவாடக் காண்.

**பாவலர்மணி வா.சண்முகம்**

# ஒளியுறும் உயிர்க்கொடி



ஜி ஏ பிரபா

மஞ்சள் மைய அரைபட்டிருந்தது.

அது என்னவோ அலமுவின் கைவண்ணத்தில் மஞ்சள் மைய அரைபட்டுவிடும்.

இந்த கிராமத்தில் அவளுடைய மஞ்சளுக்கு மகிமை அதிகம்.

“நானும் உன்னை மாதிரிதான் அரைக்கிறேன். ஆனால் மஞ்சள் இப்படி அரைய மாட்டேங்குறது” என்பார்கள்.

அலமுக்கு கைமணம் அதிகம். அரைக்கும் மஞ்சள் பசிய உடம்பில் தீற்றிக் கொள்ளும். கைகளும் மணக்கும். அதனால் தான் பகவான் அவளுடைய மஞ்சள் குங்குமத்தை பறிக்க நினைக்கிறாரோ?

எட்டிப் பார்த்த கண்ணீரை அடக்கிக் கொண்டு மஞ்சளை வழித்துக் கிண்ணத்தில் போட்டாள். அதை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை கோவில் அர்ச்சனை தட்டில் வைத்துவிட்டு, மற்றொன்றில் அரைத்து வைத்த அரளி விதையை கலந்து சின்ன சின்ன உருண்டைகளாக பிடித்து வைத்தாள்.

ஆயிற்று பூஜை முடிந்து வீட்டுக்குப் போனால், அவள் புருஷன் சந்தானத்திற்கு ஒரு உருண்டை. தனக்கு ஒரு உருண்டை.

முடிந்தது. எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஒரு தீர்வு வந்து விடும். இப்படி வாழ்க்கையை முடித்துக் கொள்ளத்தான் இத்தனை சோதனைகளோ?

“ப்ச்” என்று கல்லை கழுவி விட்டு எழுந்தாள் அலமு.

காலை ஒன்பது மணிக்கே மழை ஒரு ஆவேசத்தோடு பெய்து கொண்டிருந்தது. சுற்றிலும் தேங்கி நின்ற மழை நீரை தள்ளிவிட்டு மஞ்சள் அரைத்த தட்டை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தாள்.

“என்னமா ஆயிட்டுதா?”-குருக்கள்

“ஆச்சு மாமா” என்று தட்டை அவரிடம் நீட்டினாள்.

“சந்தானம் நன்றாக இருந்தவரை அம்பாளுக்கு நல்ல மஞ்சள் கிடைத்தது”

“இப்பொழுது மட்டும் என்ன மாமா? இருக்கிற மஞ்சளை நான் கோவிலுக்கு கொண்டு வருகிறேன். இன்னும் ஒரு நாளோ, ரெண்டு நாளோ”

“நீயும் விடாமல் மஞ்சள் அரைச்சு கொடுக்கிற. அந்த அம்பாள் என்னைக்குக் கண் திறக்கப் போறாளோ? ”

“அவளுக்கு கண் இல்லை மாமா”

“உன்னுடைய வேதனை அப்படிச் சொல்ல வைக்கிறது. ஆனால் கவலைப் படாதே அலமு.. நிச்சயம் ஒரு வழி கிடைக்கும்”

என்ன வழி?

எதுவுமே தெரியவில்லை? கண்ணைக் கட்டி கடலுக்குள் போட்ட மாதிரி இருக்கிறது.

“டாக்டர் என்ன சொல்கிறார்கள்?”

“ஆபரேஷன் செய்தாலும் பிழைப்பது அரிது என்கிறார்கள்.”

“போயும் போயும் இவனுக்கா இந்த வியாதி வரணும்?”

சந்தானத்திற்கு என்ன வியாதி என்று சொல்லத் தெரியவில்லை. ஏதேதோ ஆங்கில வார்த்தைகள் எம்.ஆர். ஐ , சிடி ஸ்கேன் ரிப்போர்ட்டுகள் எல்லாமே அவன் உயிருக்கு ஆபத்து என்றுதான் கூறுகிறது. அவளும் தன்னால் முடிந்த அளவு அவனை அழைத்துக்கொண்டு தஞ்சாவூர், கும்பகோணம், திருச்சி என்று அலைந்து விட்டாள்.

எல்லா இடத்திலும் ஒரே பதில் இது ரிஸ்க்கான ஆபரேஷன். இதை மும்பையில்தான் செய்ய வேண்டும். அங்குள்ள ஒரு டாக்டர்தான் இதுக்கு எக்ஸ்பர்ட் என்கிறார்கள்.

இங்கிருந்து மும்பை போக வேண்டும். அங்கு ஆபரேஷன் ஆக வேண்டும். அந்த ஆபரேஷனில் சந்தானம் பிழைக்க வேண்டும். இது அனைத்திற்கும் மேல் இந்த ஆபரேஷனுக்கு பத்து லட்சம் வரைக்கும் செலவாகும் என்கிறார்கள்.

அவ்ளோ பணத்திற்கு எங்கே போவது? பத்து பைசா கூட கையில் இல்லையே? விக்கித்துப் போய் நின்றாள் அலமு.

இறைவனை இறுகப் பிடித்துக் கொண் டிருப்பவர்களுக்கு இப்படித்தான் சோத னைகள் வந்து கொண்டே இருக்கிறது.

இது என்று முடியும்?

திருமணமாகி வந்த போது அலமுவும் ஏராளமான கற்பனைகளோடுதான் வந்தாள். குத்துவிளக்கு போல் இருந்த அவளை யும், அவளுக்கு இணையாக இருந்த சந்தானத்தையும் பார்த்து கிராமமே கண் போட்டது.

“ஈஸ்வரனும் பார்வதியும் போல இருக்கிறீர்கள்” என்று.

சந்தானத்துக்கு மஞ்சள் வியாபாரம். இந்தப் பகுதியில் மஞ்சள் விளைச்சல் அதிகம். மஞ்சள் அறுவடையின் போது கிலோ கணக்கில் வாங்கிக் கொண்டு வந்து காய வைத்து மஞ்சள் பொடி செய்து தூய மஞ்சள் விற்பனை செய்வான்.

அவனிடம் சொல்லி வைத்து வாங்கிப் போவார்கள். நேர்மையாக இருக்க வேண்டும், நியாயமாக நடக்க வேண்டும், கலப்படம் செய்யக்கூடாது என்று நினைத்த சந்தானத்திற்குத்தான் இப்படிப் பெரிய வியாதி வந்தது.

மஞ்சள்வாங்ககிராமத்திற்குபோனவன் திடீரென்று மயங்கி விழுந்தான். ரத்தமாக வாந்தி. உடனே அவனை தூக்கிக்கொண்டு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு போக, அங்கு எம்.ஆர்.ஐ ஸ்கேன், சிடி ஸ்கேன் என்று அனைத்தும் செய்துவிட்டு ஒரு இடியை தூக்கி போட்டார்கள்.

அவனுடைய மூளைக்குச் செல்லும் நரம்பில் ரத்தம் கட்டி இருக்கிறது. மேலும் இதயத்திற்கு செல்லும் நரம்புகள் பின்னி கிடைக்கிறது என்று அதற்கு ஏதோ ஒரு வியாதி பேர் சொன்னார்கள். அது எதுவும் அலமுவுக்குப் புரியவில்லை.

அவள் அதிர்ந்து போய் நின்று இருந்தாள். அவள் அப்பாவுக்கு குடவாசலில் கோவில் பூஜை. கூட அண்ணாவும். சந்தானத்திற்கு கூடப் பிறந்தவர்கள் யாரும் இல்லை. ஒரு அக்கா மட்டும்தான். அவளும் மதுரையில் இருக்கிறாள். மிகச் சாதாரண குடும்பம்.

ஏதோ நூறு, இருநூறு என்றால் உதவி செய்ய முடியும். லட்சக்கணக்கில் யாரால் முடியும்? சந்தானம் படுத்து விட்டான் என்றதுமே எல்லோரும் வந்து பார்த்தார்கள். பழங்கள் வாங்கி கொடுத்து விட்டுப் பகவானை வேண்டிக்கோமா என்று போனார்கள்..

உண்மையில் பிரார்த்தனை என்பது வலிமையானதுதான். அது மனதிற்கு ஒரு தைரியத்தையும், நம்பிக்கையையும் ஊட்டுகிறது.

ஆனால் சந்தானம் படும் வேதனை களையும், அவன் ரத்த வாந்தி எடுப்பதை யும் பார்க்கும்போது மனம் சில்லிட்டு விடுகிறது.

இப்படித் துன்பமும் துயருமே தொடர்ந்து வரும்போது, இதை வாழத் தான் வேண்டுமா என்ற எண்ணம் தோன்றி விட்டது?

அந்த எண்ணத்தை உறுதிப்படுத்துவது போல் அவள் சமையல் வேலை செய்யும் வக்கீல் வீடும்.

மனிதர்களுக்குக் காமம் என்பது இன்னும் நீங்காத ஒரு உணர்வாகத்தான் இருக்கிறது. எத்தனை வயதானால் என்ன?

உனக்கு ஒரு உதவி செய்கிறேன் எனும்போது அவள் பல விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

அலமு அழகுதான். இளவயது. இன்னும் உடல் கட்டு விடாமல் இருந்தது. குழந்தை இன்னும் இல்லை. நீண்ட கூந்தலும், மஞ்சள் பூசிய மேனியும், வண்டு கண் களும், சிவந்த வாயும் அவளின் அழகை அனுபவிக்கத் துடித்தது மற்றவர்களுக்கு.

இந்த நேரத்தில்தான் வக்கீல் அவளைத் தனியாகச் சந்தித்தார்.

“நாங்க ரெண்டு மூணு வக்கீல் சேர்ந்து உன் புருஷனுடைய வைத்தியச் செலவு களை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் நீ எங்களுக்கு அனுசரணையாக இருக்க வேண்டும்”- என்றார்.

அந்த அனுசரணை என்பது என்ன வென்று புரிந்தது. துடித்துப் போனாள். இந்த அழகை சுட்டுப் பொசுக்கி விடலாமா என்று கொந்தளித்தது. அப்பொழுது தான் சந்தானமும், அலமுவும் சேர்ந்து முடிவெடுத்தார்கள்.

இருந்து என்ன சாதிக்கப் போறோம்? செத்துடலாம் என்று.

மஞ்சளை பூசானம் கலந்து அரைத்து வைத்திருக்கிறாள். வீட்டிற்கு போனதும் சாப்பாட்டோடு கலந்து ஆளுக்கு ஒரு வாய் சாப்பிட்டு விட்டால் எல்லா துன்பங்களுக்கும் ஒரு முடிவு வந்துவிடும்.

ஏழைகள் அழகாக இருக்கக் கூடாது. அவர்களுக்கு மிகப்பெரிய வியாதிகள்

வரக்கூடாது. அப்படி வந்தால் தன்னை, தன் உடம்பை விற்க அவள் தயாராக இருக்க வேண்டும் என்ற உண்மைகள் அவளை அணு அணுவாக குத்தியது.

கண்ணீர் வடிய மஞ்சளை ஒரு கிண்ணத்தில் போட்டுக் கொண்டு கிளம்பி னாள். மழை இன்னும் விடவில்லை.

சரி போயிடலாம் என்று வரும்போது, ஒரு கார் வந்து நின்றது.

பளபளவென்று தோற்றமும் பெரிய காரும் வந்திருப்பது ஏதோ பெரிய மனுஷர் கள் என்று புரிந்தது.

கார் கதவு திறந்து நடுத்தரவயதில் ஒருவர் பட்டு வேஷ்டியில் மிக வேகமாக உள்ளே ஓடி வந்தார். அவர் பின்னோடு வைரத்தோடும், பட்டுப்புடவையுமாக ஒரு பெண்மணி. கூடவே இளவயதில் ஒரு ஆடவன், அவர்களோடு ஒரு இளம் பெண், இரண்டு வயதில் ஒரு சிறு பையன்.



அந்த இளம் பெண்ணின் கையில் ஒரு குழந்தை.

“அடடா” குருக்கள் ஓடிப்போய் அவர்களை வரவேற்றார்.

“இந்த மழையில் எங்க இப்படி வரீங்க?”

“நாங்க புன்னைநல்லூர் போலாம்னு வந்தோம். வழியில மழைல கூகுள் மேப் மாத்தி விட்டுருச்சு. நாங்களும் எல்லாப் பக்கமும் சுத்திட்டோம். புன்னைநல்லூர் போற வழி தெரியல.”

“இந்தக் கொட்ற மழையில் நீங்க எப்படி போவீங்க. இப்படி உள்ள உட்காருங்கள்”

“இல்ல நாங்க போயாகணும். குழந்தைகள் எல்லாம் பசியா இருக்கா. எங்களுக்கும் ரொம்பப் பசி. கைக்குழந்த பாலுக்கு அழுகுது. ஹோட்டல் எங்கன்னு சொன்னார் தேவலாம்.” என்றார் பெண்மணி.

“இந்த மழையில் குழந்தையை தூக்கிக் கொண்டு நீங்க எப்படிப் போவீங்க? இங்கிருந்து ரோடுக்கு மூணு கிலோ மீட்டர் போகணும். அங்கிருந்து நீங்க புன்னைநல்லூர் போகலாம். சித்த இருங்கோ” என்ற அலமு வீட்டுக்கு ஓடினாள்.

சுடச்சுட சாதமும், ரசமும் இருந்தது. அவசரமாக ஒரு பருப்பு தொகையல் அரைத்து, வடகம் பொறித்தாள்.

விஷம் கலந்து குடிப்பதற்கு அரை லிட்டர் பால் இருந்தது. அதைக் காய்ச்சி சக்கரை போட்டுக் கொண்டு வந்தாள்.

“இதை முதல்ல சாப்பிடுங்க”

“என்னமா இது மழையில நனைஞ்சிட்டியே?”

“பரவாயில்ல. இப்படி பசியோட நீங்க எல்லாம் இருக்கும்போது மழையாவது ஒண்ணாவது”

அந்த நேரத்துக்கு சுடச்சுட ரசம் சாதமும் குழந்தைகளுக்கு பாலும் அமிர்தமாக இருந்தது.

“வடகம் ரொம்ப நல்லா இருக்கும்மா.”

“வீட்டிலேயே போடுகிறாள்” என்றார் குருக்கள்.

“அப்படியா! ரொம்ப நல்லா இருக்கு.”

“இப்படியே கோவிலுக்குள்ள இருங்க. குழந்தைக்கு இந்தப் பால குடுங்க. நான் அதுக்குள்ள எங்க வீட்டிலிருந்து உங்களுக்கு மதியம் சாப்பிட எதானும் செஞ்சு எடுத்துண்டு வருகிறேன்” என்றாள் அலமு.

“அதெல்லாம் எதுவும் வேண்டாம்மா. கொஞ்சம் மழை நின்னதும் நாங்க கிளம்பிடுவோம்”

“நீ வீட்டுக்கு போம்மா. சந்தானம் தனியா இருப்பான்”

“அப்படியா?”-அந்தப் பெண்மணி.

“அவள கணவனுக்கு உடல்நில சரியில்லை. அவனைப் பார்க்க வேண்டும்”-குருக்கள்.

“நீ போம்மா”

“ஏதாவது வேணும்னா சொல்லி விடுங்கள். நான் எடுத்துட்டு வரேன்” - அலமு.

"இந்த வயித்துக்கு இந்த நேரத்துக்கு சோறு போட்டு இருக்கியே. அது போதும்" அவர்கள் மகிழ்வோடு கூறினார்கள்.

"மாமா, எம்.ஆர்.ஐ ஸ்கேன், சிடி ஸ்கேன் ரிசல்ட் எல்லாம் அம்பாள் பாதத்தில் வச்சிருக்கேன். ஏதோ அவ பார்த்து கருணை பண்ணட்டும். நான் வீட்டுக்கு போயிட்டு அப்புறமா வரேன்" வீட்டுக்கு ஓடி வந்தாள் அலமு.

சந்தானத்தைச் சுற்றி ரத்தம் பரவி இருந்தது. வாந்தி எடுத்திருந்தான். மூச்சு இரைத்தது.

அலமு உடல் முழுவதையும் துடைத்து, படுக்க வைத்தாள்.

"என்னால உனக்கு ரொம்ப சிரமம்"

"ஒரு சிரமமும் இல்லை. உங்களுக்கும் ஒரு ரசம் சாதம் கரைத்து கொடுக்கிறேன்."

"எதுக்கு ரசம் அலமு?. நாமதான் ஒரேடியா விஷத்தை சாப்பிடப் போகிறோம்."

"இருந்தாலும் அதற்கு முன்னாடி கொஞ்சம் வயித்துல சோறு இறங்கனும் இல்லையா?"

வேண்டாம் என்றாலும் அவன் சாப்பிடும் வேகத்தை பார்த்து பரிதாபமாக இருந்தது.

அவனுக்குத்தான் வாழ்க்கையில் எத்தனை ஆசை? ஒவ்வொரு நாள் இரவிலும் அவள் மடியில் சாய்ந்து கொண்டு "நீ எனதின்னுயிர் கண்ணம்மா" என்று பாடுவான்.

காணி நிலம் வேண்டும் பிடித்தமான பாடல்.

இன்று உனக்கு எந்த நிலம் சொந்தம்? கண்ணில் துளிர்த்த நீரைச் சுண்டி எறிந்தாள்.

ஓட்டு வீடுதான். வறுமைதான். ஆனால் வசந்தமாக இருந்தது. அன்பில் நனைந்த நாட்கள். எதற்கு இந்த வியாதி?

"கவலைப்படாதே அலமு" சந்தானம் அவளை அருகில் இழுத்து அமர்த்திக் கொண்டான்.

"நம்ம ரெண்டு பேரும் ஒண்ணா போயிடலாம். தனியா உன்னால இந்தக் கழுகுகளிடமிருந்து தப்பிக்க முடியாது"

"-----"

"அடுத்த ஜென்மத்துல நீயும் நானும் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்து நோயில்லாத உடம்போடு இந்த உலக வாழ்க்கையை அனுபவிக்கலாம் அலமு. அந்த உலகில் மோசமான மனிதர்கள் இருக்க மாட்டார்கள."

அலமு அவனை இறுகத் தழுவிக் கொண்டாள்.

"விஷத்தை எடுத்துட்டு வா அலமு"

அலமு மஞ்சள் உருண்டைகளை மோரில் கரைத்து ஆளுக்கு ஒரு டம்ளர் ஊற்றி வைத்தாள். குடிக்கலாம் எனும் போது கதவு தட்டப்பட்டது.

**பின் குறிப்பு.**

காரில் வந்தவர்களில் அந்த நடுத்தர வயதுகாரார்தான் மும்பை டாக்டர் என்பது இந்தப் பிரபஞ்சத்தின் மாயாஜாலம்.

■

# அவளுக்கே அவளுக்காக...



**ஜெயஸ்ரீ எம். சாரி,**
**ஆதம்பாக்கம்.**

கோதா அவள் குடும்பத்தில் கடைக் குட்டியாய் பிறந்த போதிலும் செல்ல மாகவும், அதே சமயத்தில் கட்டுக் கோட்பாகவும் வளர்க்கப்பட்டவள் தான்.

படிப்பிலும், அடுத்தவர்களிடம் பழகுவ திலும் சராசரிக்கும் கொஞ்சம் மேலே தான் அவள் இருந்தாள். கோதாவின் அம்மா ஜானகி யாரிடமும் பெண்ணைப் பற்றி பெருமையாய் இன்றளவும் கூறி கோதா பார்த்ததே இல்லை. தன் மனதிலேயே மகிழ்வார் என்று இன்றும் கோதாவுக்கு இந்த விஷயத்தில் ஒரு நம்பிக்கை. அவள் அப்பா ராஜனோ தன் பெண்ணின் சின்ன-சின்ன சாதனைகளுக்கூட தன் ஆனந்தக் கண்ணீரிலேயே தன் பாராட்டைத் தெரிவிக்கும் இயல்புடையவர்.

ராஜன் - ஜானகி தம்பதி 25 வருடங் களுக்கு முன் தங்கள் மகளுக்கு திருமணம் முடித்து புக்ககம் அனுப்பினர். கோதா பல்வேறு சூழ்நிலைகள், பல்வேறு சவால் கள், பல்வேறு சுவையான அனுபவங்கள் எனக் காலங்களை அங்கு செலவழித்தாள், இந்தக் கால் நூற்றாண்டில்.

கோதாவுக்கோ அப்பா - அம்மா இல்லமும், இரு சகோதரர்கள் இல்லங் களும் எப்பொழுதும் வரவேற்கும் கருவூ லங்கள் தான் இருக்கின்றன.

கோதா சென்னைக்கு குடிபெயர்ந்ததும் மனதிற்கு புது தெம்பு வந்தது போல ஒரு உணர்வு அவளுக்கு ஏற்பட்டது.

அனைத்தும் அருமையாய் இருந்தாலும் சொல்லமுடியாத ஒன்று மனதில் அவள் உணர்ந்தாள்.

இப்பொழுது கோதாவுக்கு இளைப்பாற வும், அவளுக்கான விஷயத்திற்காக அவள் இயங்கவும் கொஞ்சம் நேரம் தோதாய் அமைந்ததாக அவள் நினைத்தாள். மேலும், அவள் தன் இல்லத்தில் தனியாக ஒரு 5-6 மணி நேரம் இருக்க வேண்டிய கட்டாயமும் இந்த வாரத்தில் அவளுக்கு இருந்தது. உடனே, தன் கைப்பேசியை எடுத்து ஜானகியிடம் 'நான் அங்கு வருகிறேன்,' என்று சொல்ல, ஜானகியும்



'வாயேன்' என மகளை அழைத்தாள். கோதாவும் சில வெளி வேலைகளை முடித்துக் கொண்டு அங்கு சென்றாள். கிடைத்த இரண்டு மணி நேரத்தில் தன் பெற்றோரிடம் இருந்து தன் யூ-ட்யூப் சானலுக்கு வேண்டிய விஷயங்களை எடுத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

அவளுக்கே ஆச்சரியம் அளிக்கும் விதமாய் மீண்டும் கோதாவுக்கு அதே வாய்ப்பு கிட்டியது. உடனே, தன் அன்னையின் இல்லத்திற்கு சென்றாள். அங்கு ராஜனும் - ஜானகியும் அவரவர்கள் வேலையில் இருந்தவர்கள், அவள் சென்றவுடன் அவர்கள் மூவரும் பேச ஆரம்பித்தார்கள். ராஜனோ தன் பெற்றோ ரின் கதைகளைக் கூற, ஜானகி பொது வான விஷயங்களை சொல்ல என அங்கு நேரம் சென்றதே அம்மூவரணிக்கு தெரிய வில்லை. நடுவில் கொஞ்சம் ட்ரை ஃப்ரூட் லட்டு, காலிஃப்ளவர் பக்கோடா எனச் செய்து சுவைத்தார்கள்.

கோதா கடை வீதி சென்றபோது டிசம்பர் பூச்சரம் வாங்கி வந்தவுடன், ஜானகியோ கோதாவிற்கு ஐந்து - கால் பின்னல் பின்னி விட்டார்.

கோதாவும் அம்மாவிற்கு சிறு சிறு உதவி களையும் செய்துவிட்டு இந்த இரண்டு நாட்கள் 'அவளுக்கே அவளுக்காக' தன் அப்பா- அம்மாவுடன் செல விட்ட நிமிடங்களை எண்ணி மகிழ்ந்து கொண்டே தன்னுடைய மொபெட் டில் சிட்டாய் பறந்து அவளுடைய இல்லம் வந்தடைந்தாள்.

சில சமயங்களில் நமக்கே நமக்காகவும் நேரத்தினை அனுபவிக்க வேண்டும் தானே, சரி தானே என்று தன் மனதிற்கே சொல்லிக் கொண்டாள், கோதா. ■

# தீபத்தின் ஒளிநாக்கில்

**- பாவலர். கருமலைப் பழம் நீ**

அஞ்சாத பார்வையும்
அன்பான வார்த்தையும்
அமைந்தோர்க்கு துன்ப மில்லை
நெஞ்செல்லாம் நேர்மையும்
எண்ணங்கள் தூய்மையும்
கொண்டோர்க்கு தோல்வி இல்லை

நகர்ந்தோடும் பருவ மென்று
நரைவந்து உணர்த்தினாலும்
புரியாமல் கிடக்கலாமா
புகழ்மிக்க நெறிகொண்டும்
உயிராடும் உடல் கொண்டு
உதவாமல் இருக்க லாமா

காமத்தை வரவாக்கிக்
காலத்தைச் செலவாக்கிக்
களித்தவர்கள் நிலைத்த தில்லை
நாமத்தை மதிக்காமல்
நல்லோரைப் பழித்தவர்கள்
நன்மைகள் கண்ட தில்லை

பழிகூறிப் புறம்பேசி
பாவியெனப் பெயர் தாங்கி
பாதகங்கள் புரிய லாமா
அழியாத உடலென்று
அகங்காரம் கொண்டிங்கு
அலைந்தோடித் திரிய லாமா

கோபத்தின் நிழல் கூட
கூடாமல் மனிதரெல்லாம்
குணக்குன்றாய் மாற வேண்டும்
தீபத்தின் ஒளி நாக்கில்
திருஞானப் பழமாகி
இசைகொண்டு வாழ வேண்டும்

# மரகத மகுட அப்பத்தா...

மாலதி சந்திரசேகரன்



வெள்ளியங்கிரி மலையிலிருந்து இறங்கி வரும் குளிர்ந்த காற்று, தொண்டாமுத்தூர் கிராமத்தின் தென்னந் தோப்புகளைத் தழுவிச் சென்றது. அதி காலை ஐந்து மணிக்கே வாசலில் சாணம் தெளித்து, பெரிய இழைக்கோலம் போட்டு முடித்திருந்தாள் மரகதம் அப்பத்தா. எழுபது வயதைத் தாண்டினா லும், அவளது முதுகெலும்பு இன்னும் அந்தத் தென்னை மரங்களைப் போலவே நிமிர்ந்து நின்றது.

மரகதம் வெறும் ஒரு மூதாட்டி மட்டுமல்ல; அந்த ஊரின் 'நிச்சயதார்த்தம்' முதல் 'நிமித்தம்' வரை அனைத்தும் அவளின் ஆலோசனையின்றி நடக்காது. அந்தப் பகுதியில் அவளை 'மரகத மகுடம்' என்றுதான் ரகசியமாக அழைப்பார்கள்.

அன்று வீட்டில் ஒரு பெரிய விவாதம் நடந்து கொண்டிருந்தது. மரகதத்தின் மகன் சுந்தரம் மற்றும் அவனது மகன் செந்தில் இருவரும் சோகமாக அமர்ந்திருந்தனர். விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டம், வாங்கிய கடன் என குடும்பம் ஒரு இக்கட்டான சூழலில் இருந்தது.

செந்தில் சொன்னான், 'அப்பத்தா, பேசாம இந்த 'காட்டுத் தோட்டத்தை' அந்த ரியல் எஸ்டேட் காரர்கிட்ட வித்துரலாம்னு இருக்கோம். வர்ற காசை வச்சு கடனை அடைச்சுட்டு, சிட்டியில ஏதாவது தொழில் பண்ணலாம்னு பார்க்குறேன்.'

மரகதம் மெல்லத் திரும்பிப் பார்த்தாள். அவள் கண்கள் சுருங்கியிருந்தாலும் அதில் ஒரு தீர்க்கம் இருந்தது.

'ஏன் சாமி அப்படிச் சொல்ற? இந்த மண்ணு நம்ம ஆத்தா மாதிரி. ஆத்தாவை வித்துட்டு வர்ற காசுல சோறு திங்கணுமாக்கும்?' என்று கொங்கு பாஷையில் மென்மையாகக் கேட்டாள்.

சுந்தரம் குறுக்கிட்டான், 'இல்லம்மா, செந்தில் சொல்றதும் சரிதான். இப்போ இருக்குற நிலைமையில விவசாயம் ஒன்னும் கட்டுப்படியாகல. ஆளுங்க கூலி ஏறிப்போச்சு, தண்ணி பற்றாக்குறை... நாம எதுக்கு இங்க கஷ்டப்படணும்?'

மரகதம் எழுந்து நின்றாள். 'இஞ்சீங்க

பாருங்க... கஷ்டம் இல்லாத காலம் எது? நான்உங்கையனை(கணவனை)இழந்தப்ப, நீ சின்னக் குழந்தை. அப்போ இந்த ஊரே என்னை 'வெள்ளை சேலை கட்டிக்கிட்டு வீட்ல இரு'ன்னு சொன்னுச்சு. ஆனா, இதே மண்ணை நம்பித் தான் உன்னை ஆளாக்குனேன். அப்போ வராத கஷ்டமா இப்போ வந்துருச்சு?'

மரகதத்தின் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன. முப்பது வருடங்களுக்கு முன்னால், இதே தோட்டத்தில் பத்துக்கும் மேற்பட்ட ஆண்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அவளது கணவன் திடீரென மாரடைப்பில் இறந்துவிட, அந்த மொத்தப் பொறுப்பும் அவள் தலையில் விழுந்தது.

ஒரு பெண்ணாகத் தனியாக நின்று அந்தத் தோட்டத்தைப் பராமரிக்க அவள் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஊர் ஆண்கள் கிண்டல் செய்தார்கள். 'ஒரு பொம்பளை வந்து ஏர் ஓட்டப் போறாளா? இல்ல தென்னை ஏறப் போறாளா?' என்று எள்ளி நகையாடினர்.

அன்று மரகதம் சொன்ன பதில் இன்றும் அந்த ஊர் பெரியவர்களுக்கு ஞாபகம் இருக்கும். 'ஏனுங்க... பூமாதேவியே ஒரு பொம்பளை தானுங்க. அவ தாங்குறப்ப, என்னால இந்த நாலு ஏக்கரைத் தாங்க முடியாதா?'

அன்று முதல் அவள் உழைத்த உழைப்பு, இன்று அந்தத் தோட்டத்தை ஒரு பசுஞ்சோலையாக மாற்றியிருந்தது. தென்னை, பாக்கு, ஊடுபயிராக வாழை என ஒரு ஒருங்கிணைந்த பண்ணையையே உருவாக்கியிருந்தாள்.

செந்தில் இன்னும் பிடிவாதமாக இருந் தான். 'அப்பத்தா, நீங்க பழைய காலத்தைப் பேசுறீங்க. இப்போ டெக்னாலஜி வளர்ந் துருச்சு.'

மரகதம் சிரித்தாள். 'டெக்னாலஜி இருந்தா சோறு தானா தட்டுல வந்து விழுந்துருமா கண்ணு? இங்க பாரு... நேத்து அந்த வடுகபாளையம் விஸ்வநாதன் வந்தாரே, அவர் தோட்டத்துல பூச்சி விழுந்துருச்சுன்னு அழுகுறாரு. அதுக்குக் காரணம் என்ன தெரியுமா? மண்ணை மதிக்காம ரசாயனத்தை கொட்டுனது தான்.'

அப்போது அண்டை வீட்டுக்காரர் பழனிச்சாமி உள்ளே வந்தார். 'என்ன மரகதக்கா... வீட்ல சத்தம் பலமா இருக்குது?'

மரகதம் சொன்னாள், 'இஞ்சீங்க பழனிச்சாமி... என் பேரன் இந்தத் தோட்டத்தை வித்துட்டுப் போகணும்னு சொல்றான். எனக்கு என்னவோ மனசு கேக்கலீங்க. பொட்டப் புள்ளைய பெத்து வளர்த்துட்டு, கல்யாணம் பண்ணிக் குடுக்குறப்ப வர்ற அதே வலி இப்ப வருதுங்க எனக்கு.'

பழனிச்சாமி செந்திலைப் பார்த்து, 'தம்பி, உங்க அப்பத்தா சொல்றதக் கேளு. இந்தப் பகுதியிலேயே ஒரு பெண்ணால இவ்வளவு பெரிய தோட்டத்தை எப்படிக் காப்பாத்த முடிஞ்சதுன்னு ஒரு வாட்டி யோசிச்சுப் பாரு. உன்னோட படிப்பு வேணா பெருசா இருக்கலாம், ஆனா அவங்களோட அனுபவம் இந்த வெள்ளியங்கிரி மலையை விடப் பெருசு.'

மரகதம் சும்மா உணர்ச்சிவசப்பட்டு பேசவில்லை. அவளிடம் ஒரு திட்டமும் இருந்தது. அவள் தன் மருமகள் கமலாவை அழைத்தாள்.

# கடந்து போகிறேன்

இதயத்தை உடைத்தவர்கள்
இங்கு பலருண்டு
உதயத்தை காணாதவர்கள்
இங்கு பலருண்டு
இவர்களை டந்து போகிறேன்

இரக்கம் கொள்வதாய்
நடிப்பவர்கள் பலருண்டு
உறக்கத்தை காணாதவர்கள்
இங்கு பலருண்டு
இவர்களை கடந்து போகிறேன்

கடந்து போவது
என்னைக் காப்பாற்றிக்
கொள்ளும் சுயநலமே
என்னைக் காப்பாற்ற
முடியாமல் போனால் - பின்பு
எப்படி சமுதாயத்தை
காப்பாற்ற முற்படுவேன்
என் வயிறும்
சட்டைப்பையும் நிறைந்தால்தான்
மற்றவர்களுக்கு செய்ய முடியும்

இதை போய் தவறு என்றும்
அநியாயக்காரன் என்றும்
வசைமாறி பொழிந்தால்
நான் பொறுப்பாக முடியாது
சொல்லி முடித்தான் அரசியல்வியாதி


**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு




'கமலா, இங்க வாம்மா. இந்தா இந்த டைரியை எடு.'

அந்தப் பழைய டைரியில் மரகதம் கடந்த பத்து வருடங்களாக எந்தெந்தப் பயிருக்கு எவ்வளவு செலவு செய்தாள், எப்போது விளைச்சல் அதிகம் கிடைத்தது என்பதைத் தெளிவாக எழுதி வைத்திருந்தாள்.

'செந்தில், இதப் பாரு. நாம தேங்காய் விக்கிறதுல மட்டும் லாபம் பார்க்க முடியாது. இந்தத் தோப்புல கிடைக்கிற மட்டையை வச்சு நார் தயாரிக்கலாம், தென்னங்கள்ளை அரசாங்க விதிகளுக்கு உட்பட்டு மதிப்புக்கூட்டி விக்கலாம். அதுமட்டுமில்லாம, நாம ஏன் இயற்கை விவசாயத்துக்கு மாறக்கூடாது? இப்போ டவுன்ல இருக்கிறவங்க எல்லாம் 'ஆர்கானிக்'னு தேடி வர்றாங்களே, அங்க கொண்டு போய் நம்ம பொருளை விக்கலாம்ல?'

செந்தில் ஆச்சரியப்பட்டான். ஒரு எழுபது வயதுப் பாட்டி, சந்தைப் பொருளாதாரத்தைப் பற்றி இவ்வளவு நுணுக்கமாகப் பேசுகிறாளே என்று வியந்தான்.

மரகதம் தொடர்ந்தாள், 'ஏனுங்க... ஒரு பொம்பளை வீட்டுக்குள்ளேயே முடங்கி கிடந்தா, அவளுக்கு ஒன்னும் தெரியாதுன்னு நினைக்காதீங்க. குடும்பத்தை நிர்வாகம் பண்ற ஒவ்வொரு பெண்ணும் ஒரு சிறந்த பொருளாதார நிபுணர் தான். அஞ்சறைப் பெட்டியில சேமிக்கிற காசுல இருந்து, அடுப்பங்கரையில வீணாகுற பொருளை உரமா மாத்துற வரைக்கும் எங்க புத்தி எப்பவும் வேலை செஞ்சுட்டே தான் இருக்கும்.'

மரகதம் அன்றிரவு அந்தத் தோட்

*டத்தைச் சுற்றி வந்தாள். நிலவொளியில் அந்தத் தென்னை மரங்கள் அவளிடம் பேசுவது போலத் தோன்றியது. அவள் ஒவ்வொரு மரத்தையும் தன் பிள்ளையாகவே கருதினாள்.*

*பெண் என்பவள் வெறும் அழகுப் பொருள் அல்ல; அவள் ஒரு ஆளுமை. ஒரு குடும்பம் சிதறாமல் இருப்பதற்கும், ஒரு நிலம் வறண்டு போகாமல் இருப்பதற்கும் ஒரு பெண்ணின் அர்ப்பணிப்பு மிக முக்கியம்.*

*அடுத்த நாள் காலை, செந்தில் தன் முடிவை மாற்றிக் கொண்டான். 'அப்பத்தா, என்னை மன்னிச்சிருங்க. நீங்க சொன்னது தான் சரி. நான் சிட்டிக்கு வேலைக்குப் போகல. இங்கயே இருந்து நம்ம தோட்டத்தைப் புதுசா மாத்துறேன். நீங்க தான் எனக்கு குரு.'*

*மரகதம் கண்கள் பனிக்க அவனை அணைத்துக் கொண்டாள். 'இங்க பாரு சாமி... பெண்ணுங்கிறது ஒரு ஊத்து மாதிரி. அவங்களை எவ்வளவு தூரம் தோண்டுறீங்களோ, அவ்வளவு தூரம் அன்பு சுரக்கும். அதே சமயம், அவங்க மனசு வச்சா பாறையைக்கூட உடைச்சுப் பாதையை உருவாக்குவாங்க. இந்தத் தோட்டம் இனி உன் பொறுப்பு, ஆனா வழிகாட்டுதல் எப்பவும் இந்த அப்பத்தா கிட்ட தான் இருக்கும், சரியா?'*

*அன்று முதல் அந்தத் தோட்டம் புதிய பொலிவு பெற்றது. செந்தில் இயற்கை விவசாய முறைகளைக் கையாண்டான், ஆனால் மரகதத்தின் பாரம்பரிய நுணுக்கங்களைத் தான் அடிப்படையாகக் கொண்டான். அந்த ஊரில் 'மரகத மகுடம்' என்ற பெயர் மேலும் புகழ்பெற்றது.* ■

## சூடான சொற்கள்

சூடான தேநீர்
சூடான உணவு
சூடானபடி கிடைக்கும்
எல்லாவற்றையும்
சூடாகவே வாங்கிக் கொள்ளும்
சூடிக் கொள்ளும்
ஒரு குளிர் கால
உடலும்..நாவும்
சூடான சொற்களை
எதிர்கொண்டதும்
தன் மனசுடன்
கூட்டணி அமைத்து
அதே சூட்டுடன்
சுட்டுத் தள்ளுகிறது
பலமடங்கு சுடுசொற்களை
ஒரு பிரச்சாரம் போல..
இதுவோர் குளிர்மகிழ்
தேர்ந்தெடுப்பு காலமென்பதை
அறிந்தும் அறியாதபடி!

- ம.சக்திவேலாயுதம்






**சிற்றுளியின் செதுக்கல்கள்**

**தன்முனைக் கவிதைகள்**

**தமிழில்**

**சு. பிரவந்திகா,**

**ஆங்கிலம், கன்னடம், இந்தியில்**

**முனைவர் வே. புகழேந்தி**

**ஒரு பார்வை – பொன். குமார்**

தமிழில் தன்முனைக் கவிதைகள் எழுதுவதிலும் எடுத்துச் செல்வதிலும் முதன்மையாக இருப்பவர் கவிஞர் கா. ந கல்யாணசுந்தரம். தன்முனைக் கவிதைகள் வளர்ப்பதில் இரண்டாமிடத்தில் இருப்பவர் கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு. கவிஞர் அன்புச்செல்வியும் தன்முனைக் கவிதைகளை வளர்ப்பதுடன் தன்முனைக் கவிதைகளை எழுதுபவர்களையும் ஊக்குவித்து வருபவர். எழுதவும் வைப்பவர். கவிஞர் அன்புச்செல்வியின் கணவர் சுப்புராஜு அவர்களும் ஒரு கவிஞர். பெயர்த்தியும் ஒரு கவிஞர். பெயர் சு. பிரவந்திகா. இவரின் தன்முனைக் கவிதைகள் அடங்கிய தொகுப்பு **சிற்றுளியின் செதுக்கல்கள்**. இது இரண்டாம் தொகுப்பு. முதல் தன்முனைக் கவிதைத் தொகுப்பு சிறு கை முகிழ்த்த அரும்புகள். சிற்றுளியின் செதுக்கல்கள் என்னும் தொகுப்பு நான்கு மொழிகளில் எழுதப் பட்ட ஒரு தொகுப்பாகும். தமிழில் சு. பிரவந்திகாவும் ஆங்கிலம், கன்னடம், இந்தியில் முனைவர் வே. புகழேந்தியும் மொழிபெயர்த்துள்ளனர்.

மொழியில் உயர்வாம்
தமிழினைத் தொழுவோம்
வள்ளுவத்தைப் பயின்று
வளமாய் வாழ்வோம்

என்னும் தன்முனைக் கவிதையுடன் தொகுப்பைத் தொடங்கியுள்ளார். பொதுவாக தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்குவர். கவிஞர் தமிழினைத் தொழுவோம் என்று அழைப்பு விடுத்துள்ளார். இத் தன்முனைக் கவிதையை

Let us rise in language
Let us worship Tamil
Let us live prosperously
Studying the philosophy of Kural

என ஆங்கிலத்திலும் மற்றும் கன்னடம், இந்தியிலும் மொழிபெயர்த்துள்ளார். தமிழில் எழுதியதை உள்வாங்கி சரியாக ஆங்கிலத்தில் பெயர்த்துள்ளார்.

அன்பைக் கூட்டினேன்
வெறுப்பைக் கழித்தேன்
அறிவைப் பெருக்கினேன்
கணக்கு எளிதானது

என்னும் கணக்கு தேவையானது. வாழ்வில் எதைக் கூட்ட வேண்டும், எதைக் கழிக்க வேண்டும், எதை பெருக்க வேண்டும் என்று எழுதியுள்ளார். மிக எளிதானது இந்த தன்முனைக் கவிதை. சக மாணவர்களுக்கும் சக நண்பர்களுக்கும் புரியும் வண்ணமும் எழுதியுள்ளார்.

பாம்பு என்னும் உயிர் ஓர் ஊர்வன வகையாகும். பாம்புகளில் சில விசபாம்பு களும் உண்டு. சில விசமற்ற பாம்புகளும் உண்டு. ஆனாலும் எல்லா பாம்புகளுமே அச்சம் தருபவை. பொதுவாக பாம்பைக் கண்டால் எல்லோருக்கும் பயமே. பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பர். மனிதர் எந்தளவிற்கு பாம்பைக் கண்டு பயப்படுகிறார்களோ அந்தளவிற்கு பாம் பும் மனிதரைக் கண்டும் அஞ்சும்.

ஊர்ந்த பாம்பைப் பார்த்து
பயத்தில் கத்தினோம்
எங்களைப் பார்த்து
பாம்பு பயந்து ஓடியது

என்னும் தன்முனைக் கவிதை மூலம் பாம்புடனான அனுபவத்தை வெளிப் படுத்தியுள்ளார். பாம்பு தற்காப்புக் காகவே மனிதரைக் கடிக்கும். அதுவே விசமாகிவிடும். பாம்புக்கும் பயம். மனிதருக்கும் பயம். பயத்துடனேயே வாழவேண்டியுள்ளது.

பயம்
ஊர்ந்து கொண்டிருக்கும் - இது
பாம்பு போன தடம்

என்னும் கவிஞர் ஈரோடு தமிழன்பனின் ஹைக்கூவை நினைவூட்டியது.

மூலையில் ஓடும்
கரப்பான் பூச்சி
கிட்டே வராவிட்டாலும்
நகர்ந்து நிற்கிறேன்

என்பதும் ஒரு சிறு அனுபவம். வீட்டின் மூலையில் கரப்பான் பூச்சிகள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டேயிருக்கும். மனிதரிடம் நெருங்காது. இருந்தாலும் விலகி நிற்கவே தோன்றும். பயம் இல்லை யென்றாலும் ஓர் அருவெறுப்பு ஏற்படும்.

முட்டி போட
முயற்சி செய்கிறான் தம்பி
முட்டி விடுவானோ
தலையணை வைக்கிறேன் நான்

என்பதில் அமைப்பும் உள்ளது. அன்பும் வெளிப்பட்டுள்ளது. சொல்லாடலும் சுவை. நல்ல தன்முனைக் கவிதை.

My younger brother is
trying to kneel down
Will he stumble down?
I keep a pillow in front of him

என்பதை ஆங்கிலத்தில் அழகாக மொழிபெயர்த்துள்ளார் முனைவர் வே. புகழேந்தி.

பள்ளிப் புத்தகங்களுக்கு
ஓய்வு கிடைத்தன
கரங்களில் தவழ்கின்றன
நூலகப் புத்தகங்கள்

என்பதின் மொழிபெயர்ப்பு

School books have
found rest
library books are crawling
in the hands

என்பதாகும். பள்ளிப் புத்தகங்களை படிப்பதுடன் நூலகப் புத்தகங்களையும் படிக்க வேண்டும் என்கிறது தன்முனைக் கவிதை. பள்ளிப் புத்தகங்கள் மதிப்பெண் பெற உதவும். நூலகப் புத்தகங்கள் அறிவு பெற உதவும்.

கவிதை என்பது கற்பனை என்பது காலம் கடந்த ஒன்று. தற்போது கவிதை என்பது நிஜம். நடப்பு. கவிஞர்கள் காண்பதையும் கேட்பதையுமே எழுதுகின்றனர்.

காண்பதிலும் கேட்பதிலும்
தானே உருவாகுகிறது
நான் எழுதும்
கதையும் கவிதையும்

என கவிஞர் சு. பிரவந்திகாவும் தான் எழுதும் கதைக்கும் கவிதைக்குமான கருப் பொருள்கள் காண்பதிலும் கேட்பதிலுமே கிடைக்கின்றன என்கிறார். காண்பதையும் கேட்பதையும் எழுதுவதாலே படைப்பில் ஓர் உயிர்ப்பும் இருக்கிறது.

நிலாவை பாம்பு விழுங்குதல் என்பது சந்திர கிரகணத்தை குறிக்கும் ஒரு தொன்மவியல் மற்றும் இலக்கியக் கருத்தாகும். ராகு, கேது என்பர். அறிவியல் ரீதியாக இது நிழல் மறைப்பைக் குறிக்கும். திருக்குறளில் காதலர் சந்திப்பு ஊர் முழுவதும் வேகமாகப் பரவுவதை, நிலவைப் பாம்பு விழுங்கியது போல என்று உவமையாக வள்ளுவர் குறிப்பிடுகிறார். இது உண்மையல்ல. இது புராணம். சந்திர கிரகணம் என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி நேர்க்கோட்டில் வரும்போது பூமியின் நிழல் சந்திரன் மீது பட்டு சூரிய ஒளி நிலவில் படுவதைத் தடுக்கும் ஒரு வானியல் நிகழ்வாகும். இது பௌர்ணமி நாள்களில் மட்டுமே நிகழும் அப்போது சந்திரன் மங்கலாகவோ அல்லது செந்நிறமாகவோ காட்சியளிக்கும்.

நிலாவைப் பாம்பு விழுங்கும்
பயம் காட்டும் பாட்டி
நிலா,பூமி,சூரியன்
வகுப்பு எடுக்கிறாள் பேத்தி

என்னும் தன்முனைக் கவிதையில் மூடத்தனத்தில் மூழ்கிக் கிடக்கும் பாட்டிக்கு பேத்தி அறிவுபூர்வமாக தெளிவு படுத்துகிறாள். பேத்திகள் அறிவுபூர்வமாக சிந்திக்கிறார்கள் என்கிறார்.

வயிறு நிறைந்து
இருந்தாலும் தேவைப்படுகிறது
ஆச்சி சாப்பிடும் உணவில்
இரண்டு உருண்டைகள்

என்னும் தன்முனைக் கவிதையில் ஆச்சியின் மீதான அன்பை வெளிப்படுத்தி யுள்ளார். ஆச்சியிடம் வாங்கி சாப்பிட் டாலே பசியாறும், மனதும் நிறைவுறும் என்கிறார்.

நாள்தோறும் விளையாடுகிறேன்
பரமபதமும் பல்லாங்குழியும்
அலைபேசி வழியாக
யாருக்கும் தெரியாமல்

என்னும் தன்முனைக் கவிதையும்

ஓடிப் பிடித்து
நண்பர்களுடன் விளையாடினேன்
கூடிக்கொண்டே போகிறது
புத்துணர்ச்சியும் சுறுசுறுப்பும்

என்னும் தன்முனைக் கவிதையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக உள்ளன. முன்னதில் விளையாட்டு என்பது அலைபேசியுடன் முடிந்து விடுகிறது என்று வருத்தப்பட்டுள்ளார். பின்னதில் நண்பர்களுடன் விளையாடுவதால் ஒரு புத்துணர்ச்சியும் சுறுசுறுப்பும் ஏற் படுகிறது என்கிறார். இரண்டிலுமே விளையாட்டு என்பது உண்மையிலேயே விளையாடுவதாக இருக்க வேண்டும் என்கிறார்.

பகலிலும் எரியும்
தெரு விளக்குகள்
மின்சார சிக்கனம்
தேவை இக்கணம்

என்னும் தன்முனைக் கவிதையில் மின்சாரத்தை சேமிக்க வேண்டும் என்கிறார். சிக்கனமாக பயன்படுத்த கோரியுள்ளார். பகலில் தெருவிளக்கு எரிப்பவர்களை விமர்சித்துள்ளார்.

மனிதர் பூமியை மாசு படுத்துகிறான். சுயநலத்தால் சுகாதார கேடு விளைவிக்கி றான். மனிதர் மாசு படுத்துவதால் பூமி வெப்பமயமாகிறது.

மாசுக்களை நிரப்பிடும்
தன்னல மனித உலகம்
மூச்சு விடத் திணறுகிறது
வெப்ப மயமான பூமி

என்னும் தன்முனைக் கவிதையில் பூமியை மாசுபடுத்துபவர்களைக் கண்டித் துள்ளார். சுயநலமே காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

கவிஞர் சு. பிரவந்திகா ஒரு சிறுமி. ஒரு சிறுமியை சிற்றுளிக்கு ஒப்பிட்டு சிற்றுளியின் செதுக்கல்கள் என தலைப்பு வைத்து தன்முனைக் கவிதைகள் தரப்பட்டுள்ளன. ஒரு தொகுப்பிலுள்ள தன்முனைக் கவிதைகள் நான்கு மொழிகளில் தந்தது குறிப்பிடத்தக்கது. தமிழில் சு. பிரவந்திகா எழுதியதை ஆங்கிலம், கன்னடம், இந்தி என மூன்று மொழிகளில் மொழிபெயர்த்திருக்கும் முனைவர் வே. புகழேந்தி பாராட்டுக்குரியவர். கவிஞர் ஈரோடு தமிழன்பன் ஒரு கவளம் சோறும் கவிதையும் என்னும் தலைப்பில் மும்மொழிகளில் ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார் கவிஞர் ஈரோடுதமிழன்பன். வா. மு. சே. ஆண்டவர் ஹைக்கூக்கள் என்னும் தலைப்பில் மூன்று மொழிகளில் ஹைக்கூக்களை வெளியிட்டுள்ளார். இருமொழிகளில் ஏராளமான தொகுப்புகள் வந்துள்ளன. நான்கு மொழிகளில் வந்துள்ளது சிற்றுளியின் செதுக்கல்கள். ஏழு மொழிகளில் வந்துள்ளது கவிஞர் கவிநிலா மோகனின் ஒரு புல்லாங்குழல் ஏழு ஸ்வரங்கள் என்னும் ஹைக்கூத் தொகுப்பு. தன்முனைக் கவிதை தெலுங்கிலிருந்து தமிழுக்கு வந்தது. இத்தொகுப்பு மூலம் ஆங்கிலம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளுக்குச் சென்றுள்ளது. கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்களின் பேத்தி என்பதை கவிஞர் சு. பிரவந்திகா நிருபித்துள்ளார். தன்முனைக் கவிதையின் அளவுகோலை உணர்ந்து, சரியாக உள்வாங்கி எழுதியுள்ளார். கற்பனையில் எழுதாமல் கண்ணில் கண்டதையே எழுதி கவனத்தை ஈர்த்துள்ளார். சிறுமி என்றாலும் சிந்தனையில் ஒரு முதிர்ச்சியைக் காண முடிகிறது. பதிமூன்று வயது என்றாலும் பட்டம் பெற்ற பக்குவத்தை வெளிப் படுத்தியுள்ளார். புதுக்கவிதை போல, நவீனக் கவிதை போல, ஹைக்கூ கவிதை போல தன்முனைக் கவிதையும் தமிழில் செழித்தோங்கும் என்பதைத் தெரிவிக்கிறது கவிஞர். சு. பிரவந்திகாவின் சிற்றுளியின் செதுக்கல்கள் ■



# வெண்பாப் போட்டி (பயணம்) 52

போட்டியின் காலம் மார்ச் 01 முதல் 12 வரை 2026

பள்ளிகளில் அரசு பொதுத்தேர்வு வாழ்த்து

வென்றுயர வாழ்த்து...

வந்திடுவீர் தேர்வெழுத வாழ்த்துகின்றோம் வென்றுயர,
சொந்தமான பிள்ளைகளே சோர்ந்திடாதீர் - இந்தவெற்றி
தான்தருமே வாழ்வின் தரமுயரப் பல்வகையாய்
வான்போல் உயரும் வழி...!

செண்பக ஜெகதீசன்...

.

ஆண்டு முழுமையும் அல்லும் பகலிலும்
வேண்டிப் படிப்பில்நீ வித்திட்டாய் - மூண்டிடும்
ஆவலால் தேர்வில் அதிகமாய்ப் புள்ளிபெற்றுத்
தாவிடும் இன்பத்தைத் தா !

பாவலர் கோவதன், மலேசியா

.

விடியல் எழுந்து விரைவாய்ப் படித்து
நொடியில் தருவாயே நோகா - படித்தது
வந்ததை முன்னால் வரையவே நீயுமே
நொந்திட வேண்டாம் நலம்.

கு.கதிரேசன்

.



மனவுறுதிக் கொண்டுள்ள மாணாக்கர் நன்றாய்த்
தினந்தோறும் வாசிக்கும் தாகம் - முனைப்புடன்
தீர்க்க நினைவினிலே தீர்க்கமாய்ச் சிந்தித்துப்
பார்க்க வருமே பலன் .

கவிஞர். அ. முத்துசாமி, தாரமங்கலம் .

.

கற்றதெல்லாம் நச்சென்று காட்சிவர தேர்வெழுதிச்
சற்றும் சிரமமின்றிச் சாதிப்பீர் - வற்றா
அறிவுக் கடலில்நீர் ஆற்றலுடன் நீந்தி
குறிக்கோள் அடைவீர் குதித்து.

குளோரிசக்தி, கரூர்.

.

எத்துணையும் இன்றியே எந்நேர மும்படி
பத்தாம் வகுப்பே படிக்கட்டு - புத்தகமே
நன்னெறி வாழ்விற்கும் நாளும் வழிகாட்டி
நின்மதிப்பைக் கூட்டும் நிழல்

ம.பழனிச்சாமி, திருப்பூர்

.

இன்றையக் காலம் இயல்பாகப் போட்டியே
வென்றிடத் தேர்வில் விரும்புக - நன்றாம்
மதிப்பெண் வழங்கும் மனதாய்ப் படிக்க
அதிக முயற்சி அழகு.

பொ. முத்துராக்கு.

.

கற்றவர் போற்றிடவே காசினியில் மாணவரே
பெற்றிடுவீர் தேர்வினிலே புள்ளிகளை ! - பெற்றோர்
மதிப்பெண்ணைக் கண்டு மகிழ்ந்திடுவார் ! மற்றோர்
மதித்திடுவார் மண்ணிலே மாண்பு .

இரா . சம்பந்தன் - யேர்மனி

வருங்கால வாழ்க்கை வளம்பெற வேண்டின்
திருந்தவே கற்றுத் தெளிவாய் - தரத்தினைக்
காட்டுமே தாங்கற்ற கல்வி முதன்மைநிலை
ஊட்டும் உயர்நிலை வாழ்த்து.

ப . முருகன் யோகீஸ்வரர்

.

ஆழ்ந்துப் படித்திடுங்கள் அச்சத்தைப் போக்கிடுங்கள்
சூழ்ந்த கவலைகளைச் சுட்டெரித்து - வீழ்த்திடுங்கள்
பற்றுடன் தேர்வெழுதிப் பாராட்டைப் பெற்றுவிட
நற்றுணையா கட்டுமென் வாழ்த்து!

அ.வள்ளிபாபு , நெய்வேலி.

.

கற்ற கலைகளெல்லாம் கண்ணெதிரே வந்துநிற்கப்
பெற்ற அறிவால் பெருமையுற - முற்றும்
பயமின்றித் தேர்வினைப் பாங்காய் எழுதி
நயமுடன் வெல்க நயந்து!

கீதா அருண்

.

வெல்லும் வழிக்கு வெளிச்சமே கல்விதான்
ஒல்லும் வகையினில் ஓதிடு - நல்லார்வத்
தோடு துணிந்துநீ தூள்கிளப்பு தேர்வினிலே;
நாடுமுனை வெற்றி நயந்து !

எம்.ஆர்.தனசேகரன், மலேசியா.

.

கற்றிடும் கல்வியாற் காலமெல்லாம் நல்வாழ்வே
பற்றுடன் நீயும் படித்திடுவாய் - பொற்புடன்
நல்லறிவால் ஓங்கிடவே ஞானத்தைக் கண்டுணச்
செல்லும் இடத்தில் சிறப்பு

ரூபா அன்ரன்

கல்விமட்டும் கற்றிடக் காலமும் நன்றாகும்
செல்வத்துள் சீர்பெறச் செப்பிடு வித்தையை
வெல்லும் திறனால் விரும்பி எழுதிடுபின்
கல்லினிலும் கால்தடம் காட்டு

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

வேண்டுமந்த வேள்விகள் யாவையும் வென்றிடவும்
பூண்டும் கனவுகள் பூத்திடவும் - யாண்டும்
வேண்டிவேண்டி எய்திடுவீர் வெற்றியாக இந்நாளை
காணும் நிறைகள் மிகுந்து

ந.முகுந்தமாதவன், தருமபுரி

.

நீண்டநாள் கண்ணிரண்டும் நித்திரை காணாமல்
தாண்டிவந்த பிள்ளைகளே; தாய்தந்தை - வேண்டிவிட்டு
ஆண்டிறுதித் தேர்வுகளை அஞ்சாமல் சந்தியுங்கள்
ஈண்டுவரு(ம்) இன்ப(ம்) இனித்து

மலர்மைந்தன், கல்பாக்கம்

.

கற்றதை மீண்டும் கவனத்தில் கொண்டிடு
சற்றும் தளராமல் சந்திப்பாய் - பற்றுடன்
தேர்வை எழுதிடு தேர்ந்து! முயற்சியால்
ஆர்த்திடும் வெற்றியே ஆம்.

ஓசூர் மணிமேகலை

தவம்போல் படித்தால் தவறாது வெற்றி
கவலை விடுத்திடு கண்ணே - கவண்போல்
தலைக்குள் உதிப்பதைத் தாளில் நிரப்பி
மலைக்கும் மனநிலை மாற்று.

இரா.கவிதா, திண்டுக்கல்

நூறுவிதம் மாணவர்தாம் நேற்கும் பரீட்சையிலே
பேறடைய வேண்டுமென வாழ்த்துரைப்போம் – தேறியவர்
பின்னாளில் ஆன்றோர்தம் மன்றிலிலே மாண்புறவே
பண்ணவனின் ஆசிபற்றித் தான்

ஜின்னாஹ் (இலங்கை)

.

தேர்வின் வினாக்கள் தினம்படித்த பாடம்தான்
பார்த்தவுடன் அஞ்சிப் பதறாமல் – நேர்த்தியுடன்
ஆழ்ந்துநெஞ்சில் சிந்தித் தழகாய் எழுதிடுவாய்
வாழ்த்துகின்ற வெற்றி வரும் !

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்

.

கரும்பாய் இனித்திடும் கல்வியை நாளும்
விரும்பிப் படித்திட வெற்றி - பெருகும்;
வருகின்றத் தேர்வை வளமாய் எழுத
அரும்பிடும் வாழ்வில் அறிவு.

பாவலர் க.சண்முக சிதம்பரம்

.

முடிவெது வானாலும் முற்றிலும் கற்று
கடிது பதித்திடு கல்லில் - படிந்த
கருத்தையே பண்பாய்க் கருத்தாகத் தாளில்
வருங்கால முன்கையில் பார்.

சோ. சுந்தரேசுவரி

.

எதிர்வரும் பள்ளி இறுதித்தேர் வுன்றன்
புதிர்வாழ் வினைத்திறக்கும் பூட்டு - அதிகக்
கவனமுடன் அக்கரை காட்டி எழுது
புவனத்தி லுன்பேர் பொறித்து.

தன்ராஜ் பாப்பணன்

கற்றுத் தெளிந்து கவலையற்றுத் தேர்வெழுதி
வெற்றிப் புகழை விரும்பிநீ - பெற்றுயர்க
எண்ணிய வெல்லாம் எளிதாகும் ஏற்றமுடன்
திண்ணமே தேர்ச்சித் திரு.

ரா .சீ .பாலகுமார்,M .A ., சந்தோசபுரம்

.

படபடப்பாய் உள்ளதெனில் பைய நிமிர்ந்து
கடவுளை உள்நோக்கிக் காண்பீர்! - திடமடைவீர்!
நோக்கமுடன் நன்றாக மூச்சுப் பயிற்சிசெய்து
தீர்க்கமுடன் செய்வீரே தேர்வு!

செ.இராசா

.

வெற்றிப் படிக்கட்டில் வேகமாய் ஏறியே
சுற்றுப் பலகண்டீர் சொந்தங்காள் - சற்றின்னும்
போற்றிச் சிலநாட்கள் புத்தகத்தில் ஆழ்ந்திட
நூற்றுக்கே பெற்றிடுவீர் நூறு.

அ. சி. தியாகராசன்.

.

பள்ளிப் படிப்பிற்கு பாடம் படித்திடுவாய்
உள்ளம் மகிழ்ந்து உயிரேநீ - கள்ளமின்றி
தெள்ளத் தெளிவாய் தெரிந்து எழுதிடவே
அள்ளும் மதிப்பெண்கள் அறி.

கவிஞர் க.தங்கவேலு, கிருட்டிணகிரி

.

உறக்கம் தொலைத்துநல் ஊக்கமதைத் தொற்றி
அறமெனக் கல்வி அணிவாய் - புறமும்
மணந்திடப் பெற்ற மதிப்பெண்ணால் பாரில்
பணவைபோல் உச்சம்காண் பாய்

ஜனனி செல்வா

வருடம் முழுதும் வணங்கிப் படித்துப்
பருவம் வரவே பரிட்சைத் - தருமே
வரவாய் உயர்ந்த வகுப்பும் உணர்வாய்!
கரமும் தருவேன் கனிந்து.

பாவலர்மணி வா.சண்முகம்

.

பத்தாம் வகுப்புப் படிக்கும் பொதுத்தேர்வை
வித்தாய் எழுதவுள்ள வெற்றியாக்கும் சொத்தாகும்
மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் வாங்கிடவே
பாணராக வாழ்த்துகிறேன் பா.

மாலதி திரு

.

தேர்வை எழுது திருத்தமாக பின்னாலே
தேர்ச்சி வருமே திறமைக்கு நேர்மையாக
ஊர்மெச்சக் கண்டு உனதினிய பெற்றவரும்
மார்பை உயர்த்த மகிழ்வு.

குயில்.மு.இரசியா பேகம்.

.

சிந்தனையில் மாறாமல் சென்றிடுவீர் வென்றிடலாம்
தந்தோம்நல் வாழ்த்தும் தளராதே! - எந்நாளும்
பெற்றநற் கல்விதான் பேர்பெற வாழ்வினில்
உற்றவழிக் காட்டும் உணர்.

பாவலர்மணி நிறைமதி நீலமேகம். பெண்ணாடம்.

.

கற்பதைத் தெள்ளெனக் கல்மனனம் செய்வதெல்லாம்
சொற்ப கணங்கள்தான் சித்தத்தில் - நிற்கும்நீ
என்றும் புரிதலுடன் ஏடுகொண்டால் வாழ்க்கையின்
அன்னுவயம் உன்வயமே ஊன்று.

வானதி சந்திரசேகரன்



அருமையாய் பாடத்தை ஆற்றலுடன் கற்று
இருளகற்ற நல்லறிவை ஏற்க - வரும்உன்
பெரும்தேர்வில் வெற்றியும் பெற்றுயர வாழ்த்தை
கருமமே கண்ணாகக் கொள்

கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.

.

அறிவினைத் தேடி அறிந்தே உணர்ந்து
நெறியொடு கற்பது நன்று - சிறிதும்
விதிப்பயன் என்றே விலகிடாது நல்ல
மதிப்பெண் பெறுவதும் மாண்பு.

சி. செல்லமுத்து, மேல்மங்கலம்.

.

தூர்க்ஷவாரும் நீர்நிலையே தூய்மையில் ஊறுமே
தேர்ச்சியாகு முன்னிலையில் தேர்வில் - சதமெடு
ஊர்மெச்ச வாழ்த்தே உயரத்தில் நின்றிடு
கார்முகில் கல்வி காண்.

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.



# வெண்பாப் போட்டி (பயணம்) 53



போட்டியின் கால அளவு ஏப்ரல் 01 முதல் 12 வரை 2026

இம்மாதப் போட்டி...

.

வரவிருக்கும் தேர்தலில் வெற்றி பெறப்போகும் கட்சிக்கு....
ஆளுக்கொரு வெண்பா மூலம் மனு எழுதிப் போடலாமா...... சரி....
உங்கள் மனு வெண்பா.... புரட்சி கரமானதாக இருக்கலாம்....

.

அல்லது

.

மாற்றுத்திறனாளிகள், விதவைகள் மற்றும் ஆதரவு அற்றவர்களுக்காக சோகம் கலந்ததாக இருக்கலாம்....

.

அல்லது....

.

காமெடியாகவும் இருக்கலாம்.....

.

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.
காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :- தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது
வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் ஆசிரியர்
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு .

வாசகர்களுக்காக..

# வலிமைமிகு எண்ணங்கள்

( கட்டுரைத் தொகுப்பு )




**தொகுப்பாளர்கள்:**
**தமிழ்நெஞ்சம் அமின்**
**அன்புச்செல்வி சுப்புராஜு**

**பக்கங்கள்: 480.** **விலை: 4X0**

**உங்களுக்காக: ரூ380/- மட்டுமே.**

அஞ்சல் செலவு: உங்களுக்காக நாங்கள்

**வேண்டுவோர் தொடர்பு கொள்க**

**Gpay: 8946082893**




புத்தக வடிவமைப்பு மற்றும் அச்சக வேலைகள்
அனைத்திற்கும் அனுகவும்
குறிப்பிட்ட காலத்தில் கால தாமதமின்றி
குறைந்த கட்டணத்தில் செய்துத் தருகிறோம்